உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-உஅ.] பிரமோதூதஹ ஐப்பசிமீ [பகுதி-கஉ.

Vol. XXVIII. October–November 1930. No. 12.

வெண்பாமாலையாராய்ச்சி.

[மதுரை ஸம்ஸ்க்ருத காலேஜ், ஆசிரியர்

ஸ்ரீமாந். T. N. அப்பனையங்கார் எழுதுவது.]

(சஙுகூ-ம்பக்கத்தொடர்ச்சி.)

[விரிச்சி]

விரிச்சியாவது நற்சொல். இது வாய்ப்புள் எனவும் வழங்கும். புள் - நிமித்தம். "பைந்தொடியார் கூறும் பறவாப்புள்" என்பதும் இது. புள்ளென்றது பறவையின் பெயராய்ப் பின் அப்பறவையா னறியப்படும் நிமித்தத்தை யுணர்த்தி, அதன் பின்னர்ப் பொதுவகையாக நிமித்தங்க ளெல்லாவற்றிற்கும் பெயராயிற்று. இத்தன்மையால் இது சகுனம் என்னுஞ் சொல்லோடு ஒப்பிடத்தக்கது.

நற்சொல்லை ஆய்ந்து சொல்வோனாகிய நிமித்திகன் விரிச்சிகன் எனப்படுவன். இதனையே "விரிச்சிகன் - கணி; காரணப்பெயர்" என்று நச்சினார்க்கினியர் சிந்தாமணி யுரையில் எழுதினர். "புள்வாய்ப் பச்சொன்ன புலவர்' என்றும் இவரையே கூறுப. இங்ஙனமன்றி விரிச்சியென்பது 'ப்ருச்சகன்' என்ற வடசொல்லின் திரிபுபோலும் எனக் கருதினாரும் உளர். இது நிற்க.

ஈண்டு விரிச்சி யென்னுங் குறியீடு வெட்சியார் விரிச்சியோர்தலை விளக்கிநின்றது. விரிச்சியோர்தல், நற்சொல் ஆய்தல் அல்லது வாய்ப்புள் கேட்டல் எனப்படும். நிரைகொள்ளற்கு எழும் வீரர் தாம் குறித்த பொருளின் பயன் அறிதற்கு முன்னதாக இதனை விரும்புவரென்க.

இங்ஙனம் விரிச்சிகேட்போர், தாம் நிரைகோடற்கு எழுந்துவிட்ட பாக்கத்துக்கண் இராக்காலத்தே கடவுளை நினைந்து கைகூப்பி நின்று அதனைக் கேட்பரென்று இத்துறையின் வரலாற்றினால் அறியக்கிடக்கிறது. "எழுவணிசீறா ரிருண்மாலை முன்றிற் குழுவினங் கைகூப்பி நிற்ப" என்பது காண்க. இஃதன்றியும் மன்றின்கண் மலரும் நெல்லும் முதலியனதூவி மறியாட்டைப் பலியிடுதலும் இவ் விரிச்சிக்கு முன்னதாக நிகழும் செய்தியென்று தெரிகின்றது.

இது பாக்கத்துக் கேட்கப்படுதல்பற்றித் தொல்காப்பியம் இதனைப் பாக்கத்துவிரிச்சியென விசேடித்தது. பாக்கம் - சீறூர். அவ்விடத்து வீரர் நிற்கையில் அவர் வென்றிக் கறிகுறியான ஏதேனும் ஒரு நற்சொல் எழுமாயின் அதனைத் துணையாகப் பற்றி வினைமேற் செல்வரென்க. இவ்வாறு விரிச்சி யோர்க்கும் வழக்கினை,

"அருங்கடிமூதூர்மருங்கிற்போகி
யாழிசையினவண்டார்ப்பநெல்லொடு
நாழிகொண்டநறுவீமுல்லை
யரும்பவிழலரிதூஉய்க்கைதொழுது
பெருமுதுபெண்டிர்விரிச்சிநிற்பச்
சிறுதாம்புதொடுத்தபசலைக்கன்றி
னுறுதுயரலமரநோக்கியாய்மக
ணடுங்குசுவலசைத்தகையள்கைய
கொடுங்கோற்கோவலர்பின்னின்றுய்த்தர
வின்னேவருகுவர்தாயரென்போ
ணன்னர்நன்மொழிகேட்டனமதனா
னல்லநல்லோர்வாய்ப்புட்டெவ்வர்
முனைகவர்ந்துகொண்டதிறையர்வினைமுடித்து
வருதறலைவர்வாய்வது"

என்னும் முல்லைப்பாட்டானும் அறியலாம்.

இனி, இவ் விரிச்சியென்னுந் துறையும் தனக்குக் காரணமாய பிற நிகழ்ச்சிகளைத் தன்பால் அடக்கிநிற்றலின் மற்றும் பலதுறைகளாகப் பரந்துபட விரிந்துதோன்றும். அவை:— பாக்கத்துச் சென்றுழி இருப்பு வகுத்தலும், பண்டத்தொடு வல்சியேற்றிச் சென்றோரை விடுத்தலும், விரிச்சிவெண்டா வென விலக்கிய வீரக்குறிப்பும், விரிச்சிக்கு வேண்டும் நெல்லும் மலரும் முதலாயின தருதலும், பிற நிமித்தப்பகுதிகளும் முதலாயின.

உதாரணம்:—

“ நாளும்புள்ளுங்கேளாவூக்கமொ
டெங்கோனேயினனுதலின்யாமத்துச்
செங்கால்வெட்சியுந்தினைபுந்தூஉய்
மறிக்குரற்குருதிமன்றுதுகளவிப்ப
விரிச்சியோர்தல்வேண்டா
எயிற்புறந்தருதும்பகைப்புலநிரையே ”

இது விரிச்சி விலக்கிய வீரக்குறிப்பு. பிறவும் வந்துழிக் காண்க. இது நச்சினார்க்கினியத்துக் கண்டது.

இவ்வுதாரணச் செய்யுளில் ‘எங்கோனேயினனுதலின்’ என்றதனால் இது வேத்தியலென்பது பெறப்படும். இங்ஙனம் வேந்தனேவலாற் போந்தாரும் விரிச்சியோர்தல் மரபெனக் கொள்க. அவ்வாறாயின், அரசனாணையாற் றவிராது வினைமேற் செல்லவேண்டுவார் விரிச்சிபெற்றுச் செல்வேமென்று தாழ்த்தல் குற்றமாகாதோ என்னில்; ஆகாது. என்னை? இதனால் அவர் முயற்சிக்கட் பின்னிட்டார் என்பதன்றி இன்னதொன்று வினைவாய்க்குமென அறிந்து கடைப்பிடித்த அவாது வினைத்திட்பமே விளங்கி நிற்றலின் என்பது.

அற்றேல் மேற்காட்டிய செய்யுளில் ‘விரிச்சி யோர்தல் வேண்டா’ என அதனை விலக்கியது எவ்வாறு பொருந்துமெனின், அது அங்ஙனம் விலக்குதற்கமைந்த வெட்சி மறவரது தறுகண்மையைப் புனைந்துரைவகையான் மிகுத்துக்காட்டியதன்றிப் பிறிதன்று. அங்ஙனமாயின், வீரத்தை மிகுவிக்க அவர் விரிச்சிவிலக்கியதாகக் கூறுதல் அமையும்; அதனால் அவரிடம் வினைத் திட்பம் இல்லையாய் முடியாதோ என்னில் : ‘எயிற்புறந்தருதும் பகைப்புல நிரையே’ என்ற கடைப்பிடி

அவாது வினையாடற் றிறத்தினைப் பிறிதோராற்றான் நன்குவெளியிட்ட தென்க.

இனி 'எங்கோனேயினனாகலின்........விரிச்சியோர்தல் வேண்டா' எனக் காரணகாரியப் பொருள்தோன்றக் கூறினமையின், மன்னுறு தொழிற்கண் விரிச்சிவேண்டா என்பது பெறப்படுமாலோ எனின்; அற்றன்று, 'எங்கோனேயினனாகலின்' என்பது 'எயிற்புறந்தருதும் பகைப்புலநிரையே' என அவாது உலைவில்லாத ஊக்கமுடைமைக்குக் காரணமாவதன்றி விரிச்சிவேண்டாமைக்குக் காரணமாகாதெனவறிக. எங்கோ னேவிய காரணத்தால் வென்றிபெறுதல் ஒருதலை; அதற்கு விரிச்சியோர்தல் வேண்டா என்பது கருத்து. இங்ஙனம் வீராது தறுகண்மையோடு வேந்தாது ஏவுதலும் உடன் சேர்வதை "மண்டுமெரி யுண்மாந்தடிந்திட்டற்றாக" இந்நூலாசிரியர் உவமித்ததுங் காண்க.

[செலவு]

செலவென்னுந் துறை வெட்சியார் விரிச்சியோர்ந்த பாக்கத்தி னின்று மீண்டுபோய்ப் பற்றார்புலத்து ஒற்றர் உணராமற் பிற்றை ஞான்று சேறலைக் கூறுவது என்பர் நச்சினார்க்கினியர். இதுவும் இராக்காலத்தே நிகழ்வதாம். ஒற்றருணராமற் சேறல் என்னுங் கருத் தானே தொல்காப்பியர் இதனைப் "புடைகெடப் போகிய செலவு" என விசேடித்தார். புடை—பக்கம். 'பக்கங்கெடுதலாவது மாற்றரசர் பக்கத் தாராகித் தம்மாட்டு ஒற்றாடு நிற்பார் அறியாமற்போதல்; பக்கத்தி லுள்ளாரைப் பக்கமென்றார் ஆகுபெயரான்' என்பது இளம்பூரணருரை. இத்துணையும் இவ்வெண்பாமாலை வெளிப்படக் கூறிற்றில்லை. ஆயினும் பிறநூன்முடிந்ததாகலின் ஈண்டுக் கொள்ளத் தகும். நிற்க, இச் செலவிற் குறுப்பாய்த் தொடர்புடைய பிறநிகழ்ச்சிகளும் இத்துறையின் பகுதிகளாக ஆராய்ந்து அடக்கற்பாலன.

இனி இதன் வாலாற்றினுள்* 'கூற்றினத்தன்னார்' என்றது, கூற்று உயிர்கவர்வான் செல்லுழிப் பக்கத்திலுள்ளார் அறியாமைச் செல்லுமாறு

---

* கூற்றினத் தன்னார் கொடுவில் விடலைநேர்ந்திப்
பாற்றினம் பின்படா முன்படர்ந்—தேற்றின
நின்ற நிலைகருதி யேகினார் நீள்கழைய
குன்றங் கொடுவில் லவர்.

போல வெட்சியார் நிரைகவரும்பொருட்டுப் பகைப்பக்கத்தார் அயிரா வகை சென்றார் என்னுங் குறிப்புணர்த்தியவாறு. அன்றியும், கூற்று வன் கொண்ட வுயிர் மீடல் ஒருஞான்று மில்லாதாற்போல வெட்சியார் கொண்ட நிரையும் பிறரால் மீட்டல் இயலாதென்பதாம். "மருந்தில் கூற்றம்" என்றும் "மாற்றருங்கூற்றம்" என்றுமன்றே பிறுண்டுஞ் சொல்லப்பெறுவது? மற்றும் இவ்வாசிரியரே காந்தைத் திணைக்கண் "ஆருயிரைக் கூற்றம் விழுங்கியபின் வீடுகொண்டற்றால்" என அதனைச் சிறப்பித்தமை நோக்கிக் கொள்க. இவையன்றி, கூற்று ஒன்றே; இவர் அஃது இனங்கொண்டாலனைய பலர் என்பது சிறப்பு. ஒரொரு வர்தானே கூற்றிற்கொப்பாவர் என்று கருத்து.

'கொடுவில் இடனேந்தி' என்றது நாணேறிட்டு அம்புதொடுத்தற் கமைவுடையதாகிக் கொடுமை பூண்டவில்லை இடப்பக்கத்தே தாங்கி என்றவாறு. இதனால் வெட்சியார் தம் செலவைப் பகைவர் தடைப் படுப்பதாயின் எந்நிலைக்கண்ணும் அவர்மீது போர்தொடங்கற்குச் சமை வுற்றிருந்தனர் என்பதாம். அன்றியும், கூற்றினம் வில்லேந்திச்செல் லுதலின்று; இவர் அதுவும் உடையர் என அதனோடு இவரிடை மிகுதி காட்டியதூஉம் ஆம்.

'பாற்றினம்பின்படர' என்றது அவர் விரைந்துசேறற்குறிப் புணர்த்தியவாறு. தமக்குநிறைந்த இரையகப்படு மென்னுந் துணி வால் பறவைகள் அவரைப் பின்தொடர்ந்தன என்றலும் ஒன்று.

'முன்புஅடர்ந்து' என்றது இயல்பானே அவர்கட்கமைந்த வலி இதுபொழுது வினைவாய்த்ததென்று முன்னையினும் பன்மடங்கு அதி கரித்ததென்றவாறு.

'ஏற்றினம் நின்றநிலைகருதி' என்றது இடையே சில பராக்கிரமஞ் செய்யிற் காரியக்கேடாமென அது செய்யாமல், ஆகோளொன்றே குறிக்கோளாக வெட்சியார் காந்துசேறலைக் கருதினர் என்றவாறு. பகைப்புலத்தாருணரின் தமக்கு அழிவுநேருமென்று அவர் அஞ்சின ரல்லர்; மாற்றார் தம் ஆநிரைகொண் டொளிப்பாராயின் காரியக்கேடு நேருமே என அஞ்சினரென்க.

'கொடுவில்லவர் குன்றம் ஏகினர்' என்றது கரந்தைமறவரது காப்பு மிகுதி யுணர்த்தியவாறு. அவரும் எஞ்ஞான்று ஏதம்வருங் கொல்லோவென எதிர்பார்த்தவண்ணம் நாணேறிட்டவில்லோடு காவலிற் கண்ணுயிருந்தனர் என்பதாம். ஆயினும் என்? அவரும் உணராமே வெட்சியார் ஆண்டுச்சென்றெய்தினர் என்பது வியப்பு.

'நீள் கழைய குன்றம்' என்றது வெட்சியாரது செலவிற்கு ஆண்டு இடையூறுகின்ற வற்றுக் கெல்லாம் உபலக்கணம். நெடிதாய் வளர்ந்து இயற்கையினமைந்த மூங்கிலாலாய முள்வேலியாதிய பேரிடர்களையும் அவர் பொருட்படுத்திலர் என்பதாம். பிறவு மன்ன.

"பிறர்புலமென்னார்தாம்தம்புலமென்னார்
விறல்வெய்யோராயிருட்கட்சென்றூர்—நிரையுங்
கடாஅஞ்செருக்கும்கடுங்களியானைப்
படாஅமுகம்படுத்தாங்கு"

என்பது இத் துறைக்கு நச்சினர்க்கினியர் காட்டிய பாட்டு.

[வேய்]

இனி மேற்கூறியாங்கு வேற்றுப்புலமெய்திய வெட்சிவீரர் அங்குப் பகைப்பக்கத்தாருணராவாறு ஒற்றாராய்ந்த வகையைச் சொல்லுவது வேயென்னுந் துறையாம். இதனைப் "புடைகெட வொற்றினாகிய வேய்" என்றது தொல்காப்பியம். ஆண்டு வேய் என்பதற்கு ஒற்றுச்சொல் லாகிய குறளை எனப் பொருளுரைக்கப்பட்டது. 'வேவுகாரர்' என்னும் வழக்கில் வேவு என்னுஞ் சொல்லும் இதனோ டியைபுடையதாகக் கருதத்தகும்.

ஒற்றியறிதற்குரிய பொருள்களாவன பசுநின்ற இடமும், பசுவி னது அளவும், பசுவைப்புறங்காத்துநின்ற படையினளவும் என்று இத்தொடக்கத்தன. இவ் வேயறிதலும் இரவின்கண்ணே நிகழ்த்துதற்

குரித் தென்பதை "சென்றறிந்து நள்ளிருட் கண் வந்தார் நமர்" என இந்நூல் கூறுதலால் அறியலாம். இதனுள் நமர் என்ற பன்மையான் ஒற்றராய்ச்சென்ருர் பலர் என்பது பெறப்படும். ஒருவரை யொருவ ரறியாத இருவரேனும், மூவரேனும் சென்று கண்டுவந்து கூறுவன ஒக்குமாயின் அஃது உண்மையுடைத் தென்று கொள்ளுவரென்க. "ஒருவ ரொருவ ருணராமற் சென்ருங் கிருவரு மொப்ப விசைந்தார்" என்னும் நச்சினுர்க்கினிய மேற்கோள் இதனை வலியுறுத்தும். மற்றும் ஒற்ற ரின் இலக்கண முதலாயவற்றைத் திருக்குறள் ஒற்ருடல் என்னு மதி காரத்துக் கண்டுகொள்க.

இனி, இவ்வேய் என்னுந் துறையும் தனக்குக் காரணமாய பிற வற்ருல் மற்றும் பலவாய் விரிந்து தோன்றும். அவை யாவும் ஈண்டு உய்த்துணர்தலாற் கொள்ளப்படும். வேய்கூறினுர்க்குச் சிறப்புச்செய் தலும் அவற்றினுள் ஒன்ருய் அடங்கற்பாலது. ஆயினும் இவ் வெண் பாமாலை 'புலனறிசிறப்பு' என்னும் பெயரால் அதனைத் தனித்துறை யாக வகுத்துரைக்கின்றது.

இங்ஙனம் மேல்வருந் துறைகளும் ஒன்று பலவாய் விரிதலை, சான் ருேர் செய்யுளில் வழக்குநோக்கி வந்துழிக்காண்க. ஒருதுறை பல வாதல் அகத்திணைக்கே மிகுதியும் உண்டென்றும், புறத்திணைக்கண் சிறுவரவிற்றென்றும், ஆசிரியர் தொல்காப்பியரும் அதுபற்றியே "பாடல் சான்ற புலனெறிவழக்கம்" (53) என அகத்திணை யியலிற் கூறினரென்றும் நச்சினுர்க்கினியர் விளங்க வுரைத்தார், (தொல். புற. 3 உரை). இது நிற்க.

[புறத்திறை]

வெட்சிவீரர் பகைவரது நிலையினை ஆராய்ந்த பின்னர், அவரது ஊரின் அரணிடத்துள்ள சிறுவாயில் பெருவாயில்களாகிய எவற்றி னும் ஒருவரும் புறப்படாவாறு வளைந்து ஊர்மருங்கே இறுத்ததைக்

கூறுவது புறத்திறை என்று பெயர்பெறும். இங்ஙனம் மேலதனோடு இஃதியைப் புடைத்தாதல் "வேய்ப்புறம் முற்றினுகிய புறத்திறை" என்னுந் தொல்காப்பியத்தான் விளங்கும். புறத்திறை யென்பதில் புறம் - ஊர்ப்புறம்; இறை - இறுத்தல்: தங்குதல் அல்லது விடுதல் என்பதும் அப்பொருட்டு. புறத்திறை யென்பதற்கு 'நிரைப்புறத்து ஒடுங்கிய இருக்கை' எனப் பொருளுரைத்தார் நச்சினர்க்கினியர் "ஒற் றினுனைய்ந்தாய்ந் துறுவலியோராணம், சுற்றினர் போகாமற் சூழ்ந்து" என ஊரினது அரண்புறத்தைச் சுற்றியிருந்ததாக இந்நூல் கூறிற்று.

[ஊர்கொலை]

இனி, அவ்வாறு சூழப்பட்ட ஊரின் அரணையழித்தல் ஊர் கொலை யெனப்படும். இத் தொடர்புபற்றி இது தொல்காப்பியத்து "முற்றிய ஊர் கொலை" என அடை புணர்க்கப்பெற்றது. விரைவாகப் பரிகடவி எரிகொளுவுதல் முதலிய வீரச்செயல்களான் வெட்சியார் பகைவரா ணினை அழித்திடுவர் என்ப. அங்ஙன மழிக்குங்கால் ஆண்டுப் புறஞ் சேரியிடத்து நிரைகாவலரைக் கோறலும் நேரும்.

என்னை? அரசன் அறத்தாறு நிகழ்த்தும் மறத்துறைகளினிடையே ஊர்கொலை கூறுதல் குற்றமாகாதோ என்னில், ஆகாது. "அகநாட் டின்றிப் புறஞ்சிறைப்பாடியில் ஆநிரை காக்குங் காவலரைக் கொன்றே நிரை கொள்ளவேண்டுதலின் ஊர் கொலையுங் கூறினர்" என நச்சினர்க் கினியர் உரைத்தனர். ஆகலின் இத்துறையும் இத்திணைக்கு இன்றி யமையாததென்க. இதன் வரலாற்றினுள், "கொலைவிலார் வீழ" என் றும், "கொலை விலார்" என்றுங் கூறியவாற்றால் அங்குக் கொலை நிகழ்ந் தமை தெளிவாயிற்று. பிறவுமன்ன.

[தொடரும்.]

ஸ்ரீ:

இனவெழுத்தாராய்ச்சி.

நன்னூலுள்,

"ஐஔஇ உச்செறிய முதலெழுத்
திவ்விரண்டோரினமாய்வரன் முறையே"

"தானமுயற்சியளவுபொருள்வடி
வானவொன்றாதியோர்புடையொப்பினமே"

என்னும் இச்சூத்திரங்கள் எழுத்தியலுள் பெயர்ச்சூத்திரங்களையடுத்து முறைச்சூத்திரத்துக்கு முன்வைக்கப்பட்டுள்ளன. இச்சூத்திரங்களையும் இவற்றின் உரைகளையும் படித்துவரும்பொழுது எனக்குத் தோன்றிய சிலசந்தேகங்களை ஆசிரியரிடம்வினவ, அதன்பயனாக யான் அறிந்த சிலவற்றை ஈண்டுவெளியிடுகின்றேன். இவற்றிலுள்ள குற்றங்களை, கற்றறிந்தபெரியோர்கள் பொறுத்தருளுமாறுவேண்டுகின்றேன்.

அச்சூத்திரங்களுள், "ஐஔ இஉச்செறிய". என்னும் சூத்திரத்திற்கு மயிலைநாதருரையில் உரைமுகப்பில், "என்னுதலிற்றோவெனின் நிறுத்தமுறையானே முறையாமாறுணர்த்துவானெடுத்துக்கொண்டு, அவற்றுள் இச்சூத்திரம் முதலெழுத்துக்களை இனமடைத்தல் நுதலிற்று" என, நுதலியபொருள் உரைக்கப்பட்டது.

சங்கரநமச்சிவாயருரையிலும் "இனமடைத்தல்நுதலிற்று" என எழுதப்பெற்றுள்ளது. இவற்றின்கருத்தாவது:—"எண்பெயர் முறை பிறப்பு" என நிறுத்த முதற்சூத்திரத்தில், பெயரை அடுத்து முறையை அன்றி, இனம் என ஒன்று கூறப்படாமையானும், இதன்முற்சூத்திரங்கள்முடிய, பெயர்கூறப்பட்டமையானும், இச்சூத்திரந்தொடங்கி மூன்று சூத்திரங்களால் முறையுணர்த்தவேண்டி, இச்சூத்திரம் 'சிறப்பினு மினத்தினும் என்ற முறைச்சூத்திரத்திலுள்ள 'இனம்' என்பதைவிளக்க வேண்டி, 'முன்மொழிந்துகோடல்' என்னும் உத்திபற்றி, முதலில் உணர்த்துகிறது;" என்பதுபோலும்.

ஈண்டு 'இனம்' என்னும் சொல்லானேயே ஒருநிகரானபலவற்றின் கூட்டம் என்பது யாவர்க்கும் எளிது விளங்குதலால் அதற்கு ஓர் சூத்திரம் வேண்டாது முடியும். அங்ஙனமன்றிக் கூறவேண்டினும் மயங்காமைப்பொருட்டு முறைச் சூத்திரத்தின் பின்னர்க் கூறுதல் சாலப்பொருத்தமுடைத்தாகும். அன்றியும் இச்சூத்திரம் இனச் சொற் பொருளுணர்த்திற்றாயின் இதனை அடுத்த 'தானமுயற்சி' என்ற சூத்திரமும் இனச்சொற்பொருளுணர்த்தல்வேண்டும். அவ்வாறு அச் சூத்திரத்திற்கு ஒருரைகாரரும் பொருள்கொள்ளவில்லை. ஆகையால் இச்சூத்திரம் முறையுணர்த்தும் சூத்திரத்திலுள்ள இனம் என்ற சொல் லின் பொருளுணர்த்தற்கெழுந்ததில்லையென்றே கொள்ளத்தகும்.

அங்ஙனமாயின் என்னுதலிற்றோவெனின் முதற்சூத்திரங்கள் போலவே இச்சூத்திரமும் 'இனம்' என்னும் பெயரை உணர்த்துகிறது என்பதாம். 'இனம்' என்பது எழுத்துக்களின் பெயராமாறு என்னை எனின், பின்னர் விதிச் சூத்திரங்களில், 'அவற்றவற்றினக்குறில்,' என்றும், 'ஞநமுன்றம் மினம்' என்றும் 'ணனமுன்னினம்' என்றும், பிறவும் பல விடங்களிற் செய்கைக்கு உபகாரமாக எடுத்தாளப்படுதலால் இனம் என்பதும் குறித்தசிற்சில எழுத்துக்களுக்கு ஓரோர் நிமித்தம் பற்றி இட்டதொருசங்கேதப் பெயரேயாம். என்னை ? சங்கேதப் பெயர்க ளெல்லாம் செய்கைச்சூத்திரங்களில் எடுத்தாளும்பொருட்டே இடப் படுகின்றன. ஆதலால் இச்சூத்திரம் எழுத்துக்களுக்கு முற்சூத்திரங் களிற் கூறப்பட்டுள்ள 'வினு' 'சுட்டு' 'வலி' 'மெலி' என்றபெயர்க ளோடொப்ப 'இனம்' என்ற ஒரு பெயரையுணர்த்திற்று என்று கோடலே பொருத்தமுடைத்தாகும்

வடநூலாரும் இனவெழுத்துக்களை 'ஸவர்ணஸம்ஜ்ஞகா:' எனப் பெயராலேயேவழங்குவர். இவற்றையெல்லாங்கருதியே ஆசிரியர்சிவஞான முனிவர் இச்சூத்திரத்திற்கு சங்கரநமச்சிவாயருரைத்தவாறுரையாமல் முற்சூத்திரங்களோடொப்ப 'பெயருணர்த்திற்று' என்னும்பொருள்பட 'இதுவுமது' எனப்புறவுரை உரைத்துப்போந்தார்.

ஆதலால் "ஐஔஇஉச்செறிய" என்ற இச்சூத்திரம் முறை யுணர்த்துதற்கு உபகாரமாக முதலெழுத்துக்களை இனமடைத்தற்கு எழுந்ததில்லை என்றும், ஒவ்வோரு நிமித்தம்பற்றி, எழுத்துக்களைச்

செய்கைக்கண்எடுத்தாளுதற்பொருட்டு, உயிர், மெய், வினா, சுட்டு, எனப்பெயரிட்டிருப்பதுபோல முதலெழுத்திவ்விரண்டு 'ஓரினம்' என இப்பெயரிடுதற்கு எழுந்ததென்றும் கொள்ளத்தகும்.

இனி இதனை அடுத்த "தானமுயற்சி" என்ற சூத்திரத்தின் பொருளை ஆராய்வோம். இச்சூத்திரத்திற்கு உரையாசிரியர்களனைவரும் "மேல்இனமென்றதற்குக்காரணமுணர்த்திற்று" எனப்புறவுரைவரைந்து போந்தனர். ஈண்டு 'மேல்இனம்' என்று அவர் கூறுவது மூற்சூத்திரத் திற்கூறப்பட்ட, 'அ,ஆ' முதலிய இவ்விரண்டோரினமாம் இனவெழுத் துக்களையே. மயிலைநாதர் இதனைவிளங்கக்கூறினர். அவர்கருத்து:— சென்றசூத்திரம் இனவெழுத்துக்களிவையென்றது; இச்சூத்திரமும் அதனையேயுணர்த்திற்றென்று பொருள்கொள்ளின் கூறியது கூறலா கும்; அக்குற்றம் வாராமைப்பொருட்டு, இச்சூத்திரம் சென்றசூத்தி ரத்தாற் கூறப்பட்ட எழுத்துக்கள் இவ்விரண்டு ஓரினமாதற்குக் காரண முணர்த்திற்று என்று கொள்ளல் வேண்டும் என்பதாம்.

அங்ஙனமாயின் இனமாதற்குக் காரணமுணர்த்திய ஆசிரியர் வரும் சூத்திரத்தால் சிறப்பினுமினத்தினும் என முறைகூறியவர் அம் முறைக்கும் சிவஞானமுனிவர் கூறியதுபோல விளங்கக் காரணம் கூற வேண்டும். அங்ஙனங் கூறாமை குன்றக்கூறலாம்.

முறைக்குக் காரணங்கூறுதலாற் பெரும்பயனின்மையின் உய்த் துணரவைத்தார் எனின், அவ்வாறே இனமாதற்கும் காரணமுணர்த் தாது இனம் இன்னதெனக்கூறி ஒழிதலே அமையும். அன்றியும் குறி யீடுசெய்துகொண்ட பெயர்களுக்குத் தனித்தனி காரணங்கூறும் வழக் கம் இலக்கணநூல்களுள் யாண்டும் காண்கிலம்.

இன்னும் இச்சூத்திரம் இவ்விரண்டோரினமாதற்கு நிமித்தம் கூறியதாகலின், 'ஆனஒன்றுதி' எனக்கூறிய ஆதிசப்தப்பிரயோகமும் தானமுதலியவற்றை உடனெண்ணியதும் வீணாகும். ஏனெனில், இவ் விரண்டோரினமாதற்கு முயற்சி ஒன்றே அமையுமாதலால் "முயற்சியா னொப்புமை யுடையன இனமே" எனச்சூத்திரம் எளிதிற்கூறவமையும். அங்ஙனம் ஆசிரியர் சுருங்கக்கூறாமையான் அவர்க்குக் காரணம் கூறுத விற் கருத்தில்லையென்பது தெளிவாயிற்று.

இனி உரையாசிரியருள் விருத்தியுடையார், "இவற்றுள் ஒன்றும் பலவும் ஒத்து இனமாய்வருதல் கண்டுகொள்க" என்று உரைமாத்திரம் கூறினர்; அதனை உதாரணங்காட்டி விளக்கிற்றிலர். சங்கரநமச்சிவாய ருரையும் அப்படியேயுள்ளது. நாவலருரையில், அ, ஆ; இ, ஈ; உ, ஊ; எ,ஏ; ஐ,இ;..........................ற,ன. என உதாரணமட்டுங் காட்டினர்; காரணமொன்றுங் காட்டிலர்.

சடகோபராமாநுஜர் முதலெழுத்துக்கள் இவ்விரண்டு ஓரின மாதற்குமட்டும் உதாரணம்காட்டி, அவற்றுட் சிலபொருளால் ஒப்பன என்றும், சிலவரிவடிவால் ஒக்கும் என்றும் காட்டிவிட்டு, தானத்தாலும் முயற்சியாலும் ஒப்பன உயிரினமென்றும், முயற்சியாலும் அளவாலும் ஒப்பன இடையினமொழிந்தமெய்கள் என்றும் கூறினர். இதனால் அவர், இவ்விரண்டு ஓரினமாய்வரும் அவற்றையும், இரண்டிறந்த பல கூடி ஓரினமாய்வரும் அவற்றையும் இனப்பெயர்ப்பொருளாகக்கருதினர் என்பது தெளிவாம்.

மயிலைநாதருரையில் முதலெழுத்து இவ்விரண்டுஓரினமாக வருதற்கே உதாரணங்காட்டி, காரணமும் கூறினர்; அவர்கூறுமாறு — 'அ ஆக்கள் இடத்தாலும், முயற்சியாலும், அருயிரம் ஆருயிரம் என்னும் பொருளாலும், வடிவாலும் ஒத்துஇனமாயின' என்றற் றொடக்கத்தன.

இவற்றுள் அஆக்கள் இரண்டின் அளவில் தானத்தால் ஒப்புமை அமையாது. ஏனெனில் அவற்றிற்குத்தானம் மிடறு ஆதலால், 'ஆவி யிடைமையிடமிடறாகும், என அம்மிடற்றிற்பிறக்கும் எழுத்துக்கள் இரண்டிறந்தபலவாம்; ஆகவே அப்பலவும் ஓரினமாதற்கு அத்தானம் நிமித்தமாவதன்றி அ ஆ இரண்டுமட்டும் ஓரினமாதற்கு நிமித்தமாக மாட்டாது.

ஏனெனில், இனமாதற்குக்காரணமேனும் இலக்கணமேனும் எவ்வெவ் வெழுத்துக்களுக்கெல்லாம் ஒத்திருக்குமோ அவ்வவ்வெழுத்துக்களெல் லாம் ஓரினமென்றேகொள்ளல்வேண்டும். அவ்வாறுகொள்ளாக்கால் அத் தானம் எழுத்துக்கள் ஓரினமாதற்குக்காரணமும் ஆகாது; இலக்கண மும் ஆகாது; வீணாகும். ஆகவே அதனை உடனெண்ணியதாற் பய

னில்லை. அது பயனுடையதாகவேண்டின், 'தானமுயற்சி' என்ற சூத்திரம் இவ்விரண்டோரினமாதற்குக் காரணங்கூறியதன்றென்றும் வேறொருவகையில் இரண்டிறந்த பலவெழுத்துக்கள் ஓரினமாதலையுணர்த்துகிறதென்றும் கொள்ளல்வேண்டும்.

அன்றியும் உரைகாரர் கருத்தின்படி (முதலெழுத்திவ்விரண்டோரினமாய் வரன்முறையே) என்றதனல் இரண்டிரண்டெழுத்துக்களுக்கு மட்டும் இனப்பெயர் கூறினமையானும், "தானமுயற்சி" என்ற சூத்திரம் அவையினமாதற்கே காரணங்கூறினமையானும், இரண்டிறந்த பலவெழுத்துக்கள் இனமிலவாதல்வேண்டும்; அங்ஙனமாயின், வல்லினம் மெல்லினம், முதலியவற்றிற்கு இனப்பெயரில்லையாதல்வேண்டும். அவற்றை ஆசிரியர் இனம் எனப் பலவிடத்து வழங்கியதும் இலக்கணமினறுதல்வேண்டும். 'வல்லினங் கசடதபறவெனவாறே' என்றஇவை முதலிய சூத்திரங்களில் உடம்பொடு புணர்த்தலால் அவற்றிற்கு இனப்பெயருண்டெனின், உயிர், மெய், உயிர்மெய், குறில், நெடில் இவற்றிற்கு ஒருவாற்றானும், இனப்பெயருண்மை பெறப்படாது. உயிர் மெய், முதலியவற்றிற்கு இனப்பெயர் வேண்டாம் எனின், "இ ஈ ஐவழி" என்ற சூத்திரத்தில் 'உயிர்வரின்' என, உயிரை இனமாகவைத்து வழங்கியது இலக்கணமின்றும். இச்சூத்திரத்தில் உயிரினம் என இனமாகவைத்துக்கூறுது உயிர்வரின் என்றதனனே பொருள்நிரம்பும் எனின்; "ஆவியரழ விறுதிமுன்னிலையேவன் முன் வல்லினம் இயல்பொடு விகற்பே" என்ற, சென்ற சூத்திரத்திலிருந்து இனம் என்னும் அதிகாரம் வருதலின் 'உயிர்வரின்' என்றது, உயிரினம்வரின் என்றதாகவே கொள்ளப்படும். இவ்வினமென்னும் அதிகாரம் புணரியல் முழுவதும் பின்வரும் சூத்திரங்களிற் சேறலின் இச்சூத்திரத்துமட்டும் விலக்கவும் முடியாது. மேலும் உரைகாரர்கள் பலவிடங்களிலும் உயிரினம், வன்கணம், நாற்கணம் என இனப்பெயரானும், அதன்பரியாயச் சொல்லானும், வழங்கியுள்ளார்கள். ஆதலால் அவற்றிற்கும் இனப்பெயர் கூறுதது குன்றக்கூறலாகும்.

ஆகையால் இச்சூத்திரம் "முதலெழுத்து இவ்விரண்டு ஓரினமாம்" என்றதற்குக் காரணமுணர்த்திற்று எனக் கருதுதல் ஒருசிறிதும் பொருந்துமாறில்லை.

ஆயின் இச்சூத்திரத்திற்குப் பயன் யாதோவெனின், சென்ற சூத்திரத்தாற்கூறிய ஈரெழுத்து இனமேயுமன்றி, இன்னும் பல பல வெழுத்துக்களுக்கும் இனப்பெயருணர்த்துதலே பயனும்.

அஃதாமாறு:—தானம், முயற்சி, அளவு, பொருள், வடிவு என்னுமிவற்றுள் யாதானும் ஒன்றுலாயினும், பலவற்றுலாயினும் ஒப்புமையுடைய இரண்டிறந்த பல எழுத்துக்கள் ஓரினமாம் எனப் பொருள் கொள்ளவேண்டும். இங்ஙனம் பொருள்கொள்ளின் இச்சூத்திரத்திலுள்ள 'ஒன்றுதி' என்பதும் வீணுகாது; என்னை? தானம் முதலியவற்றுள் யாதானும் ஒன்றுல் ஒப்புமையுடையன இனமாம் எனக் கூறினரோ? தானம் முதலிய பலவும் நிமித்தம் எனக்கூறினரோ? என ஐயப்பாடுண்டாதலேயன்றி, அவற்றுள் சில சில ஓர்புடைபொப்பன இனமாகாவோ வென்றும் ஐயப்பாடுண்டாம்; அவ் ஐயம்நீக்கற்பொருட்டு ஆதி சப்தப் பிரயோகம் வேண்டும். அதனுற்பயன்.—தானத்தாலும் ஒலிவடிவாலும் வல்லெழுத்தாறும் ஓரினமாம். அவற்றுல் மெல்லெழுத்தாறும் ஓரினமாம். பிறவுமன்ன.

இன்னும், இச்சூத்திரத்துச் சொற்கிடக்கையும், 'இனமாதற்குக் காரணம்" என்றேனும்' ஒருபுடை ஒப்புமையால் இனமாம்" என்றேனும் நலிந்து பொருள்கொள்ள வேண்டாது; ஒருபுடை ஒப்பன இனமாம்' என எளிதிற் பொருள்கொள்ளுமாறு அமைந்துள்ளது.

இவ்வாறு பொருள்கொள்ளுதலால் எழுத்துக்கள் உயிர் மெய், உயிர்மெய், குறில், நெடில், வலி, மெலி, இடை, சுட்டு, வினு என்னும் இனப்பெயருடையவாகின்றன. எங்ஙனமெனில் வலி, மெலி என்பன தானத்தாலும் ஒலிவடிவாலும் தனித்தனி இனமாயின. ஒலி வடிவொப்புமையால் உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் ஓரினமும், மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் ஓரினமும், இடையெழுத்துக்கள் ஆறும் ஓரினமும், உயிர் மெய்யெழுத்துக்கள் ஓரினமும், ஆயின.

அளவொப்புமையால் உயிர்க்குற்றெழுத்துக்களோடு உயிர்மெய்க் குற்றெழுத்துக்களு மகப்படக் குறில் என ஓரினமும், அவ்வாறே உயிர் நெட்டெழுத்துக்களோடு உயிர்மெய் நெட்டெழுத்துக்களும் சேர நெடில் என ஓரினமும் ஆயின. பொருள் ஒப்புமையால் சுட்டெழுத்துக்கள் ஓரினமும், வினாவெழுத்துக்கள் ஓரினமும் ஆயின.

இங்ஙனம் வல்லெழுத்து முதலியவற்றிற்கு இனம் என்னும் பெய ரிடுதலாற் பயன் யாது எனின் செய்யுளிலக்கணத்தில் 'வருக்க நெடி லினம் வரையாராண்டே" என மோனை எதுகைகட்குப் பறனடை கூறப் படுகிறது ; ஆண்டு இனம் என்றதனால் இரண்டிறந்த இனவெழுத்துக் கள் கொள்ளப்படுகின்றன. அதனால் வலியும், மெலியும், இடையும் எதுகைக்கண்ணும், குறிலும், நெடிலும், மோனைக்கண்ணும்வரும். அல் லாக்கால் இவற்றிற்கு இனப்பெயரில்லனவாம். ஆகவே இனவெதுகை கட்கும், இன மோனைகட்கும் இலக்கணவிதியில்லாதொழியும்.

ஆதலால் 'தானமுயற்சி..........ஒப்பினமே' என்ற சூத்திரம் இனப்பெயரிடுதற்கு இலக்கண முணர்த்திற்று என்றேகொள்ளவேண்டும். ஆயின் இச்சூத்திரம் 'வல்லினங்கசடதபறவெனவாறே' என்ற சூத்திரத் துக்கு முன்னர்க் கூறவேண்டியதன்றோவெனின் 'பின்னதுநிறுத்தல்' என்னும் உத்தி பற்றி இறுதிக்கட் கூறப்பட்டதென்க.

இச்சூத்திரம் இனப்பெயருணர்த்திற்றாயின், இச்சூத்திரத்துள் 'முயற்சி' என்றதனானே இரண்டிரண்டான முதலெழுத்துக்களுக்கும் இனப்பெயரெய்துமாகலின் இதற்கு முதற்சூத்திரமாகிய 'ஐஔஇஉச் செறிய' என்ற சூத்திரம் நின்று பயனின்றாம் எனின்? அன்று; அச் சூத்திரத்தால் இரண்டிரண்டெழுத்துக்களுக்குமட்டும் சிறப்பாகப் புணர்ச்சி விதிக்குரிய வேறோரினப்பெயர் விதிக்கப்படுகின்றமையின். எனவே இவ்விருசூத்திரங்களாலும் 'இருவேறு இனப்பெயர்கள் விதிக்கப் படுகின்றன' என்பதும், அவ்விருவகை இனப்பெயர்களும் மேல்விதிச் சூத்திரங்களில் ஏற்புழிக்கோடல்பற்றித் தனித்தனி எடுத்தாளப்பட்டுக் கொள்ளப்படுமென்பதும் இனி அறியத்தகும் என்க. இதனை 'வன் மைக்கினமாத்திரினவு முளவே' 'ஞணமுன்னினம்' என்றற்றொடக்கங் களிற் காண்க.

இங்ஙனங்கூறியவாற்ருல் இவ்விரண்டு சூத்திரத்தாலும் இருவேறு இனப்பெயர் விதிக்கப்பட்டனவென்பதும், அவ்விருவகை இனப்பெயர்களும் மேல் விதிச்சூத்திரங்களில் ஏற்புழிக்கோடல் பற்றித் தனித்தனி எடுத்தாளப்படுமென்பதும், பெறப்பட்டன.

இவ்வாறு பெறப்பட்டமையால் 'இசைகெடின்' என்ற அளபெடைச் சூத்திரத்தில், 'அவற்றவற்றினக்குறில்' என்றதில் இனமென்றது இரண்டிரண்டெழுத்துக்கள் ஓரினமாமவற்றையே; இரண்டிறந்த எழுத்துக்கள் ஓரினமாமவற்றை அன்று. ஆகையானன்றே ஐகாரத்தோடு முயற்சி ஒப்புமையுடைமையால் எகரம் இனமாயினும் அது இனக்குறிற் குறியாகவரப்பெருது இகரமேவருமெனவும், ஔகாரத்துக்கு அவ்வாறே ஒகரம் வரப்பெருது உகரமே இனக்குறிலாய் வருமெனவும், கொள்ளப் படுகின்றன.

இவ்வாறு கொள்ளும் பொருட்டாகவே 'ஐஔ இஉச் செறிய' என்ற சூத்திரம் ஆரம்பிக்கப்பட்டது. ஆதலால் அது நின்றுபயனின்மை என்னும் குற்றமுடையதாக மாட்டாதென்க.

'வருக்கநெடிலினம்' என்புழி இனம் என்றசொல்லால் இரண்டிறந்த இனங்களும் கொள்ளப்படும். இவ்வாறன்றி மாறிவரப்பெரு; இலக்கியங்கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்.

அற்றேல் 'வருக்கநெடிலினம்' என்ற சூத்திரம் செய்யுளிலக்கணத்தில் உளதாகலின் எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் சொல்லிய நன்னூலில் அச்செய்யுளிலக்கணத்துக்கு ஏற்ப இனப்பெயர் கூறியது கூடுமோவெனில் கூடும்; என்னை? எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்தும் சேர்ந்தே மொழியிலக்கணம் நிரம்புகின்றமையின். அன்றியும் நன்னூல், ஐந்திலக்கணமும் அறியுமாறு அவற்றையும் சேர்த்தே இயற்றப்பெற்றதொருநூல் என்பது பலர்க்குமொப்ப முடிந்ததொன்ருகலின் அதனுனுங்குற்றமின்ரும்.

செய்யுளிலக்கணத்தையுந்தழுவுவது நன்னூலார்க்கு உடம்பாடாகலினன்றே, தொல்காப்பியர் உயிர்மெய் யெழுத்துத் தனியாகக்கூருதொழியவும், தாம் புதிதாகக்கூறியுள்ளார்.

இன்னும் அவர்தாமே 'அணிபெறச்செய்வனசெய்யுள்' எனவும், 'தூக்கிற்சுட்டுநீளின்' எனவும், 'நைந்தீரொற்றும் செய்யுளுள்ளே' எனவும், பலவிடங்களினும் செய்யுளிலக்கணந்தழுவிச் சூத்திரம் செய்தமையாலும் அவர்க்கு இதுவும் உடம்பாடென அறியலாம்.

அன்றியும் அவரே எழுத்திலக்கணத்துள்ளும் எடுத்தாளுதற் பொருட்டும் இவ்வினக்குறியீடு வேறு செய்துகொண்டனரென்பதும் பின்வருமவற்றாலறியலாம். எங்ஙனமெனின், குறில் நெடில் என்னும் குறியீடுகளை 'அவற்றுள்' என முதலெழுத்துக்களைமட்டும் அதிகரித்துக் கொண்டு 'அஇஉஎஒக்குறிலைந்தே' என எண்ணித்தொகைகொடுத்தும், 'ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில்' என எடுத்தோதி எண்ணியும் பெயர் இட்டுப்போந்தமையால் அவை முறையே உயிர்க்குற்றெழுத்தையும் உயிர்நெட்டெழுத்தையும் உணர்த்துமேயன்றி உயிர்மெய்க்குற்றெழுத்துக்களையும் உயிர்மெய்நெட்டெழுத்துக்களையும் உணர்த்தாவாம்; ஆகவே, 'நெடிலோடாய்தம்' என்றகுற்றுகரச்சூத்திரத்தில் நெடில்என்றதனால் உயிர்நெட்டெழுத்துக்களே கொள்ளப்பட்டு ஏடு, ஓடு போல்வனவே நெடிற்றொடர்க்குற்றுகரவீற்றுமொழிகளாம், காடு, வீடு போல உயிர்மெய்தொடர்ந்தவை நெடிற்றொடர்க்குற்றுகரவீற்றுமொழியாகா. இவ்வாறே 'தனிக்குறின் முன்னொற்றுயிர்வரினிரட்டும்' என்றவிதியும் உயிர்க்குற்றெழுத்தின்முன்னிற்கும் ஒற்றிற்கேயுரியதாய் உயிர்மெய்க்குற்றெழுத்தின்முன்னிற்கும் ஒற்றிற்கு உரியதின்றாம். இன்னோரன்ன இடங்களில் இலக்கியம் சிதையாமைப்பொருட்டு உயிர்க்குற்றெழுத்தோடொப்ப உயிர்மெய்க்குற்றெழுத்தையும் உயிர்நெட்டெழுத்தோடொப்ப உயிர்மெய்நெட்டெழுத்தையும் பொருளாகக்கொள்ளுதற்கு அளவொப்புமையுள்ளன ஓரினமாம், என விதிக்கும் இச்சூத்திரமன்றி வேறுவழியில்லாமையாலும் இச்சூத்திரத்தால் இனக்குறியீடு வேறு செய்து கொள்ளவேண்டுமென்பதொருதலை என்க.

இனி இச்சூத்திரத்திற் சொல்லிய பொருளள வொப்புமையை விளக்கவந்த உரைகாரர்கள் 'பாலன் விருத்தனானாற்போலக் குறிலது விகாரமே நெடிலாகலால் அவ்விரண்டற்கும் பொருள் ஒன்று' என உரையெழுதிப் போந்தார்.

இங்கு அவர் பொருள் எனக்கொள்வது யாது? 'இரண்டற்கும் பொருள் ஒன்று' என்ற வேற்றுமைத் தொடரால் அறியுமிடத்து, அவ்விரண்டற்கும் வேருயிருப்பதொன்று பொருள் என வேண்டுமே; அப்படி அவற்றின் வேருயிருப்பதொன்று காணப்படவில்லை. 'பாலன் விருத்தனுனாபோல' என்ற திருட்டாந்தத்தாலும், 'குறிலினது விகாரமே நெடில்' என்ற தற்கிழமையாலும் அவ்விரண்டற்கும் ஒற்றுமைச் சம்பந்தம் தோன்றுகிறது; அச்சம்பந்தம் சொரூப சம்பந்தமாவதல்லது பொருள் என வழங்கப்படுவதன்று. ஆகவே பாலன் விகாரப்பட்டு விருத்தனுனலும் அப்பாலனது உருவமே நெடிதாயினுற்போல, குறிலின்வடிவமே விகாரப்பட்டு நெடில் வடிவமாம் என்பதே அவர் கருத்து என அறியக்கிடக்கின்றது. ஆதலால் அவர் பொருளால் ஓரினமானவை யல்லவென்றும், அவற்றின் சொரூபமாகிய ஒலிவடிவாலும் ஓரினமாயினவென்றும் கொள்ளத்தகும்

இங்ஙனமின்றி, அவ்வடிவையே பொருள் என்று கொள்ளின் 'தானம் முயற்சி அளவு பொருள் வடிவு' எனப் பொருளின் வேருய் அதனை யடுத்து வடிவும் உடனெண்ணுதற்கு இடனின்றும். ஆகவே 'பாலன் விருத்தனுனற்போலக் குறிலது விகாரமே நெடிலாதலால் அவ்விரண்டற்கும் பொருள் ஒன்று' என்று கொண்டு அஆக்கள் முதலியவற்றைப் பொருளொப்புமையால் இனமாம் என்றல் பொருந்தாதாயிற்று.

அன்றியும் சொல்லின் பொருளால் ஒற்றுமை கொண்டு அருயிரம் ஆருயிரம் என்றற் றொடக்கமாக அவர் காட்டும் உதாரணங்களிலும் அப்பொருளா லொற்றுமை பொருந்துமாறில்லை. என்னை? அருயிரம், ஆருயிரம் என்ற இரண்டு சொற்களும் அவ் வெண்ணுப்பொருளால் ஒப்புமையுடையவாயினும், அச்சொற்களிலுள்ள அ, ஆ என்னும் எழுத்துக்களுக்கு அப்பொருள் சிறிதுமின்மையால் அவை இனமாகமாட்டா.

அன்றியும் அவ்வுரைகாரர் கருதும் பொருளொற்றுமை 'எரி,' 'ஏரி' என்பவற்றில் இன்மையால் எகர ஏகாரங்கள் ஒன்றற்கொன்று இனமிலவாதலும் வேண்டும். அன்றியும், தீ என்னும் பொருளில் வழங்கும் 'அரி,' எரி' என்னும் சொற்களுக்கு அவர் கருதியவாறு பொருளொற்றுமையுடைமையால் அச்சொற்களிலுள்ள அகர எகரங்க

ளிரண்டும் ஒன்றற்கொன்று இனமாதலும் வேண்டும். இன்னும் இத்தகைய பொருளொற்றுமை 'தொகுதி' 'தொழுதி,' 'அரயர்' 'அரையர்,' முதலிய பலசொற்களிற் காணப்படுதலால் அச்சொற்களில் வேறுபட்டொலிக்கும் இருவேறு எழுத்துக்கள் ஒன்றற்கொன்று இனமெனலும் வேண்டும்; அங்ஙனங் கொள்ளாமையால் இவ்வாறுகச் சொல்லின் பொருளால் ஒற்றுமை கொண்டு எழுத்துக்களுக்குப் பொருளால் ஒற்றுமை கூறுதல் ஒரு சிறிதும் பொருத்தமுடைத்தன்று.

ஆயின் பொருளால் ஒற்றுமையுடைய இன வெழுத்துக்கள் யாவை யெனின்? வினப்பொருளுடைமைபற்றி வின எழுத்துக்கள் பொருளால் ஓரினமாம்; சுட்டுப்பொருளுடைமைபற்றி, சுட்டெழுத்துக்கள் பொருளால் ஓரினமாம். இதனை, 'எகரவினுமுச்சுட்டின் முன்னர்' என்றும், 'வினச்சுட்டுற்றனளர' என்றும், 'சுட்டின்முன்னுய்தம்' என்றும், 'வினச்சுட்டடனும்' என்றும், 'இவையடைசுட்டுவின' என்றும் ஆசிரியர் தாமே செய்கைக்கண் பலவிடங்களில் எடுத்தாளுதலால் இவை ஓரினமாதல் தெளியப்படும்; இவற்றிற்குத் தான முதலிய வேறு பிறப்பொப்புமை ஒன்றும் இல்லாமையாலும் பொருளொற்றுமை ஒன்றேயுடைமையாலும் இவை பொருளால் இனமாதல்கொள்க.

இனி இச்சூத்திரத்தில் 'வடிவு' என்றது எழுத்தின்வரிவடிவு எனக்கருதியே உரைகாரர்கள் எல்லோரும் உதாரணம் காட்டினர்; அவ்வரிவடிவொப்புமையும் இனமாதற்குக்காரணமாகக் காணப்படவில்லை. காரணமாயிருக்குமானுல் இனமாதற்கு அவ்வரிவடிவொப்புமை இன்றியமையாதாதல்வேண்டும்; அவ்வாறில்லாமையால் (அதாவது அவ்வரிவடிவொப்புமைவேண்டாமலே இனவெழுத்திலக்கணம் அமைதலால்) அவ்வரிவடிவொப்புமை உடம்பாட்டிலும் எதிர்மறையிலும் நியமம் தவறுகிறது.

எங்ஙனமெனில் இகர ஈகாரங்கட்கு வரிவடிவில் யாதொருவொப்புமையும் இல்லை. கங, சஞ, டண, முதலியவற்றுள்ளும் இல்லை. ஏதேனும் ஒருவகையால் ஒப்புமையுளதென்போமாயின் அவ்வாறுன ஒப்புமை எகாருகரங்களுள்ளும் காணலாம். அதனுல் எகர ஞகரங்களை ஒன்றற்கொன்று இனம் என்னலாமா?

அன்றியும் இந்நூல் சொல்நூலாதலால் அச்சொல்லின்வடிவாகிய ஒலிவடிவே எழுத்துக்களுக்கும் கொள்ளத்தகும். வரிவடிவு ஒருவாற்றானும் சொல்லுக்கு உறுப்பாகிய எழுத்தின் ஒலிவடிவாகாது. அது ஒலியெழுத்துக்களின்வேறாய் அவ்வெழுத்துக்களை அறிதற்குக் கருவியாகக் கற்பித்துக்கொள்ளப்பட்டதோர் அறிகுறியின்வடிவேயாம். ஆகவே அவ்வரிவடிவொப்புமை, ஒலிவடிவாயுள்ள எழுத்துக்கள் ஓரினமாதற்குக் காரணமாகமாட்டாதென்பதொருதலையாயிற்று.

ஆயின், எழுத்துக்களுக்கு ஒலிவடிவான் ஒப்புமைதான் எங்ஙனம் கூடுமெனில், உலகில் கட்புலனும் பொருள்களுள் கனிமுதலியவற்றினுள்ள அளவின்வடிவுபற்றி சிறியது பெரியது என்றறிந்து அவற்றைத் தனித்தனி ஓரினமாகவும், அவற்றின் பரிசவடிவாகிய வன்மை மென்மை பற்றித்தனித்தனி ஓரினமாகவும், பகுப்பதுபோல செவிப்புலனும் எழுத்துக்களும் குறில், நெடில், வலி, மெலி என்றினமினமாகப்பகுக்கப்பட்டுள்ளன. அம்முறையில், வடிவம், என்பது பல ஓரினமாதற்குரிய சாதியுடைய பிழம்பாதலால், ஈண்டு அவ்வொலிவடிவப்பிழம்பு அவைகளுக்கு ஒன்றாயமைதலால் அவை ஓரினமாயின. ஈண்டு, கட்புலனும் உருப்பிழம்பு வடிவு எனப்படுவதுபோல, செவிப்புலனும் ஒலிப்பிழம்பை வடிவென வழங்குவது ஒரு குறிப்புமொழியாம். ஆகவே எழுத்துக்களின் வன்மை, மென்மை, இடைமைகளாகிய தன்மையுடைய ஒலிப்பிழம்பு வலி, மெலி, இடை எழுத்துக்களுக்கு வடிவாதலால் அவை தனித்தனி வடிவால் ஓரினமாம். அவ்வாறே உயிரொலியும், ஒற்றொலியும் தனித்தனி ஒருநிகரான ஒலிவடிவுடைமையால் அவை உயிர்க்கணம் என்று ஓரினமும், மெய்க்கணம் என்று ஓரினமும் ஆயின. உயிரொலிக்கு நாதவடிவும், மெய்யொலிக்குப்பிந்துவடிவும் உருவங்களாம். ஆகவே உயிர்மெய்யொலிக்கு நாதபிந்து கலந்தவடிவம் உருவமாம். ஆதலால் உயிர்மெய்யெழுத்துக்கள் அவ்வடிவால் ஓரினமாம். நாதம் நெகிழ்ந்திசைக்கும் ஒலி. பிந்து வெட்டென்றிசைக்கும்ஒலி. இதனை உயிரொலி

வளியசைந்திசைத்தலானும், ஒற்றொலி வளி ஒற்றியதுணையே யுறுதலா லும் வேறுபட்டிசைப்பதை உச்சரித்துக்கண்டுகொள்க. சங்கின்கண் வளியசைந்திசைக்கும் இசையைச் சங்கநாதம் என்பதனால் நாதம் என அறியலாம். வளி ஒற்றியதுணையமைதலால் மெய்யெழுத்துக்கள் ஒற் றெனப் பெயர்பெற்றன. புள்ளியென்றபெயரும் அவ்வொலிவடிவுபற்றிய பெயரே; வரிவடிவப்புள்ளியானன்று.

இங்ஙனமாகவும், எழுத்துக்களுக்கு இலக்கண நூல்களுள், சொல் லப்பட்ட வடிவு அல்லது உருபு என்னும் இடங்களிலெல்லாம் தொல் காப்பிய உரையாசிரியர் முதலாயினோர் பலரும் கட்புலனும் வரிவடி வென்றே கருதினர். ஆயினும் அதன் உண்மையை ஆராயுமிடத்து ஆன்ம வடிவம் சரீரம் என்பதுபோல முடியும். தொல்காப்பியத்துள் ளும், நன்னூலுள்ளும் எழுத்துக்களுக்கு உருவம் கூறுமிடங்களி லெல் லாம் எழுத்தின் ஒலிவடிவே கருதிக் கூறப்பட்டதென ஆராயுமிடத்து வெளியாம்.

இத்துணையுங் கூறியவற்றால் நன்னூலுள் 'தானமுயற்சி,' 'ஐ ஔஇ உச்செறிய' என்ற இவ்விரு சூத்திரங்களும் வெவ்வேறு இனப் பெயரிலக்கண முணர்த்துகின்றன என்னும் முடிவு காட்டப்பெற்றது.

K. நரசிம்மன்,
ஸம்ஸ்கிருத காலேஜ், மதுரை.

சேரர் தாயமுறை.

சேரர்தாயமுறை என்ற தலைப்பின்கீழ் ஸ்ரீமத் சோமசுந்தரபாரதி அவர்கள் 'செங்குட்டுவன் சோழனுக்குத் தநயனும் சேரலாதற்கு மருகனும் ஆவனெனத் தெளியலாகும்' என்றும், அதற்குக் காரணம், 'சேரலாதற்கு, சோழன்மணக்கிள்ளிதேவி ஈன்ற மகன் என்பதுபோன்றதொரு பாடம்' இல்லாமையே யென்றும் குறித்தார்கள். (செந்தமிழ் தொகுதி XXVII பக். 133). மேலும், 5-ம் பதிகத்தொடர் 'இப்போது நிற்குநிலையில் இத்தொடரில் செங்குட்டுவன் தாய்பெயர் குறிக்கப்படவில்லை. சோழன் மணக்கிள்ளி ஆண்பாற்பெயர், செங்குட்டுவன் தாய்பெயராகமாட்டாது. மணக்கிள்ளி என்பது அவன் தாயின் இயற்பெயராகவும் சிலர் கருதுவர். மணக்கிள்ளியென்னும் சொல் ஒரு பெண்பாற்பெயராய் யாண்டும் வழங்கக் காணற்கில்லை. அதற்குமாறாகப் பலவிடத்தும் கிள்ளியென்பது ஆண்பாற்பெயராய்ச் சோழமன்னர் பலர்க்குரிய சிறப்புப்பெயராய் வழங்கிவருவது பிரசித்தம்..............ஆகவே, இத்தொடரில் மணக்கிள்ளியென்பது யாதொருபெண்ணையுங் குறியாமல் சோழன்பெயராகவே நிற்பதெனக்கொள்ளவேண்டும்' என்றார்கள். (செந்தமிழ்த்தொகுதி ஷெ. 131). இதனையும் பிறவற்றையுங்கொண்டு சேரர்தாயமுறை இக்காலத்து நடைபெற்றுவரும் மருமக்கட்டாயமென முடிவுகட்டினார்கள். இவர்கட்கு இவ்வாறுகொள்ள இடந்தந்தது. 'சேரன் செங்குட்டுவன்' என்ற நூலே என ஊகிக்கவேண்டியிருக்கின்றது. அந்நூலிற்றான் முதலில் செங்குட்டுவன்தாய் சோழன்மணக்கிள்ளியின் மகளும், நெடுங்கிள்ளியின் சகோதரியுமாவாள் என்று அந்நூலாசிரியர் குறித்தார்கள். அதுபொழுது உறையூர்ச்சோழரென்றும், புகார்ச்சோழர் என்றும் இருபிரிவினர் உண்டென்றும், அவர்கள் சில தலைமுறைகள் ஆண்டனரென்றும் கூறினார்கள்.

சோழன்மணக்கிள்ளியென்று ஒருவன் இருக்க நியதியில்லையென்றும், அத்தொடருக்கு மற்றைய பதிற்றுப்பத்துத்தொடருக்குப் பொருள்கொள்வதுபோலவே கொள்ளவேண்டுமென்றும், இத்தொடரில் சொற்கள் விடுபட்டுப் பின்னொருக்கால் பூர்த்திசெய்யப்பட்டதென்றும் இலக்கணவிளக்கபரம்பரை ஸ்ரீமத். சோமசுந்தரதேசிகர் அவர்கள் 'செங்

தமிழ்த் தொகுதி XX பக். 43–46 ல் இற்றைக்கு 8 ஆண்டுகட்குமுன்னேயே காட்டினர்கள். அவற்றைமறுத்து ஸ்ரீமத். மு. இராகவையங்கார் கொள்கை வலியுடையதென ஸ்ரீமத். அப்பணையங்கார் அவர்கள் (ஷை 101–106) ல் எழுதினர்கள். அவற்றைப் பலகாரணங்கள் காட்டி எதிர்த்து மணக்கிள்ளியென்பது பெண்பாற்பெயராகவிருக்க முடியுமென்றும், இத்தொடர் பிழைபட்டதென்றும் புகார்ச்சோழரென ஒரு வமிசத்தினர் இல்லையென்றும், சோழன்மணக்கிள்ளியென்றிருக்க வேண்டுமென்றும் 373—384 பக்கங்களில் தேசிகரவர்கள் விளக்கினர்கள்.

இனி ஸ்ரீமத் மு. இராகவையங்காரவர்களும் (சேரர்வேந்தர் தாயவழக்கை மறுக்கும்போது தேசிகரவர்களை யொட்டியே சோழன் மகள் நற்சோணையீன்ற மக்கள் என்றிருத்தலமையுமென்றும், இப்பதிகம் பிழைபட்டிருக்கலாமென்றும் எழுதினர்கள் (செந்தமிழ்த் தொகுதி 27 பக். 374–377). ஆனல் பாரதியவர்களும், ஐயங்கார் சுவாமிகளும், முறையே மணக்கிள்ளி யென்பது பெண்பாற் பெயராகாதென்பதற்கும், சோணை மணக்கிள்ளி என்று இருக்கவியலாதென்பதற்கும் போதிய காரணம் காட்டினர்களில்லை. மற்றொரு விடயமும் இதனில் முக்கியமாகக் கவனிக்கவேண்டியதுண்டு அது மற்றைய பதிற்றுப்பத்துப் பதிகங்களிற் காணப்படும் சேரமாதேவிகளின் பெற்றோர் பெயர் போல 5-ம் பத்துப் பதிகத்திலும் இருக்கவேண்டுமென்பதே. அது,

வடவ ருட்கும் வான்றோய் வெல்கொடிக்
குடவர் கோமா னெடுஞ் சேரலாதற்கு

* * * ‡

சோணை? மணக்கிள்ளி யீன்ற மகன் என்பதாம். புள்ளியிட்ட அடி திகழொளி ஞாயிற்றேழ்பரி நெடுந்தேர் என்றுவது திகழொளி ஞாயிற்றுச் சோழன் மகள் நற் - சோணை மணக்கிள்ளி என்றுவது இருக்க வேண்டுவது அவசியம். இவற்றைப் பெரியார் ஆய்ந்து முடிவு கட்டுவார்களாக.

வைத்தியநாதசாமி தேசிகன்,
திருவாரூர்.

ஓர் ஐயவினா.

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாய சிலப்பதிகாரத்தில் இந்திர விழவூரெடுத்த காதை ௪௨-ம் அடியிலும், கட்டுரை காதை ௭௪-ம் அடியிலும் உள்ள "மறையவர்" என்னுஞ் சொல்லுக்கு அரும்பத வுரையாசிரியரும், உரையாசிரியரும் "பஞ்சக்கிராமிகள்" எனப்பொருள் கூறியிருக்கின்றனர். இதில் பஞ்சக் கிராமிகளென்போர் யாவர்? மறையோர் என்பது வேதத்தில் வல்ல பிராமணர் என வழங்குவதையே யான் இதுகாறும் கேட்டுள்ளேன். இந்திர விழவூரெடுத்த காதையிலுள்ள மறையோர் என்னுஞ் சொல்லிற்கும் அவ்வாறே பொருள் கோடல் வேண்டுமென யான் கருதுகின்றனன். என்னை? இந்திரவிழ வூரெடுத்த காதையில் அந்நகரின் சிறப்புகளாய அரசவீதி, வணிகவீதி, உழவர் வீதி, முதலியன கூறாது, "மறையோரிருக்கையு" மெனக் கூறுகின்றா ராகலின் நாற் குலங்களுள் ஒன்றாய அந்தணரிருக்கு மிடங்களும் வர வேண்டி யிருத்தலினாலென்க.

இதில் யான் கொண்ட பொருள் சரியா? அன்றி உரையாசிரியர் கொண்ட பொருள் சரியா? என்பதைத் தமிழறிஞர்கள் இவ்வெளியீடு மூல மறிவிக்குமாறு வேண்டுகின்றேன்.

இப்படிக்கு,

ஆ. சிவபாதம்,

மாணவன்,

யாழ்ப்பாணம்.

முன்னுரை.

சென்ற பத்தாவது இலக்கச் செந்தமிழிலே பிராசாததீப முகவுரையில் பிராசாத அகவல் என்று ஒரு நூலுண்டு எனக் குறித்துள்ளேன். அது சாலை அம்பலவாணத்தம்பிரானர் செய்ததென அப்பொழுது கிடைத்த குறிப்புக்களைக் கொண்டு கூறினேன். நூலையாராயும்போது முதல் பதினோரடிகளால் பிராசாத அகவல் அவர் செய்ததென்று கூறுதற்குரியசான்று போதியதாகக் காணப்படவில்லை. எனினும் இவ்வகவல் பிராசாதத்தைப்பற்றி விளங்காத இடங்களைச் சிறிது விளக்குவதால் அதனைச் செந்தமிழ் வாசகர்கள் படித்தற்பொருட்டு வெளியிடுகின்றேன். இவ்வகவல் திருப்பனந்தாள் காசிமடத்தைச்சார்ந்த புத்தகசாலையிலுள்ள இரண்டு ஏட்டுப் பிரதிகளைப்பார்த்து தருமையாதீனத்தைச்சார்ந்த அடியார் குழாத்துள் ஒருவராகிய வித்வான் ஸ்ரீமத் சட்டைநாத முனிவரவர்களால் எழுதப்பட்டது. அவர்கள் எழுதியவாறே பதிக்கப்படுகின்றது.

இதனோடு சேர்ந்து காணப்படும் சோடசகலா பிரசாதவிருத்தம் கமலைஞானப்பிரகாசரது சீடரும் திருக்கயிலாய பாம்பரை தருமையாதீனஸ்தாபகருமான ஸ்ரீஞானசம்பந்த சுவாமிகளால் சொல்லப்பட்ட அநுபவநூலாகும். இதுவும் காசிமடத்திலுள்ள மூன்று பிரதிகளைப் பார்த்து மேற்கூறிய முனிவரவர்களால் செப்பஞ்செய்யப்பட்டது. அன்னார்க்கு நாம் என்றுங் கடப்பாடுடையோம்.

இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை
திருவாரூர், சோமசுந்தர தேசிகன்.

பிராசாத அகவல்.

திருவரு ளாலே யிருநிலம் வாழவந்[1]
தருந்தவ முனிவன் பொருந்திய பொதியமும்
துய்யமுத் தமிழ்சேர் வையைமா நதியுங்
குன்ற மெறிந்த வென்றி வேலன்
போற்றிவா னவர்தொழ வீற்றினி திருக்கும்
மன்றலஞ் சோலைக் குன்றனன் றூடும்
பூவலர் வாவிக் காவையம் பதியும்
வளந்திகழ் திசையுடன் விளங்க வந்தோ
னம்புவி புகழ்திரு வம்பல நாதன்
சிவனரு ளாலருள் திருமந் திரத்தை
தவநெறி யொழுகுந் தக்கோர்க் குரைத்தனன்
போற்றிய தலைமை நாற்சது ரத்து
ளோங்கா ரஞ்சேர் ரீங்கா ரத்து
மூலை, யிரண்டினுஞ் சாலத் தோன்றி
யிடையிங் கலைக ளிடம்வல நிற்கு
மேலை மூலை மூல மாகச்
சுழுமுனை சித்திரம் வழுவில் வச்சிர
மொன்றுக் கொன்று சென்றுள் ளாகி
யுரைசெய் கோணத் தொருதலை சொருகி
யிருதலை திரண்ட வொருவேய் போலக்
கோணற நிற்கும் வீணா தண்டி
னூடே யூடி நாடி மூன்றும்
பிரம ரந்திர முருவி நிற்கு
மிடையிங் கலைகண் நடுவுதண் டுடனே
தொடர்வறப் பின்னி யடைவா தார
மாறினுங் கூடி வேறுவே றாகிப்

[1]வாழ்கவந் தென்றும்பாடம்.

புருவ மத்திம மருவி நாசிக்
கிடமும் வலமு மிடமென நிற்கு
முந்தியந் தாமரைக் கந்த மேவி
யிடையினுங் கலையினு மெழுந்தைந்து நாடி
யிடமு வலமு நடுவு மேல்போய்க்
கண்வாய் செவியென நண்ணி நிற்கு
முன்னர்ச் சொன்ன வந்நிலை தன்னின்
மூன்று நாடி தோன்றிக் கீழ்போய்க்
குதத்து மிலிங்கத்தும் பகுத்துட னிற்கு
மன்னு மபான மிலிங்க மூந்தி
உன்னு மார்பு களநுத லுச்சி
சொன்ன தானந் தன்னின் னாமை
மூலா தாரஞ் சுவாதிட் டான
மேன்மணி பூரகம் அனாகதம் விசுத்தி
யாக்கினை பிரம ரந்திர மிதன்
மேற்சொல் வன்னிதழ் விளம்புங் காலை
நாலா றீரைந்து நண்ணு மீரா
றேனு மீரெட் டிரண்டொன் றாயிரம்
மறுவறு தாமரை நிறமது நிகழ்த்தில்
வெண்மை பொன்மை செம்மை படிகந்
தண்மைதரு குருந்து புகைத்திரள் பளிங்குமுன்
சொன்ன தானஞ் சொரிதழற் றியான
மன்னுமுக் கோணம் வயங்கு நாப்பண்
இபங்கு மசபை நயந்தினி துறையும்[1]
இருபத் தோரா யிரத்தறு நூறு
மருவிய வாயு வலமிட மாக
மாறி மாறி வேறுபா டாகிப்
பூத மைந்தினுக் கோது நாழிகை

[1] துரைக்கில் என்றும் பாடம்.

யொன்றுக் கொன்று ருன்று தெழுந்து
பன்னிரண் டங்குல முன்னி யோடி
யிருநாலு மீண்டங் கொருநா லொழியு
மிந்தக் கருத்தை சிந்தித் தறிவா
லந்த வாதார மடைவோ ரேழினும்
பந்தமற நிற்கும் பவனமறு நூறு
மூன்று ருயிர மூன்றிட மருவி
மூன்றிட மூவா யிரமென நிறுத்தின
மந்திர மாமெனத் தந்திரஞ் சொல்லு
முன்னு மசபை யோங்கா ரத்து
மன்னு தாபரங் காமிய மலமா
முந்தி மேனு லங்குலி யகாரம்
வந்த தெய்வ மலரயன் மூன்று
சிறந்த மாத்திரை நிறந்தழற் கொழுந்து
ஆனது பிண்ட மண்டம் பிருதிவி
பகரில் நூறு யிரகோடி யோசனை
யகல முயரங் கனமொரு கோடி
புவித்திர மான நிவிர்த்தி கலையே
அகாரத் துக்கு மேலெட் டங்குலி
யுகார மாகு முயர்தெய்வம் விட்டுணு
யிரண்டு மாத்திரை யிருகதிர் நிறமே
யோனி யூர்வன விழுகு மலமாம்
பிண்டஞ் சேறும் பண்டஞ் செப்பிற்
பத்து நூறு யிரகோடி யோசனை
யொத்த வகல முயரங் கனமே
யிரண்டு கோடி யென்பது விதுவே
பரந்து நிற்கும் பிரதிட்டா கலையே
யுகார மீதே மகாரமெட் டங்குலி

நிகரில் தெய்வமுருத் திரன்மாத் திரையொன்று
மெய்பிருள் விளக்கு மின்னிறம் பிண்டந்
தேயு வண்டந் தெரியுங் காலை
யிருபது நூறு யிரகோடி யோசனை
கருதிய வகல மூயா மாகு
மான்ற கனமொரு மூன்று கோடி
சுத்த மான வித்தியா கலையே
மகாரத் துக்கு மேலெட் டங்குலி
நிகரில் விந்துத் தெய்வ மகேசுரன்
மாத்திரை யரையொளி தெளிதரு விளக்கே
மாயை மலமா மருவும் யோனி
ஆயும் பறவை யாகும் பிண்டந்
தப்பி லாத வாயு வண்டம்
மூப்பது நூறு யிரகோடி யோசனை
யகல மூயா மாகு மென்ப
மேலுங் கனமொரு நாலு கோடி
சாந்தம் வாய்ந்த சாந்தி கலையே
யர்த்த சந்திரன் மூன்றங் குலியே
வைத்த மாத்திரை கால்வா ளொளியா
மிவ்வகை யைந்து மெய்பெறு தூல
நேய மான நிரோதிமூன் றங்குலி
ஆய மாத்திரை யரைக்கா னிறம்புகை
நண்ணும் யோனி நாற்கா லாகும்
எண்ணு மாயேய மலமென விசைப்பர்
தோன்றிய நாத மூன்றங் குலியே
யேன்ற வடிவ மிரண்டு விந்துப்
பேணு மாத்திரை மாகாணி மணியொளி
முயன்றநா தாந்த மூன்றங் குலியே

யியன்ற வடிவோ ரலமொரு விந்துத்
தெய்வஞ் சதாசிவஞ் சேரு மாத்திரை
யெய்திய வரைமா வரைக்காணி யிதனிறம்
இரண்டு மின்னூர் திரண்ட யோனி
மானிட மாகு மலமா மாயை
யானது பிண்ட மண்டமா காசம்
நாற்பது நூறு யிரகோடி யோசனை.
யேற்ற வகல மிசைந்த வுயர
மூந்து வக்கன மைந்து கோடி
நோக்கிய மூன்றுஞ் சூக்கும மாகும்
ஓதுஞ் சாந்தியா தீத கலையே
மூதிருஞ் சத்தி சதுரங் குலியே
வடிவொரு கலப்பை நடுவிந்து வாகும்
கலந்த மாத்திரை காணிமூன் றிரிகை
யிலங்கிய வொளிநூ றுயிர கோடி
மதிக்கு மாதித்த ருதிக்கு மொளியே
யொப்பில் வியாபினி செப்பிறு லங்குலி
மூரண்டெழு கூல மிரண்டு விந்து
வுருவ மாகும் பொருவில் மாத்திரை
யரைக்கா ணிக்கீ ழரையா முரைக்கி
லாதவர் வட்டனூ றுயிர கோடி
சோதி யொளியாந் துளங்கிய பேரொளி
ஓது தெய்வ மாகத சிவமே
தொடுத்த விரண்டுஞ் சூக்குமா சூக்கும
மடுக்கு மியோனி யலகை யாகும்
புலந்தனை யொழிக்கு மலந்திரோ தாயி
தங்குஞ் சமனைமூன் றங்குலி வடிவே
யிங்கிரு குச்சி யிருவிந்து வாகும்
வந்த மாத்திரை மூந்திரிகைக் கீழ்க்கால்

துய்யவா தித்தர்நூ றுயிர கோடி
வெய்யி லொளியரம் விளங்கிய வுன்மனை
முடிவிலோ ரங்குலி வடிவு வட்டந்
தெய்வ மகாகத சிவமே யிருணிறம்
மதிக்கும்யோனி துதிக்குந் தெய்வ
மிவ்வகை யிரண்டு மிவையதி சூக்குமஞ்
செப்பி லோர்முத லிப்பதி னாறு*
மந்திர கலையா மலமா ணவமாம்
நந்திய பாச சாலம் நவிலில்
மேலுரை செய்வன் நாலு சத்தி
வினவிய வியோம ரூபினி யனந்தை
யனாதை யனாசிருதை யடைவோ ரங்குலி
விந்து வடிவே யந்த வம்பா
மளக்க ராடி சரற்கா லத்தி
னுதய, மதிநூ றுயிர கோடி
கதிரொளி திரண்ட காட்சி யொளியே
விரவிய தெய்வம் பரசிவ மாகும்
பேச வரிய மாசூக் குமமே
நாலுந் தியான மேலுப தேசம்
புண்ணிய குருவின் றண்ணளி தருமே.

அடுத்தொளிர்மும் மண்டலமா ராதார மப்பா
லடுத்த விரலாறுக் கப்பா—லடுத்தவொளி
யம்பலநின் றாடியகூத் தானந்தங் கண்டிருப்பா
ரம்பலவன் றாளேத்து வார்.

பிராசாத அகவல் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---

* பதினாலு என்றும் பாடம்.

உ

திருச்சிற்றம்பலம்.

திருக்கைலாயபரம்பரைத் தருமபுரம் ஆதீனஸ்தாபனசார்யவர்ய

ஸ்ரீமத் குருஞான சம்பந்த சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய,

சோடசகலாப் பிராசாதவிருத்தம்.

இதுகலைகளின் வன்னமுந் தானமுங்கூறியது.

நற்றழலின் கொழுந்துபய கதிர்மின்னு விளக்கு
நண்ணும்வா ளொளிபுகைமா ணிக்கமிரு மின்னு
வுற்றொளிரு மிரவிநூறு யிரகோடி யுதய
வொளியன்ன தொகைவட்ட ஞானகாய
மற்றமில்ஞா னவ்வாளி ஞானக் கண்ணடி
யவிர்நூறு யிரகோடி மதியொளியத் தொகையே
பெற்றதின கரவெயில்மேற் பேசவரு மிருளே
பிறங்குந்தி முதல்முடிமேற் றுவாதசாந்தம் பெறுமே. க

இது சோடசகலைக்கும் நாபிமுதலாகத் துவாதசாந்தமளவாகத் தானஞ்சொல்லியது.

அங்குலகா லகரத்திற் குந்தி மீதே
யடுத்திடுமூன் றிற்கெட்டெட் டாயே நிற்குந்
தங்குமுள நாவினுக்கு மூன்று மூன்றாந்
துலங்கியவோ ரிரண்டினுக்கு நான்கு நான்காந்
தங்கியமே லொன்றுக்கு மூன்றே யாகுந்
தயங்கியமே லொன்றுக்கொன் றாகச் சாற்றும்
பங்கமிலா விவைகடுவாத சாந்த மாகப்
பாங்குபெறு கலைகளெனப் பகரு நூலே. உ

இஃது அகரமுதலான கலைபதினாறுக்கும் வடிவுசொல்லியது.

அகாமுக ரம்மகாம் விந்து நல்ல
வர்த்தசந் திரனிவையவ் வடிவே யாகும்
புகலவரு முக்கோண மிருவிந்து [1]நடுவே
பொருந்துமலம் விந்துவலம் நடுவே விந்துத்
தகவுடைய திரிசூல மிரண்டு விந்துச்
சாரும்வியோ மாதிநால் விந்து நாலகாய்
நிகழவரு மிருகுச்சி யிரண்டு விந்து
நீடுமொரு விந்துவென நிறுத்து நூலே. ௯

இது பதினாறு கலைக்கும் அதிதேவதை கூறுகின்றது.

மலாயன்முன் னல்வர்களு[2] மாகு முந்தி
மருவகா மாதியொரு நாலுக்கும்மே
விலகவரு[3] நான்கினுக்குஞ் சதாசிவமே தெய்வ
மெழிலுடைய மேலிரண்டிற் காகதமாஞ் சிவமே
நலமுடைய நான்கினுக்கு நற்பாம சிவமே
நண்ணுமநா கதசிவமாம் நவிலறிய விரண்டிற்
குலகரிய வைந்துமுன் றிரண் டிரண்டே
யுள்ளாகு மிரண்டி ரண்டிற் கொருநான்கு தானே. ௰

இஃதாதார நிராதாரங்களுக்கும் கலைகளுக்கும் மலநிலை சொல்லியது.

மூலத்தி லோங்கார மசபைக் காக
மொழிவர்கா மிகமலமே முகிழ்க்கு முந்தி
யேலத்தான மேவகா முன்னிரண்டிற்
கிழுக்குமல[4] மேலிரண்டிற் கிலகு மாயை
சீலத்தான மேலிரண்டிற் றிகழ்மா யேயங்
திறலுடைய மேலிரண்டிற் சேர்மா மாயை

[1]மேலும், என்று பாடம், [2]னல்வர்க்கு, என்று பாடம், [3]விலகுமொரு, என்றும் பாடம், [4]கிழுகுமலம் என்றும் பாடம்.

சாலத்தான் மேலிரண்டிற் றகுதி ரோதந்
தயங்கியமே லிரண்டிற்கா ணவமே சாற்றில். ௫.

இஃதாதார நிராதாரங்களிலுள்ள மலங்களுடனே எண்பத்து
நூறுயிர யோனிபேதமும் சோதனைப்படும் என்றது.

அரியமூ லாதார மதனின் மேவி
யவிருமோங் காரமெழி லசைபைக் காகத்
தெரிவரிய யோனிதாபரமே யாகுந்
திகழவரு மூந்தியின்மே லகர மாதிப்
பிரிவரிய விவ்விரண்டா யறுகூ றாகிப்
பெறும்யோனி யூர்வனவு நீரில் வாழ்தற்
குரியனவும் பறவைகளு நாற்கான்மா னிடரு
மூயர்தெய்வ கதியுமென வுரைக்கு நூலே. ௬.

இஃதெல்லாக் கலைகளுக்கும் மாத்திரையுஞ் சட்சூனியமுங் கூறியது.

மூன்றகா மிரண்டுகா மகர மொன்றே
முந்துவிந்து வரைபிறைகால் முக்கோண மரைக்கால்
ஆன்றமைந்த நாதமா காணிநா தாந்த
மரைமாமே லரைக்காணி சத்தியைமுந் திரிகை
யென்றவியா பினியரைக்கா ணியின்கீழி னரையே
யிம்முறைவி யோமாதி யரையரைமாத் திரையே
தோன்றுமக ரத்தின்மே னிரோதிசத்தி யின்மேற்
றோற்றும்வியா பிநிசமனை உன்மனைமேற் சுன்னே எ.

சோடகலாப் பிராசாத விருத்தம் முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

இருபெயரொட்டாகுபெயரும் அன்மொழித்தொகையும்.

இருபெயரொட்டாகுபெயரும் அன்மொழித்தொகையும் ஒன்றென்பாரும் வேறென்பாருமாக உரையாசிரியர்கள் பலதிறப்பட உரைக்கின்றனர். அவை ஒன்று? வேறு? என்பதைக் கற்போர்க்கு உணர்ச்சி பெருகும்படி ஆராய்ந்து காட்டுதும்.

உரையாசிரியர்கள் கருத்துக்களை முன்னர்த் தருதும்.

"முதலிற் கூறும் சினையறி கிளவியும்
சினையிற் கூறும் முதலறி கிளவியும்
பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரும்
இயன்றது மொழிதலும் இருபெய ரொட்டும்
வினைமுத லுரைக்குங் கிளவியொடு தொகைஇ
அனையமர பினவே ஆகுபெயர்க் கிளவி"

என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்துள் வரும் 'இருபெய ரொட்டு' என்பதற்கு உரையாசிரியர் இரண்டுபெய ரொட்டி நிற்பது அது சொல்லப் பிறிதுபொருள் விளக்கும். அது வருமாறு: 'பொற்றொடி' என்பது இருபெயர் நின்று ஒட்டிற்று. அது சொல்லப் பொற்றொடி தொட்டாளை விளக்கும். என உரைத்தனர்.

சேனாவரையர், 'பொற்றொடி வந்தாள் என இருபெயரொட்டு அன்மொழிப்பொருள்மேலும்........வந்தவாறுகண்டுகொள்க' என உரைத்து, அகலவுரையுள், "அன்மொழித்தொகை எச்சவியலுள் உணர்த்தப்படுதலின், ஈண்டுக்கூறல் வேண்டா வெனின், அன்மொழித்தொகை தொகையாக லுடைமையின் ஆண்டுக் கூறினர். இயற்பெயர் ஆகுபெயரெனப், 'பெயரிரண்டாய் அடக்கும்வழி ஒருபெயர்ப்பட்டதென மேலும் வந்தவாறு கண்டு கொள்க. அன்மொழித்தொகை எச்சவியலு ளுணர்த்தப்படும் அதனால் அவ்வாகுபெயராதலுடைமைபற்றி ஈண்டுக்

கூறினர். எச்சவியலுட் கூறப்பட்டவாயினும் வினையெச்ச முதலாயின வினைச்சொல்லாகலும் இடைச்சொல்லாகலு முடைமையான் அவற்றை வினையியலுள்ளும் இடையியலுள்ளும் கூறியவாறுபோல என்பது" என உரைத்தனர்.

நச்சினார்க்கினியர், "அன்மொழிப்பொருண்மேனில்லாத இருபெய ரொட்டும்" என்றுரைத்து, மக்கட்சுட்டென இரண்டுமில்லாததோர் பொருளை யுணர்த்தாது மக்களையுணர்த்திற்று. 'பொற்றொடி' அன்மொழி; ஆகுபெயர் அன்மையுணர்க என உரைத்தனர்.

தெய்வச்சிலையார் இருபெயர் தொக்கு ஒருசொன்னீர்மைப்பட்டு, மற்றொருபொருள்தருபெயராகிவருவது. அது துடியிடை என்பது துடிபோன்ற இடையினையுடையாளைத் துடியிடை என்பவாகலின் ஆகு பெயராயிற்று. இஃது உவமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகையன்றோவெனின், ஒட்டுப்பட்டபெயரோடு ஒற்றுமைப்பட்ட உருபு; அன்மொழித்தொகையாவது அப்பொருளின் வேறுபட்டுவரும். அன்னதாதல், அன்மொழி என்பதனானும் விளங்கும். அதனானன்றே "பண்புதொக வரூஉங் கிளவியானும்................ஈற்றிநின்றியலு மன் மொழித்தொகையே" என ஓதுவாராயிற்று.

அனையமரபினென்றதனால் ஈண்டு ஓதப்பட்டனவற்றுள், அடை அடுத்து வருவனவுங்கொள்க. 'தாழ்குழல்' என்றவழி அதனையுடை யாட்குப் பெயராகிவருதலின் ஆகுபெயராயிற்று. இது வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையன்றோவெனின், ஆண்டு எடுத் தோதாமையானும், பொருள் ஒற்றுமைப்படுதலானும் ஆகாதென்க.

இனித் தெய்வச்சிலையார் அன்மொழித்தொகைச் சூத்திரத்திற் குரைத்த உரையும், இதற்கு வேண்டுமாகலின் அதனையும் ஈண்டுத் தருதும்

"பண்புதொகவரூஉங்கிளவியானும்
உம்மைதொக்கபெயர்வயினானும்
வேற்றுமைதொக்கபெயர்வயினானும்
ஈற்றுநின்றியலுமன்மொழித்தொகையே"

என்பது சூத்திரம். இதற்கு அவருரை வருமாறு:—

இ - ள். பண்புதொகவரும் பெயர்க்கண்ணும் உம்மைதொக்க பெயர்க்கண்ணும், வேற்றுமைதொக்க பெயர்க்கண்ணும் இறுதி .... அன்மொழித்தொகை எ - று.

அல்லாதமொழிதொகுதலின் அன்மொழித்தொகையாயிற்று. இம் மூவகைத் தொகையினும் ஈற்று நின்றியலும் என்றதனான் முன்னும் பின்னும் என்னும் இரண்டினும் உணரப்படுபொருண்மையுடைத்து அன்மொழித்தொகை என்று கொள்க.

உதாரணம் :—கடுங்கோல் பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. கடுமையும் கோலும் அரசன்மேல் நிற்றலின் அன்மொழி.

'தகரஞாழல்', உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்தது. தகரமும் ஞாழலும் சாந்தின்மேன் நிற்றலின் அன்மொழி. 'தூணிப்பதக்கு') இரண்டும் பொருண்மேனிற்றலின் அன்மொழி.

'பொற்றொடி' பொன் தொடிக்கு விசேடணமாயினும் உடையாளது செல்வத்தைக்காட்டலின் அன்மொழி.

இனித், துடியிடையும், தாழ்குழலும் என்பவற்றில் முன்மொழி அடையாய் வருவதல்லது அன்மொழியை விசேடியாமையின் ஆகுபெயரன்றி அன்மொழி ஆகா என்றார்.

இனிச் சிவஞானமுனிவர், ஆகுபெயர்க்கும் அன்மொழித் தொகைக்கும் வேறுபாடு கூறுவதும் ஈண்டுக்காட்டவேண்டுதலின் அதனையும் காட்டுதும் :—

அற்றேல், ஆகுபெயரும் அன்மொழித்தொகையும் தம்பொருளுணர்த்தாது பிறிதுபொருளுணர்த்துதலான் ஒக்குமாகலின், அவை தம்முள்வேற்றுமை யாதோவெனின், ஆகுபெயர் ஒன்றன்பெயரானதனோடியைபுபற்றிய பிறிதொன்றனையுணர்த்தி ஒருமொழிக்கண்ணதாம். அன்மொழித்தொகை இயைபுவேண்டாது இருமொழியும் தொக்க தொகையாற்றலாற் பிறிது பொருளுணர்த்தி இருமொழிக்கண்ணதாம், இவைதம்முள் வேற்றுமை என்க.

இருபெயரொட்டாகுபெயர் இருமொழிக்கண்வந்ததன்றேவெனின், அன்று. என்னை? வகரக்கிளவி, அதுவாகுகிளவி, மக்கட்சுட்டு என்னும் இருபெயரொட்டாகுபெயருள், வகரமும், அதுவாதலும், மக்களுமாகிய அடைமொழிகள், கிளவி, சுட்டு என்னும் ஆகுபெயர்ப்பொருளை விசேடித்து நிற்பக், கிளவி, சுட்டு என்பனவே, ஆகுபெயராய் அப்பொருளை யுணர்த்த இருபெயரொட்டி நிற்குமாகலின். இனிப் 'பொற்றொடி' என்னும் அன்மொழித்தொகையில் 'பொன்' என்பது அவ்வாறு அன்மொழித்தொகையை விசேடித்து நில்லாது, தொடியினையே விசேடித்து நிற்ப, அவ்விரண்டன் தொகையாற்றலான் அன்மொழித்தொகைப் பொருளை யுணர்த்துமாறறிக.

இங்கே காட்டிய உரைகளுள், உரையாசிரியருரையும், சேனாவரையருரையும், தம்முள் ஒத்தகருத்தினவாயும், மற்றைய மூவருரையும் ஒத்தகருத்தினவாயும் காணப்படுகின்றன. எனினும், தெய்வச்சிலையாருரையினும் சிவஞானமுனிவருரையினும் ஒருவேறுபாடுகாணப்படுகின்றது. அது, தெய்வச்சிலையார் இருபெயரொட்டு ஆகுபெயர்க்குச் சொன்ன இலக்கணம், சிவஞானமுனிவர் அன்மொழித்தொகைக்குச் சொன்ன இலக்கணமாயும், தெய்வச்சிலையார் அன்மொழித்தொகைக்குச் சொன்ன இலக்கணம் சிவஞானமுனிவர் இருபெயரொட்டாகுபெயர்க்குச் சொன்ன இலக்கணமாயும் மாறிநிற்றலே. இவ்வேறுபாட்டை நோக்கும் போது இவர்கள், இருபெயரொட்டாகு பெயர்க்கும் அன்மொழித்தொகைக்கும் ஏதோ வேறுபாடு கூறிவிடவேண்டுமென்று கருதித் தத்தம் கருத்திற் பட்டதைக் கூறிவிட்டதே அன்றி, உண்மை நோக்கிக் கூறிற்றிலர் என்பது புலனாகின்றது. இவ்விருவருரையையும் நோக்கும் போது பெரிய நகைக்கிடமாகின்றது. இனித் தெய்வச் சிலையாரும் சிவஞானமுனிவரும் தாங்காட்டிய உதாரணங்களையும் நுனித்துநோக்காது, ஆகுபெயர், பொருளோடு ஒற்றுமையுடையதாய்வரும். அன்மொழி அங்ஙனமின்றி வரும் என்று கூறினர்.

தெய்வச்சிலையார், தகரஞாழல் என்பதில் தகரமுஞாழலுமாகிய இரண்டும் சாந்தின்மேனிற்றலின் அன்மொழித்தொகை யென்றார். அங்ஙனமாயின், தகரமும் ஞாழலும் கூடியதே சாந்தாதலின் அம்மொழிப்பொருளோடு இயைபுடையதன்றெனக் கூறல் எவ்வாறு பொருந்

தும்? 'கடுங்கோல்' என்னும் பண்புத்தொகையில் வரும் அன்மொழியில், கோலுக்கும் அரசனுக்கும் ஒற்றுமையின்றேனும், 'கருங்குழல்' முதலிய பண்புத்தொகையில் வரும் அன்மொழியில் ஒற்றுமை காணப்படுகின்றதே? அங்ஙனமன்று, கருமை குழலுக்கன்றிப் பொருளுக்கு விசேடணமன்மையின், இன்னோரன்ன அன்மொழியாகாது இருபெயரொட்டாகுமெனின், 'பண்புதொகவரூஉம் கிளவியானும், என ஆசிரியர் கூறிய நியதி தப்புகின்றதே? இவற்றிற்கெல்லாம் தக்க சமாதானம் ஒன்றுமில்லையாகும். இன்னும் பொற்றொடி என்பதில், பொன்தொடியை விசேடித்துநின்றதென்பது வெள்ளிடை விலங்கல்போல் தெரிந்ததொன்றாகவும், தெய்வச்சிலையார் இருமொழியும் அன்மொழிப்பொருளை விசேடித்து வருவதே அன்மொழித்தொகையெனத் தாம்கொண்டதற்கேற்பப் பொன் தொடியையேயன்றி உடையாளையும் விசேடித்துச் செல்வமுடையாள் என்பதைக் காட்டிநின்றதென வலிந்து பொருள்கொள்கின்றனர். அங்ஙனேல், துடியிடை தாழ்குழல் என்பனவும் உடையாளது இலக்கணச்சிறப்பைக்காட்டி நின்றதெனக் கூறலாமாதலின் அது பொருந்தாதென்பது. இவற்றால் அன்மொழிக்கும் ஆகுபெயர்க்கும் தெய்வச்சிலையார் காட்டிய வேறுபாடு பொருந்தாமை யுணரப்படும்.

இனிச் சிவஞானமுனிவரும், இயைபுவேண்டாது பிறிதுபொருளுணர்த்திவருவது அன்மொழித்தொகையென்றனர். இவர் இங்ஙனமுரைத்ததற்குக்காரணம் வடமொழியில் அன்மொழித்தொகைகள் எல்லாம் சக்கியசம்பந்தமின்றியே தொகையாற்றலால் அன்மொழிப் பொருளை உணர்த்துமென்றும், இலக்கணைக்குச் சக்கியசம்பந்தம் வேண்டுமென்றும் பிரயோகவிவேகநூலார் கூறியதை நோக்கிப்போலும். நுணுகி நோக்குவோர்க்குத்தொகையாற்றலாற் பெறப்படும் அன்மொழிப் பொருளும் சம்பந்தம்பெற்று வருகின்றது என்பது பெறப்படும். தொகையாற்றலாற் பெறப்படும் என்றுகூறிய பிரயோக விவேக நூலாரே, "தொல்காப்பியர் கூறிய ஆகுபெயரிலக்கணத்தைப் பாணினிமுனிவர், தற்குணசம்விஞ்ஞான வெகுவிரீகி, அதற்குணசம்விஞ்ஞான வெகுவிரீகி, எனக் கூறுவர். எனக் கூறுவதாலும் உணரப்படும்.

தற்குணசம்விஞ்ஞான வெகுவிரீகி, அதற்குணசம்விஞ்ஞான வெகுவிரீகிஎன்பவற்றிற்குபாணினிசூத்திர உரையில்வருவதையும் இங்கே தரு

கின்றும். (ஸவிசேஷநீநி ஸவிசேநாரோநி என்னுஞ் சூத்திரவுரையில் வருவது) "தகுணஸம்விஜ்ஞாந பஹுவ்ரீஹி: அன்மொழியின் விசேடண மொழிக்குத் தொழிலோடு சம்பந்தமுள்ளதாக அறிதல் எந்த அன்மொழியில் உண்டோ அது தகுண........வ்ரீஹி. அச்சம்பந்தம் சமவாயம் சம்யோகம் என்ற இரண்டானும் கொள்ளப் படும். இங்ஙனமன்றி, உடைமை முதலிய பிறசம்மந்தமுறுவது அதகுண ஸம்விஜ்ஞாந பஹுவ்ரீஹி. அவற்றிற்குதாரணம் முறையே லம்பகர்ணோ ஹுங்க்தே=தூங்குசெவியன் உண்கின்றான். இங்கே உண்பவனிடத்தில் தூங்குசெவிகள் சம்பந்தப்படுகின்றன. இது சமவாய சம்பந்தம். 'த்விவாஸா: ஹுங்க்தே'=இரு ஆடையுடையவன் உண்கின்றான். இதில் உண்பவனிடத்தில் இரு ஆடையும் சம்பந்தப்படுகின்றன. சையோக சம்பந்தம். சித்ரகும் ஆநய=பலநிறம் பொருந்திய பசுக்களையுடையவனை அழைக்கிறான். இங்கே அழைத்துக்கொண்டு வருதலில் சம்பந்தப்படுகிறவன் உடையவன். பசுக்கள் அவனுடைய பொருள். அவை அவனோடு வருதலின்மையின் வினையோடு சம்பந்தப்படுதலில்லை. செவி ஆடைகளுக்கு உண்ணுந் தொழிலில் சம்பந்தமில்லையேனும் உண்பவனோடு குறித்த சம்பந்தங்களினாலே சம்பந்தப்படுதல்பற்றித் தற்குண சம்விக்ஞானவெகுவிரீகி எனப் படும் என்பது.

இங்ஙனங்கூறிய அன்மொழிப் பொருட்சம்பந்தத்தை நோக்கும் போது, அன்மொழிப்பொருள் தொகையாற்றலாற் பெறப்படுமேனும், ஆண்டு மியைபுடையதோர் மொழியைப்பற்றியே பெறப்படும் என்பது பெறப்படும். அன்மொழிப்பொருட்கு இயைபுவேண்டாமென்ற சிவ ஞானமுனிவரும், சூத்திரவிருத்தியில், "அற்றேல் ஆகுபெயர் விட்ட ஆகுபெயரும் விடாத ஆகுபெயரும் என இருவகையாயவாறுபோல, அன்மொழித்தொகையும் விட்ட அன்மொழித்தொகையும் விடாத அன் மொழித்தொகையும் என இருவகைப்படும்..........வட நூலார் விடாத அன்மொழித்தொகையைத் தற்குணசம்விஞ்ஞான வெகுவிரீகி என்றும் விட்ட அன்மொழித்தொகையை, அதற்குண சம்விஞ்ஞானவெகுவிரீகி என்றும் கூறுவர்," எனக் கூறுதலானும், அவ்வியைபும் ஆண்டுள

தாதல் பெறப்படும். சிவஞானமுனிவர், தற்குண............வெகுவிரீகிக்குக்காட்டிய உதாரணம் :—'அகாமுதல்' ..... 'னகரவீறு', அகரவீறு, புள்ளியீறு என்பன. அதற்குண............வெகுவிரீகிக்குக்காட்டியஉதாரணம் 'பொற்றொடி வந்தாள்', 'ஒண் ணுதல் கண்டாள்' என்பன. இவற்றுள் பின்னுள்ள இரண்டும் முறையே சம்யோகசம்பந்தமும், சமவாயசம்பந்தமுமுடையவாய் வருதலின் தற்குணசம்விக்ஞான வெகுவிரீகி ஆகின்றன. சிவஞானமுனிவர் தொழிற்சம்பந்தமாத்திரம் நோக்கிக்கூறினர்போலும். அது பாணினிசூத்திர உரையோடு மாறுபடுதல் நோக்குக. இம் மாறுபாட்டை நோக்கும்போது வடமொழியிற் சம்பந்தங்கொள்வாரும் தத்தங் கருத்துக்கேற்பக் கொண்டு உரைக்கின்றனர் என்பது புலனாகின்றது.

இனித்தொல்காப்பியர் ஆகுபெயர்ச்சம்பந்தங் கூறிய "தத்தம் பொருள்வயிற்றம் மொடுசிவணலும்—ஒட்பில் வழியாற் பிறிது பொருள் சுட்டலும்" என்னுஞ் சூத்திரத்தைநோக்கும்போது அவர் தொழிலியையை நோக்காது, ஆகுபெயர்க்கும் பொருளுக்குமே சம்பந்தங்கூறியதாகத் தெரிகின்றது. எங்ஙனமெனில்,'ஆகுபெயர், தம்பொருளோடியையுடைய பொருளோடு பொருந்துதலும், தம்பொருட்கியை பில்லாத பிறிதுபொருள்சுட்டலும் என இயைபைப் பொருளோடியைபு படுத்திக் கூறினமையின். அன்றி வினையோடு இயைபுபடுத்திக்கொள்ளப்படுமெனின் அதற்கேற்றசொற்களான் விளங்கக்கூறியிருப்பர்; அங்ஙனங் கூறாமையிற் பொருட்சம்பந்தமேகூறினர் என்பது துணிபு. இதனை நோக்காது தொல். சொல். குறிப்பாசிரியாவர்கள் செந்தமிழ் தொகுதி உக பகுதி கூ பக்கம் சஉசல் சேனாவரையர் ஆகுபெயர்க்கு இயைபு கூறிய "தத்தம் சுட்டலும்" என்னுஞ் சூத்திரத்துக்கு இலக்கணையை நோக்காது பொருள் கூறியது பொருத்தமன்றென்றது பொருந்தாது; குறிப்பாசிரியரவர்கள் கிரியைச்சம்பந்தமே நோக்கிக்கூறலின்,

இனிச் சேனாவரையர், "ஆகுபெயரும் அன்மொழித்தொகையும் ஒன்றெனவும், இயற்பெயர், ஆகுபெயர் எனப் பெயர் இரண்டாயடக்கும் வழிப்பொற்றொடி என்பது ஒருபெயர்ப்பட்டது. அதுவே அன்மொழித் தொகையாதலுமுடைமை எச்சவியலுள்ளுங் கூறப்பட்டது" எனவுங் கூறினர். அது வடநூல்விதியோடு மாறுபடுதலானும், வடநூல்விதியோடு, மாறுகொள்ளாமற் கூறலே, ஆசிரியர் மேற்கோளென

'அதனினியறல்' என்னுஞ் சூத்திரத்துத்தாமும் கூறினாதலானும், அவர்க்கது கருத்தன்றென்க, எனச்சிவஞானமுனிவருரைத்தமையையும் ஆராய்வாம்,

முனிவர், வடமொழியோடு மாறுபடுதலானும் எனக் கூறியதற்குக் காரணம் அன்மொழி தொகையாற்றலாற் பெறப்படும். சக்கிய சம்பந்தம் வேண்டாமென்பது நோக்கியே. தொகையாற்றலாற் பெறப்படும் அன்மொழிப்பொருளும் சம்பந்தமுடைய மொழிகளிடத்தேயே பெறப்படும் என்பது யாமுன்னுரைத்தவாற்றாற் பெறப்படுதலினாலும், வடமொழியோடு மாறுபடாமற் கூறல், வடமொழிக்குந் தமிழ்மொழிக்கும் ஒத்தவழியன்றிப் பிறவழிக்கூறல் பொருந்தாமையானும், அவர்கருத்துப் பொருந்தாமையுணர்க. வடமொழியில்வரும் அன்மொழித்தொகை தமிழில் வரும் அன்மொழித்தொகைபோலன்றித்தாம் எந்த எந்தப் பொருண்மேல்வருகின்றதோ ? அந்த அந்தப் பொருட்குரிய லிங்க விகுதியைப் பெற்றுவருதலினாலே தமிழில் வரும் அன்மொழித்தொகையோடு வேறுபாடுடையது. எங்ஙனம் பெற்று வருகின்றதெனின், வடமொழியிலே நீலகண்ட: (நீலகண்டன்) என்பது, நீலகண்டத்தை யுடையவன் எனவிரிந்து அன்மொழிப்பொருளை யுணர்த்துகின்றது. இங்கே நீல: (நீலம்) கண்ட: (கண்டம்)என்னும் இருசொல்லும் தொக்கு நின்று தொகையாற்றலினாலே, அன்மொழிப்பொருளையுணர்த்தி, அதன் மேல் தானுணர்த்தும் அப்பொருட்குரிய ஆண்பால் (பும்லிங்க) விகுதியைப்பெற்று நீலகண்ட: என வருகின்றது. ஆண்பாலில் வரும் வீதாம்பர:, என்பது பெண்பாலில் வீதாம்பரா எனவரும். தமிழில் வரும் பொற்றொடி என்னும் அன்மொழித்தொகை, தானுணர்த்தும் பொருட்குரிய விகுதியின்றியே நிற்கின்றது. விகுதிபெற்றுப் பொற்றொடியாள் என நிற்பின், அது பெயராகுமன்றி, அன்மொழித் தொகையாகாது. ஆதலின், இரண்டிடத்தும் வரும் அன்மொழித் தொகைகளும் சிறிது வேறுபாடுடையன. ஆதலின் இரண்டையும் ஒப்புக்கொண்டு இலக்கணங்கூறல் பொருந்தாது என்பதூஉம், வடமொழியோடு ஒப்பக்கோடல் ஒத்தவிடத்தன்றி. ஒவ்வாதவிடத்தன்று என்பதூஉம் உணர்ந்துகொள்க. இரண்டிடத்தும் வரும் அன்மொழித்தொகைகளும் சிறிது வேறுபாடுடையவெனத் தொல், சொல், குறிப்பாசிரி

யர் அவர்களும் தமது குறிப்புள் எழுதியிருக்கிறார்கள். அதனைச் செந்தமிழ்த்தொகுதி உசு. பகுதி கூ. பக்கம் சஉசு-ல் காண்க.

இன்னும் இவ்விகுதிவேறுபாடுகுறியாதே, சேனவரையர் தொகையைநோக்கும்போது, அன்மொழித் தொகை என்றும், பெயரை நோக்கும்போது ஆகுபெயரென்றும், கூறியிருப்பதே தக்கசமாதானமாதலின், அதனையும் ஈண்டு விளக்குவாம். 'பொற்றொடி' என்புழி, பொன், தொடி என்னும் அவ்விருமொழியும் தொக்கதொகையாற்றலினாலே, அன்மொழிப்பொருள் பெறப்படும் என்றும், அது இறுதிமொழியைப் படுத்துக் கூறப்பெறப்படும் என்றும், சேனவரையர் கூறுதலினாலே பொற்றொடி என்பது 'வந்தாள்' என்பதோடு தொடர்ப்பட்டு நிற்குமிடத்து, 'வந்தாள்' என்னும் வினைக்கும், 'தொடி' என்னும் பெயர்க்கும் இயைபின்மையின், அத் 'தொடி' என்பது, அவ்வினையோடியையுடைய 'அணிந்தாள்' என்னும் வேறுபொருளையுணர்த்தி நிற்கின்றது என்பது பெறப்படும். அப்பொருள் அன்மொழிப் பொருளாதலின் 'பொற்றொடி' அன்மொழிப்பொருளையுணர்த்திவந்ததொகைமொழி எனப்படும். அவ்வன்மொழிப்பொருள் 'தொடி' என்னும் இயற் பெயரினின்றும் ஆகியபொருளாதலின் 'பொற்றொடி' இருபெயரொட்டாகுபெயரெனவும் பட்டது. சுருங்கக்கூறில், 'பொற்றொடி' யென்னுந்தொகை யாற்றலாற் பெறப்பட்ட அன்மொழிப் பொருளே, 'பொற்றொடி' என்னும் இருபெயரொட்டில் வந்த ஆகுபெயர்ப்பொருளுமாதலின் இரண்டுமொன்றென்பதே சேனவரையர் கருத்தாம். ஆதலாற்றான் தொகையை நோக்கும் போது அன்மொழித்தொகையென்றும், பெயரைநோக்கும்போது ஆகுபெயரென்றுங் கூறினர். இதில் வரும் வழு யாது என்பதையாம் அறியேம். தமிழில்வரும் அன்மொழித்தொகைக்கும், இருபெயரொட்டுக்கும் சிறிதும் வேறுபாடு காணப்படாமையின் இங்ஙனம்கூறலே பொருத்தமாம். தொல்காப்பியர் 'இருபெயர்' எனக் கூறாது இருபெயரொட்டு எனக்கூறியதை உற்றுநோக்கினார்க்குத் தொகையும், ஒட்டும் ஒன்றென்பது பெறப்படும். ஒட்டுதல்—சேர்தல்=தொகுதல், ஒட்டெனக்கூறியது இருமொழியும் பிரிந்துநின்று ஆகுபெயர்ப்பொருளை உணர்த்த மாட்டாமை கருதி, அங்ஙனமே அன்மொழித்தொகையும் பிரிந்துநின்று அன்மொழிப்பொருளையுணர்த்தா. ஆதலால் இரண்டும் ஒன்றென்றற்கு

வருந்தடையென்னையோ? கிளிமொழி, தகரஞாழல், வடகிழக்கு என்னும் அன்மொழியுள், மொழி, ஞாழல், கிழக்கு என்பன பிரிந்துநின்று அன்மொழிப்பொருளையுணர்த்தமாட்டாமையும் அங்ஙனமே, அவ்வாகுபெயர் வேறெனக்கூறுவார் அவ்வாகுபெயர்க்குக்காட்டிய மக்கட்சுட்டு, அறுபதம், வகரக்கிளவி முதலியனவும், பின்மொழிகள் தனித்துநின்று குறித்த ஆகுபெயர்ப்பொருளையுணர்த்தமாட்டாமையும் அறிந்துகொள்க. இனி, பசுங்கிளி, பூங்கொடி முதலிய அன்மொழிகள் பிரிந்துநின்றும் உணர்த்துமன்றோவெனின், அவைபோன்ற சிலமொழிகள் வழக்காற்றில் இருவேறுவகையால் (அதாவது ஓரிடத்துத்தொக்கும், பிறிதோரிடத்துத் தனித்தும்) உணர்த்துமாற்றலுள்ளனவாதலின், அக்காரணம் பற்றித் தொகையிலக்கணம் பிறழா; தொக்கு வரும்வழித்தொகையிலக்கணமமைதலின். இங்ஙனம் கிளி என்றவிடத்து ஆகுபெயரென்றும், 'பசுங்கிளி' என்றவிடத்து அம்மொழியே தொகையென்றும் கூறப்படுதலும் ஆகுபெயரும் அன்மொழியும் ஒன்றென்பதற்கும் தக்கசான்றும். பாயினமேகலை, வாரேறுகொங்கை, முற்றுமுலை, கைபரந்துவண்டிசைக்குங்கூந்தல், என்பனவற்றை வடமொழிநோக்கிப் பிரயோகவிவேகநூலார் அன்மொழி என்பர். தமிழில் இவை அன்மொழியாகா. ஏனெனில், தொகைமொழியில் அன்மொழிப்பொருள் வருதல்நோக்கி, அத்தொகைமொழிகளை, அன்மொழித்தொகையெனத் தொகைகளோடு ஒருங்குவைத்து எல்லா ஆசிரியரும் ஓதுதலின். 'பாயினமேகலை' முதலாயின தொகையன்றித்தொடர் ஆதலின், இவற்றை அடையடுத்துநின்ற ஒருமொழியாகக்கொண்டு ஆகுபெயரென்றலே பொருத்தமாம். பேராசிரியரும், 'பாயினமேகலை', ஒருசொல்லாதலின் ஆகுபெயரென்றதும் இக்கருத்து நோக்கியே என்க.

தமிழ்மொழி இலக்கணத்தையும் வடமொழியிலக்கணத்தையும் ஒப்புநோக்காது வடமொழி இலக்கணங்களைத் தமிழிலும் புகுத்திவிட வேண்டுமென்றும், அப்படிக்கூறினல் வடமொழியிலக்கணமுணர்ந்தவர் எனத்தம்மை மதிப்பார் என்றுங்கருதியே, இவ்வாறு அன்மொழித்

தொகைக்கும் ஆகுபெயருக்கும் வடமொழிநோக்கி வேறுபாடுகூறித் தமிழிலக்கணத்தை பிறழச்செய்தனர் என்பதும், சேனவரையர் இரண்டையும் நன்கு ஆராய்ந்து ஒப்பனவற்றை ஒப்பக்கூறியும், ஒவ்வாதவற்றை விடுத்தும் கூறலின் அவருரையே கொள்ளத்தக்கன என்பதும் எமது கருத்தாகும், இருபெயரொட்டாகுபெயரும் அன்மொழியும் ஒன்றென்பதில் ஒத்தகருத்துடையார், உரையாசிரியர் சேனவரையர் மாத்திரமன்று. பரிமேலழகர் அடியார்க்கு நல்லார் முதலியோருமாம். "கனங்குழை" ஆகுபெயர் என்பர் பரிமேலழகர். 'அருந்திறல்'-இராமன் அது அன்மொழித்தொகை ஆகுபெயர் (சிலப்பதிகாரம்: புறஞ்சேரி—௬௦கூம்-பக்க உரை) என்பர் அடியார்க்குநல்லார் 'மகரப்பகுவாய்' முதலியவற்றை (திருமுரு—௨டும் அடி உரை) நச்சினர்க்கினியரும் மயங்கி ஆகுபெயரென்பர்.

இதுகாறும் கூறியவாற்றால், ஆகுபெயரன்றி, அன்மொழித்தொகையும் உற்றுநோக்குவோர்க்குச் சக்கியசம்பந்தம் பெற்றேவருகின்றதென்பதூஉம், வடமொழியில்வரும் அன்மொழித்தொகைக்கும், தமிழில் வரும் அன்மொழித்தொகைக்கும் சிறிதுவேறுபாடு உண்டென்பதும், வடமொழியில்வரும் அன்மொழித்தொகைக்கும், இலக்கணைக்கும் வேறுபாடுஇருத்தல்போலத் தமிழில்வரும் அன்மொழித்தொகைக்கும் ஆகுபெயர்க்கும் வேறுபாடின்மையிற் சேனவரையர் ஒன்றெனக்கூறியதே பொருத்தமுடையதென்பதும், சேனவரையர்க்கன்றி உரையாசிரியர், பரிமேலழகர், அடியார்க்குநல்லார் முதலியோர்க்கும் ஒன்றென்பது கருத்தென்பதூம் பெறப்படுதல் காண்க.

இங்ஙனம்,

சி. கணேசையர்.

342 குமரமே கொம்பி லாத மிருகமுங் குழவுங் கூறும்;
இமைமயூ ரம்நி மைப்பே ரெண்குட னற்பம் நாற்பேர்;
அமரநோய் பொருட்சொ லோர்நூல்; அம்பிகை யுமைகா ளிப்பேர்;
கமரெனு நாம வெள்ளில் காய்நில வெடிப்பு மாமே. (உச)

343 ஆமலகந் தானெல்லி யவிரொளிப் படிக மும்பேர்;
ஏமமே மயானங் காட்டம்; ஏமாப்பே யிறுமாப் பேமால்;
ஊமையே கீரி மூகை; உம்மைமுன் பின்பி றத்தல்;
மாமையே நிறம்வ னப்பு மாழ்கிரக் கக்கு றிப்பாம். (உரு)

344 கூம்பலே குமிழ்கூம் பற்பேர்; கோமள மிளமை பாலன்;
சோம்புசோ பம்ம ழுங்கல்; [1]தமிதுளி யுடன்த ணித்தல்;
பாம்புபாந் தள்ள ணைப்பேர்; [2]பம்புடுக் குத்தி ரப்பேர்;
நாம்பல்சொற் பேரி ளைத்தல் நவிற்றுட னெலிநோ யாமே. (உசு)

345 விமானமே யூர்தி வெய்ய விண்ணவ ருலகெ னும்பேர்;
தமாலமே பசும்பி டிப்பேர் தழைத்த[3]பச் சிலையி ரண்டாம்;
இமாசலம் பனிநீர் மேரு; இமமேதண் பனிபொன் னின்பேர்;
சமாதியே விளிவு யோகம்; சம்பையோர் தாளம் மின்னல். (உஎ)

346 குமரியே கௌரி கன்னி கொற்றவை யாற்றி னென்றே
டமர்வரி கற்றூ ழைப்பேர் அழிவின்மை [4]யுடனே ழேபேர்;
சுமடுசும் மாடு மூடம்; தோமரம் படையோர் வாச்சியம்;
கமலநீர் செம்ப டாமுங் கடிகமழ் முளரிக் கும்பேர். (உஅ)

347 ஆம்பல்தீங் கள்ளே கவ்வை யல்லியங் கயம்வேய் திங்கள்
தூம்புசே ருதுங் கொப்பே சொற்றவெண் பண்ணொன் பான்பேர்;
காம்புவேய் மலர்த்தாள் பட்டுக் கடிமலர்க் கொம்பே நாற்பேர்;
சாம்பலே பழம்பூக் கூம்பல்; தமிழ்[5]தமி ழினிமை நீர்மை. ()

(பி-ம்.) [1]தமிதுணிவுடன். [2]பம்பென்ப நெருக்கம் விண்மீன் பயின்றருத் திரமும் பண்ணும். [3]பா சிலைபுஞ் சாற்றும். [4]காளை யேழ்பேர். [5]அமிழ் தினிமை,

யகரவெதுகை.

353 [1]மணிதிகழ் தரங்க வாரி சுவறிட வயங்கு செம்பொற்
றிணிதிகழ் மேருக் குன்றங் குலுங்கிடச் சிறக டிக்கொள்
தணிதிகழ் மயூர மூருஞ் சண்முகன் றாளைப் போற்றி
யணிதிகழ் யகார மாய வெதுகைப்பா வறைய லுற்றாம். (க)

354 ஆய்தமே ஈளம் புள்ளி யக்கர மிவையி ரண்டாம்;
காய்தலே புலர்வு வேட்டல் கடுங்கோப மிம்மூப் பேரே;
வேய்தலே சூடல் மூடல் வீடுகோ யிற்பொன் [2]நீட்டல்;
பாய்தலே பரப்புப் பாய்தல்; பயினேபொய் பிசின் [3]பயிற்சி. (உ)

355 [4]இயமமே வார்த்தை யோசை யீயேவாச் சியமே நாற்பேர்
பயன்மிகு மறிவி லாபம்; பயிர்ப்புக்குச் சிதம்ப யிற்றல்;
அயர்தலே [5]அயர்ச்சி செய்தல்; [6]ஆய்வெறுட் பம்வ ருத்தம்;
வயவனோர் புள்ளை வீரன் வயங்கு கா தலற்கும் பேரே. (ங)

356 [7]வயாவென்ப கருப்பங் காதல் மாழ்கிய பிணியே மூப்பேர்;
பெயரென்ப பெருமை நாம மபிதானப் பேரும் போற்றும்;
வியரென்ப தறிஞர் வேர்வை; வீகீக்கம் பூப்புட் சாவாம்;
அயர்வுசோம் புடன்வ ருத்தந் தெளிவின்மை [8]யிடமென் றாமே. ()

357 வியலென்ப வகலங் கானம் மேம்பாடே பெருமை நாற்பேர்;
மயலென்ப மயக்கஞ் [9]செத்தை மருட்டுபேய் நெருப்பென் றாகும்;
செயலென்ப வினையே காவல் சேறுட னொழுக்க மென்றாம்;
முயலென்ப சசமு யற்சி; மொய்ம்புதோள் வலிபெ யிற்பேர். (ரு)

(பி-ம்.) [1]மணிதிகழ் தரங்க வாரி சுவறிட வடிவே றெட்ட—திணிதிகழ் சிகரத் திண்டோட் சேவலங் கொடியோற் போற்றிப்—பணிதிகழ் நுணங்கி யோர் சொற் பண்புயர் மெல்லி னத்தி—னணிதிகழ் யகார மாய வெதுகையின் கவி யைச் சொல்வாம். [2]வேட்டல். [3]கூ டற்பேர். [4]இயமமீ வார்த்தை யோசை யியவர் வாச் சாவா வன்பாம். [5]குயிற்ற லாய்வாம். [6]ஆய்வென்ப வருத்த நுட்ப மாய்தலென் றோதற் கும்பேர். [7]வயவென்ப. [8]பகல நாற்பேர். [9]செற்றை.

358 அயிலென்ப நாஞ்சில் கோரை [1]யழகுடன் கூர்மை வேலாம்;
கயிலென்ப பிடர்த்த லைப்பேர் கலன்கடைப் புணர்ப்பு மாகும்;
குயிலென்ப துளைமு கிற்பேர் கோகில மிம்முப் பேரே;
எயிலென்ப [2]மதிள்பு ரப்பேர்; இயைபொ வுறுப்பி சைப்பாம். ()

359 அயிரேசர்க் கரைநுண் மைப்பே ரான்றநுண் மணற்கும் வைக்கும்;
செயிரேகுற் றஞ்சி னத்தல்; தேயம்நா டுடல்[3]தி ருட்டாம்;
வயிரேகூர் மைப்பே ரூதுங் கொம்பென வழுத்தற் பாற்றே;
துயிலேதூங் கற்பேர் மாளல்; தோயுறல் புணர்தல் மூழ்கல். (எ)

360 மயிலையே மீனி ராசி மலர்ந்திடு மிருவாட் சிப்பேர்;
கயினியே யத்த நாளுங் கைம்மையு மிருபேர் காட்டும்;
குயிறலே [4]குதித்தல் செய்தல் கூவல்நீர் குடைதல் நாற்பேர்;
வயினிடப் பேர்வ ரம்பே வயிறுடன் பிணையென் றுமே. (அ)

361 [5]வையம்யா மூரோணி பண்டி வயங்கலா னேறே பூமி;
சையகஞ் சயனம் வெற்பு; சையோரக் கரமி கழ்ச்சி;
நையரி வாளே துக்கம் நைதலே மிகுதி நாற்பேர்;
தெய்வமூழ் கடவு ளின்பேர்; தீயோர்வே தியரே தீம்பர். (௯)

362 தையேபோர் மதிநூல் நீவல் தாளச்சீர் தைத்த லம்பேர்;
மெய்யேயொற் றுடல்மெய் கூட்டம்; [6]வியஞ்சா தல் வில்ம ழுப்பேர்;
பையேமெத் [7]தென்றல் பைம்மை பணிப்பட மழகே [8]நாற்பேர்;
[9]ஐயேயே திருமல் சுவாமி யசைச்சொல்மந் தாரம் பொள்ளாம். ()

363 உய்யலே பிழைத்த லூஞ்சல்; உயிரென்ப காற்றே சீவன்;
ஐயேபெண் ணார்க்கை காளி யம்பிகை [10]யுடனு சாள்பேர்;
[11]தொய்யலே யெழுதல் சேறு துயரொழில் மகிழ்வோர் பூடாம்;
பையுள்நோய் சிறுமை யின்பேர்; பையங்கோ ளைப்பேர் கூடை. ()

(பி-ம்.) [1]அழகிரும் பேவேல் கூர்மை. [2]திரிபு ரப்பே ரிலங்குறு மதிலு மாமே. [3]விண் சோரம். [4]செறிதல் செய்தல் குதித்தல்கூ வல்நீர் தோய்தல். [5]வையமா னேறு ரோணி மாநிலம் விளக்க மூர்தி—வெய்யயாழ் மாகம் பண்டி விளங்குதே ரெண்பேர் வைக்கும். [6]வியமழு வேசி லைப்பேர் மேவலுங் கொள லும் வைக்கும். [7]மெத் தெனல்பை. [8]யைம்பேர். [9]ஐயேயோ. [10]யாச்சி யா சாள். [11]தொய்யலோர் பூடே சேறே துயருழ வெழின்மி கிழ்ச்சி—தையலார் முலையித் தீட்டல் குழைவெனச் சாற்றென் பேரே.

364 வாயிலேம் புலன்றி றங்கா ரணந்துதே மனைக்க டைப்பேர் ;
ஆயுதம் படையே [1]கூத்துப் பயிலிட மிரண்டு மாகும் ;
[2]தீயரு நரகே தீங்காம் தித்திப்புந் தழலுஞ் செப்பும் ;
[3]மாய்தலே மறைவே சாவாம் ; வாய்க்காலே மகநாள் நீர்க்கால். (கஉ)

365 பாயசம் படரோர் பூடு மட்டபாற் சோறும் பன்னும் ;
[4]வாயிடம் வாய்மை யூறுங் குழல்வரு வாய்வாய் வாக்காம் ;
சாயலென் பதுவ னப்புச் சமம்நுண்மை மேம்பா டென்றும் ;
மாயமே யுயர்தல் நீளம் வஞ்சம்பொய் [5]தொகையைம் பேரே. (கங)

366 நாயென்ப சுனகஞ் சாரி ; [6]நயம்நன்மை மகிழ்ச்சி மேதை ;
தாயமே யுரிமை யாடுங் கவற்றுருள் தமரே மூப்பேர் ;
தோயமே புவனம் நீராம் ; சுயம்பேதா னுதல் மூந்தை ;
ஞாயமே வழக்கம் நன்மை ; நாயகம் தலைமை மைபம். (கச)

367 வேயேயாழ் கவனம் மூங்கில் வேய்தலொற் றுத்து ளைப்பேர் ;
சாயேகோ ளைசா யற்பேர் ; தையல்பெண் ணழகே காந்தி ;
ஆயேதாய் வருத்த மாய்தல் ; ஆயுள்வா ணுள்நோய் தீர்ப்போன் ;
சேயேவே ளிளமை தூரஞ் சிவப்புச்செவ் வாய்ம கப்பேர். (கரு)

368 நெய்தலே வேலை சாரும் நிலமோர்பூச் சாப்ப றைப்பேர் ;
பொய்தலே மாதர்கூட்ட மவராடல் மீள்தல் [7]போற்றும் ;
பைதலே [8]சிறுமை பைம்மை ; பயோதரம் [9]புயல்பா ரப்பேர் ;
கைதையே பழனந் தாழை ; [10]கயவுகீழ் பெருமை கள்ளம். (கசு)

369 [11]அய்யனே மூத்தோன் சாத்தன் அப்பனிம் மூப்பேர் செப்பும் ;
வெய்யவன் கொடியோன் பானு விரும்பினன் பேரும் வைக்கும் ;
கையனே கொடுக்கும் பாரி [12]கருதிற்கீழ் மகற்குங் காட்டும் ;
எய்கணை யெய்தல் பன்றி ; [13]இயாமந்தெற் கிரவே சாமம். (கஎ)

(பி-ம்.) [1]கூற்றுப். [2]தீயழல் தேந்தீங் கூழ்த்தல். [3]மாய்வென்ப. [4]வாயிடை. [5]தோகை யையபேர். [6]நயமறி வின்ப நியாய நன்றியுங் களிப்பு மாமே. [7]பொய்ம்மை. [8]சிறுமை யின்பேர் புற்கென்ற லதுவும் பன்னும். [9]மூலைகார் பாரம். [10]கயவுகீழ் பெருமை மேன்மை கள்ளமென் றோத லாமே. [11]ஐயனே. [12]காவலன் கீழ்மக் கட்பேர். [13]யாமந்.

370 ஐயமே பிச்சை யேற்கு மோட னு மானம் பிச்சை ;
மொய்செருக் களங்[1]தி ரட்சி மூசுவண் டியானை தாயாம் ;
மையமே நடுவெண் ணெய்ப்பேர் ; வயமாச்சிங் கந்தோல் வேங்கை;
குய்யெனும் [2]பேருள் வைப்புங் கொழுமணப் புகையு மாமே. (கஅ)

371 அய்யரே முனிவர் தேவர் ; அயிறலே செய்த லுண்டல் ;
மெய்யர்வே தியர்தி டத்தோர் ; வியாதனோர் முனிவே டன்பேர் ;
நெய்யவி யாடை நெய்தல் நிகழ்த்துசித் திரைநாள் முப்பேர் ;
ஐவிர லத்த நாட்பே ரங்குலி யைந்து மாமே. (கசு)

372 இயக்கனே நாயே யக்கன் ; ஈயேயோர் பறவை யீதல் ;
உயிர்த்தல்மூச் சுடன்வ ருத்தம்; [3]உய்த்தலோட் டுதல்பி ழைத்தல் ;
பயத்தலே யொன்றைத் தன்கைக் கிடைத்தனு மொளியும் பண்ணும்;
மயக்கமே தெளிவி லாமை விரகனோ யதற்கு மாமே. (உ0)

373 சயிந்தவந் தலையிந் துப்புத் தலைமைவா சிக்கும் பேரே ;
[4]வியங்கோள்மா லியானை மேவல் ; வியாளமே புலிபாம் பின்பேர் ;
பயம்பென்ப பள்ளம் யானைப் படுகுழி யிரண்டும் பண்ணும் ;
இயங்கலே நடத்தல் காந்தி ; இயம்பல்சொல் [5]பழிமொ ழிப்பேர்.

374 இயவுகா டேர்வ ழிப்பேர் ; இயல்பேநற் குணமொ ழுக்கம் ;
வயல்வெளி வினையு முஞ்செய் ; மயிடமே பெருமை மேதி ;
[6]இயல்கடை யகலஞ் சாய விசைத்திடுந் தமிழே நாற்பேர் ;
[7]வயறுரை கயிறே ருக்கி ; வாய்த்தலோ ரசைநு ணுக்கம். (உஉ)

375 அயமென்ப தடாகம் நீரே யாடுவெம் பரியி ரும்பு
முயல்நிலம் விழவு சேறு மொழிந்த[8]சூ தனப்பேர் பத்தாம் ;
நியமமா லயமூர் வீதி நிச்சயம் நியதி யீமம் ;
[9]அயனமே யாண்டிற் பாதி நடவையென் றிரண்டு மாமே. (உங)

(பி-ம்.) [1]தெருட்சி. [2]பேர்ம றைப்புங். [3]உய்த்தலோ. [4]வியங்கோ ளென் பதுவே யானை மேவலுங் கொளலும் வைக்கும். [5]வழிமொ ழிப்பேர். [6]இயலிசை யகலஞ் சாய னடைகுண மியற்ற மிழ்ப்பேர். [7]வயறுநாண் கட்டி னுமம் ; வாய்த்தல்வாய்த் தசைநு ணுக்கம். [8]சூ தனர்பேர். [9]வியமிடு தலமங் காடி விகங்கமொன் பான்பே ராமே.

376 கயமென்ப குளநோ யாழுங் களிறுகீழ் பெருமை [1]யூது
றுயர்சின்ன மிளமை தேய்தல் [2]ஓதுமொன் பான்பே ரேயாம் ;
பயமென்ப சுதைநீ ரச்சம் பால்புயல் [3]துணம்வி தாதா ;
புயமென்ப முலையுந்தோளும் ; பொய்யே[4] பொத் துப்போக்கப்பேர்.

377 ஆயமே கவற்றி லாயம் ஆதாய மகளிர் கூட்டம்
தாயொடு நீளஞ் [5]சுங்கஞ் சாற்றுமல் லரியே யேழ்பேர் ;
[6]காயமே விண்வெங் காயம் பெருங்காய முடல்பண் கார்த்தல் ;
நேயம்நெய் யெண்ணெய் யன்பே நிகழ்ந்தநன் மைநாற் பேரே. ()

378 வயம்வலி தொந்த மேடம் வாசிபுட் பொதுமருப்பு
முயலுட னிரும்பே [7]நீரே மொழியுறு மொன்பான் பேரே ;
சயமுயர் வெற்றி மாலை சருக்கரை யிரவி யல்லி ;
குயமுலை யரிவா ளின்பேர் கொழுமைசே ரிளமை யாமே. (உசு)

379 பயிரொலி பயிலே பைங்கூழ் பறக்கும்புள் மிருகங் கூடிப்
பயில்குர லோர்வி தங்கட் டுறும்வழக் கைம்பேர் பன்னும் ;
வயிரமே கிம்பு ரிப்பூண் வச்சிர மணியே செற்றம்
அயிலொடு குலிசம் வன்மை யான்றது ரியமேழ் பேரே. (உஎ)

380 எய்ந்தசீர் பெறும்ய கார வெதுகைபி னிசைக்குஞ் செய்புள்
[8]வாய்ந்தவொன் றெழிமூ வொன்பா னென்னவே வழங்கச் செய்தான்
காய்ந்தசூ ரறமு ருக்குங் கந்தவேள் பாதம் போற்றும்
ஆய்ந்தசீர்ச் செந்தின் மேவு மருமருந் தையன் றனே. (உஅ)

[மிகை.] 1. மயன்மயல் வினைஞன் றச்சன். 2. நோய்வென்ப வருத்தம் நோயே நொசிவெனு முப்பேர் செப்பும். 3. தோய்வென்ப பிரைசேர் வெண்பால் புணர்தனீர் தோய்தற் கும்பேர். 4 வாயரே வுழைய ராயர். 5. மயிர் வினை மஞ்சி கன்பேர் மயிர்குறை கருவிக் கும்பேர். 6. இயறலே முத்தி போதல். 7. பெய்தலே கொடுத்தல் தூவல் ; பேய்மண்ணை யில்லை யென்றும். 8. மொய்தலே யிறுத்த லீதல் மூடுத லதுவு மாமே. 9. வெயிலொளி யென்று மின்பேர். 10. செய்வயல் வினைசெய் தற்பேர். 11செய்யலே யொழுக்கஞ் சேறு செய்வினை காவ லாற்பேர் 12. காவதங் காக்கை காதம். 13. வியற்ப மா செறித லின்பேர் வெருவுதற் கும்வி ளம்பும்.

யகரவெதுகை முற்றும்.

(பி-ம்.) [1] ?மண்மை. [2]ஓதபி தானம் பத்தாம். [3]குளம்? [4]போதல். [5]சுங்கம். [6]காயம் விண் கறிவெண். [7]நீள, [8]வாய்ந்தவை யாறென் றோத மதியுளோர் மகிழ்ச்செய்தான்,

ரகரவெதுகை.

381 செகமுழு திறைஞ்சுந் தொல்லைச் சிகரவெற் பரசன் தந்த
மகவுமை பயந்த செவ்வேள் [1]வள்ளிநா யகிதன் கேள்வன்
குகனெடு வடிவேற் றாங்குங் கொற்றவன் [2]மலர்த்தாள் போற்றித்
[3]துகளறு ரகார மாய வெதுகையின் றொடையைச் சொல்வாம். (க)

382 சுரதமே மதநீர் சூதஞ் சொன்மருந் திழிசா ரப்பேர் ;
[4]இரதநீ ளம்பு ணர்ச்சி சுவைசூத மிரதம் வீணை ;
பரதமோர் சாத்தி ரப்பேர் [5]பாரதப் பேரோர் கண்டம் ;
விரதம்நீர் தவம்வட் டித்தல் ; வீரட்டா ணங்கூத் தோரூர். (உ)

383 சரகென்ப தேவர் தம்முன் தருவுதிர் சரகே சோறும் ;
சிரகமே காகந் தூறல் சென்னியிற் கோடுக் கும்பேர் ;
கரகமே துளிநீர் கங்கை கமண்டல மாலாங் கட்டி ;
தாரகமோர் திப்ப ரிப்பேர் ; சூரணம் பொடியே கந்தம். (ங)

384 மரபென்ப முறைமை தொன்மை மருவுநற் குணங்கு டிப்பேர் ;
சரபமெண் காற்புள் ளொட்டை வரையாடு தானே முப்பேர் ;
பரதரே திமிலர் நாய்கர் குருகுலத் தோர்க்கும் பண்ணும் ;
வரதநற் றுகில்க டாக்கம் ; மருமானே மருகன் சேயாம். (ச)

385 முரண்வலி பகைபோர் தூக்கின் மொழியுறுப் பொன்றே நாற்பேர் ;
கரணமே [6]கல்வி கூத்தோ டகந்துணை கார ணப்பேர் ;
அரணெயில் கவசங் காடே யடிதொடுங் கழலே மஞ்சம் ;
சரணமே மறைபு கற்றோ ளைகப்பிலி தாளே முப்பேர். (ரு)

386 [7]அரிதல்பிற் கிடலே கொய்தல் ; அரிட்டங்கள் காக்கை கேடாம் ;
பரிதலே யறுத்த லன்பு பகர்குற்ற மிரங்க னாற்பேர் ;

(பி-ம்.) [1]மருவுயர் கடம்பின் நிண்டோட். [2]நிருத்தாள். [3]துகளற விரிகார. [4]இரதமே புணர்வியாழ் சூத மினிமைதே ரணைநா ணீளம். [5]பார்தபு. [6]கணிதங் கூத்து மனமாதி கலவி செய்கை—திரணல கலைத்துணைக்கா ரணமெனத் திகழா றேபேர். [7]அரிதலே பிறகி டற்பேர் கொய்தற்கு முறையற் பாலாம்.

வரித்தலே வரித்த லூர்தல் ; வரைதலே கொளனீத் தற்பேர் ;
இரிதலே நெரித லின்பேர் எற்றுறு பயமு மாமே. (௬)

387 [1]பரிமுத னுள்சேண் சும்மை பருத்திமாப் பெருமை வேகம் ;
அரிதமே பசுமை திக்காம் ; ஆர்கலி புயல்க டற்பேர் ;
சொரிதலே பொழித லீட்டல் சுழன்றிடல் முப்பேர் செப்பும் ;
[2]நெரிதால் பிறகி டற்பேர் நெருங்குற முருங்க லாமே. (௭)

388 திரிபுரி சார டைப்பேர் சிறந்தமுப் புரமுஞ் செப்பும் ;
பரிபவ மதிக மீரம் பழித்திடு மிகழ்ச்சி யும்பேர் ;
[3]சரிதையே பூசை பிச்சை சாத்திர மிம்முப் பேராம் ;
தெரிசனை முகுரங் காணல் ; தெரித்தலே சொற்றீட் டற்பேர். (௮)

389 அரிசனந் திருமாற் றொண்டு மழகெறி மஞ்சட் கும்பேர் ;
திரிசரம் பகழி யானைப் பிறப்பெனச் செப்பற் பாற்றே ;
பரிசன மேவல் செய்வோர் பற்றினர் துவள லும்பேர் ;
சரிசமங் காவ லைப்பேர் சாற்றுறு வழியு மாமே. (௯)

390 உரையேபொன் கிளவி நாமம் ஓசை உரிஞ்சு தற்பேர் ;
புரையேயில் லுயர்வு குற்றம் புழைபுட லுவமை யும்பேர் ;
சுரையேகள் புழையம் பின்கூர் சுரையாவோ டதன்மு லைப்பேர் ;
நரையேயே றிவுளி வெள்ளைநாட்டிய கவரி நாற்பேர். (௧௦)

391 மரையேகான் குதிரை தேரை வனசமென் றேதல் முப்பேர் ;
விரையேபீர் வெண்டல் வேகம் விளங்குப சாரம் நாற்பேர் ;
சிரையேவா னரமு சுப்பேர் [4]செப்பிய நாம்புஞ் சொல்லும் ;
வரையே[5]கை வரைநெல் வெற்பு மட்டிறை கடனீர்த் தீரம். (௧௧)

392 காமேகை கிரண நஞ்சம் கழுதைகார்க் கிளியி ருத்தல் ;
சிரமேசென் னிப்பே ரோடே செப்புறு நெடுங்கா லப்பேர் ;

(ஷ-ம்.) [1]பரியேசேண் முதனுள் சும்மை பருத்தியே விரைவு செல்வம்—விரிகூர்தன் மாவ ருத்த மிகுதிகாழ்த் தல்க றுத்தல்—திரிவேயில் பெருமை பாது காத்தல்பேர் இகழ்பன் மூன்றும். [2]நெரிதல்பிற் கிடல்நெ ருங்கல்; சோஞ்செய் குற்றம் போழ்தாம். [3]443-ம் செய்யுளில் இரண்டாமடியைக் காண்க. [4]சிதைத் திட னாம்பேயென்றும். [5]கை வரைவெற் பாழி மட்டிறை நெல்வேய் தீரம்.

புரமேமெய் புரிமூன் றூற்பேர் ; புரவலன் வள்ளல் வேந்தன் ;
உரமேமார் பூக்கம் ஞான மோதுறும் வலிநாற் பேரே. (கஉ)

393 பரமென்ப கவசஞ் செய்தி பழமைமெய் கலனை யத்தி ;
குரமென்ப பரிக்கு ளம்பும் கோணலு மெனவி ரண்டாம் ;
சரமம்பு மணியின் கோவை [1]தாமமோர் நூலு னாற்பேர் ;
சுரமென்ப தடவி மார்க்கஞ் சொர்றநோ யிசைநாற் பேரே. (கங)

394 அரவநூ புரம்பாம் போசை யாயில்தூங் குமவி ருக்கம் ;
குரவமே குதிரை மேல்வாய் கோவிதா ரங்கோட் டப்பேர் ;
சரவண மறுமு கத்தோன் சனனங்கா யானா னாற்பேர் ;
பரவலே தொழல்ப ரத்தல் ; பரித்தலே பொறுத்த லன்பாம். (கச)

395 இரவென்ப திரவி ரத்தல் ; இராசிய மறைவே யோனி ;
பரவைவா ருதிப ரப்பே பங்கய மாதின் கூத்தாம் ;
குரவையே கடலோர் கூத்து ; குராங்கியே சிவன்வெண் டிங்கள் ;
தரவேயோர் பாவு றுப்புத் தலைவனுத் தரவே முப்பேர். (கரு)

396 புரசுவாம் பரிக்க ழுத்திற் புரிகயி றொருமு ரப்பேர் ;
அரசுமன் னிராச்சி யப்பேர் ; அரசன்பூ பதிவி யாழம் ;
பிரசமே யளியுங் கள்ளும் பேசுதேன் றேனீ யும்பேர் ;
முரசமுத் திரட்டா திப்பேர் மூழ்க்குமும் முரசு மாமே. (கசு)

397 அரம்பையே கதலி தெய்வ வாயிழை யவர்க்கு மேற்கும் ;
[2]குரம்பைமெய் சிறுகு டிற்பேர் ; குருளையே மழவு குட்டி ;
முரம்புமே டொடுகற் பாறை முதிர்பால் கழிநி லப்பேர் ;
பிரம்புவேத் திரம்நெய் மூங்கிற் பெருங்கட லரிசி யைம்பேர். (கஎ)

398 முருந்திற கடிக்கு ருத்தே முறியே மூத் தேகு ருந்தாம் ;
குருந்தொரு தருவே [3]தொத்தே குருந்துமென் றறைதல் முப்பேர் ;
விருந்தினி யுவர்வ ரத்தும் புதுமையும் விளம்பற் பாற்றே ;
[4]மருந்தமு தநும ருந்தாம் ; வரிக்கடை மின்மினி வண்டாம். ( )

(பி-ம்.) [1]சமரோர்நூல் கணைநா. [2]குரம்பையே யுடலி சைப்பேர் சிறு குடிற் பேருங் கூறும். [3]கொத்தே. [4]மருந்துபுற் புதர்வா னேரு னிரதமும் வகுக்க லாமே.

399 கரும்பென்ப சுரும்பே கன்னல் ; காடகங் கபடந் தூசாம் ;
குரும்பையே தென்னம் பாளை புற்றுஞ் சோ றெனவுங் கூறும் ;
நரந்தமென் பதுநா ரத்தை நாறுங்கத் தூரி காக்கை ;
சுரும்கையே [1]கரந்து பண்ணுங் கற்படை நுழைவாய் தற்பேர். ()

400 பூரமே பொன்கற் பூரம் புகலோர்நாள் [2]பூரா னுற்பேர் ;
வாரம்நீர்க் கரையோ டன்பே மலைச்சாரல் கிழமை பங்காம் ;
சாரமே கிரக சாரஞ் சாற்றுறு மினிமை மேடாம் ;
காரமே காழ்த்தல் பொன்னும் ; கருமான்மான் மனுப்பன் றிப்பேர்.

401 ஈரமே குளிர்ச்சி யன்பாம் ; இரதனே கிள்ளை கண்ணும் ;
கீரமே [3]தீய வெண்பால் கிள்ளைகா ரிப்புள் [4]முப்பேர் ;
பீரமே பீர்க்கும் [5]வாகைப் பேரும்பூ வாசு மென்றும் ;
தீரமே புனற்க ரைப்பேர் [6]திட்பமென் றிரண்டு மாமே. (உக)

402 வராகனே யருகன் மாயன் வயங்குபொற் காசே முப்பேர் ;
பராகமே பொன்னி ரேணுப் பரிமள மலர்த்தூட் கும்பேர் ;
அராகமே நிறம்பொன் பண்ணே [7]யகங்கார முடுகி யற்பேர் ;
இராகமே கீதஞ் செம்மை யிச்சையே நிறமு மேற்கும். (உஉ)

403 ஆராமமே நறும்பொ ழிற்சூழ் ; அரைநூல்மே கலைச தங்கை ;
உரோமமே மயிர்வெம் பாணம் ; உருளேரோ கிணிநாள் பாண்டில் ;
[8]இராமமே யழகோர் வேந்த னிளமையென் றிசைக்கு மப்பேர் ;
துரோணமே [9]பதக்குக் காக்கை துப்பைவில் சிம்புளம்பேர். (உ௩)

404 அரிவையோர் பருவ மாதர் ; ஆரிசோ முன்பேர் மேன்மை ;
கரியவன் சனியே சோரன் கண்ணனிந் திரனே நாற்பேர் ;
சரியல்நீர்ச் சுழிசு ரித்தல் தோகையர் கருங்கூந் தற்பேர் ;
கிரிபருப் பதம்வ ராகம் ; [10]கிரிட்டியோ ரீற்றுப் பன்றி. (உச)

405 துருவமோ ரிடத்தி லக்கஞ் சலிவின்றி நிற்றல் சொல்லும் ;
பருவமா ணியங்கா ராதிக் காலம்பெண் பருவ முப்பேர் ;

(பி-ம்.) [1]கரந்தற். [2]பூர னாற்பேர், [3]தீபம். [4]நாற்பேர். [5]வாவை. [6]செறிவாம் புடனுற் றற்பேர். [7]யடங்காமை. [8]இராமமே பழவெ ழிற்பேர் ; இருவியே யருவி கொய்தாள். [9]பதக்கங். [10]கரிட்டியாப் பிராண்டை கேழல்.

தருவென்ப மரங்க ரும்பு ; தாரசுகோல் பரணி நாளாம் ;
[1]உருவென்ப நிறமே யட்டை ; உரியர்மூ தறிந்தோர் சுற்றம். (உரு)

406 அருகனே யமணர் தேவும் நிலையாமை யதுவுங் காட்டும் ;
விருகென்ப மிருகம் பூனை ; [2]விருடகம் எலிமார்ச் சாலம் ;
முருகன்பா லக்கு வேந்தன் முருகவே டேவ ராளன் ;
மருகனென் பதுவே தோன்றல் மருமானென் பதுவு மாமே. (உசு)

407 ஊரென்ப நகரே யூர்த லோதுறுங் கவானே முப்பேர் ;
பாரென்ப தேர்ப்ப ரப்புப் படி[3]பொன்ற லுடன்கற் பாறை ;
வாரென்ப கவசம் நேர்மை மங்குல்நீர் நெடுமை கச்சாம் ;
சூரென்ப நோயஞ் சாமை யணங்கச்சஞ் சூரன் வஞ்சம். (உஎ)

408 பரிசென்ப குணங்கொ டைப்பேர் ; பருவா லருவல் துன்பம் ;
குரிசிலே பெருமை பெற்றோன் கோதில்வேந் தற்குங் கூறும் ;
இருசுபண் டியுளி ரும்பு செவ்வையென் றிருபேர் வைக்கும் ;
துருசொரு மருந்தே வேகம் ; துருஞ்சில்சீக் கிரிவவ் வாற்பேர். ()

409 இருமையே பெருமை துக்க மிம்மையு மறுமை யும்பேர் ;
தருமையே மிகுதி மேன்மை ; சாரசங் குருகு நாரை ;
கருமையே பெருமை நஞ்சங் கறுப்புடன் வலியே நாற்பேர் ;
தெருமரல் [4]வெருவ லோடே சுழற்சியுஞ் செப்ப லாமே. (உகூ)

410 அருத்தியே பாதங் கள்கூத் தாசையூ ணூட்ட லும்பேர் ;
விருத்திபொன் றொழிலிலாப முரைப்பொருள்[5]விளர்ச்சிதொண்டாம் ;
கிருத்திமம் விட்ட பூதங் கெட்டபொய் தோலே பண்ணல் ;
துருத்திதோற் சிவிறி யேயாற் றிடைக்குறை சொன்முப் பேரே. ()

411 மருத்தென்ப மருந்தே காற்றே மால்யானைப் பிறப்பே முப்பேர் ;
குருத்தமோர் மரமே கோபங் குருக்குத லெனவுங் கூறும் ;
எருத்தென்ப தூல்கி ளிஞ்சல் ; [6]ஈரேபங் கியினி ரத்தல் ;
[7]ஒருத்தல்வில் விலங்கே றியானை யொண்பரி [8]புலிநாற் பேரே. ()

(பி-ம்.) [1]உருவென்ப வடிவே யட்டை யுற்றநோய் நிறமே யுள்ளாம். [2]விடருகம். [3]வீய்வந் தணர்கற் பாறை. [4]பயஞ்சு ழற்சி ; தோர்சாக் கியர்தெளிந்தோர். [5]வளர்ச்சி. [6]ஈரென்ப திரண்டே யீர் ஙீரேதுப் பெனுநாற் பேரே. [7]ஒருத்தலே. [8]புலிமா னென்ப.

412 விருத்தமே மனைவி செய்யுள் மிருகக்கூட் டம்வட் டப்பேர் ;
திருத்தலே [1]திருந்தல் தாங்கல் ; [2]திருவேபொன் றெய்வ வுத்தி ;
அருத்தஞ்சொற் பொருள்பொன் னின்பேர்; ஆர்த்தலே யருந்தல் கட்டல்;
உருத்தலே முளைத்தல் கோப மிகுதியென் றேதன் முப்பேர். ()

413 அருப்பமூர் நோய்கா னுக்கம் அயின்றமோர் பிட்டாறே பேர் ;
[3]கருப்பென்ப விளைபல் பண்டக் குறுவிலைக் காலஞ் சோரும் ;
உருப்பமே வெப்பந் தூர்க்க மூயருமா லையம்ப வப்பேர் ;
மருப்பென்ப சிருங்க மிஞ்சி ; மருட்கள மடமை யாமே. (௩௩)

414 எருக்கலே பரித்தல் கோற லெறிவெட்டுக் கட்டை முப்பேர் ;
துருக்கமே விடா ரண்கத் தூரிகுங் குமங்க லக்கம் ;
முருக்கென்ப கவிர்கொ லைப்பேர்; [4]முரித்தலே நகையி லங்கல் ;
பருக்கையே பாலக் காரும் ; பாரகம் புவிதி ரைப்பேர். (௩௪)

415 ஆர்தலே குடித்த லுண்டல் நிறைதலென் றறைதன் முப்பேர் ;
ஊர்தலே [5]பரத்த லுண்டல் சிந்தலுற் றெழுத லும்பேர் ;
வார்தலே யுயர்ச்சி நீளம் ; வரித்தல்பூ சுதல்பொ றித்தல் ;
தீர்தலே நிவிர்த்தி நீளம் ; திரைபல்வெற் றிலைதி ரைத்தல். (௩௫)

416 ஊரியே யிளமை மேகம் ஒளிரும்வெண் சங்கே முப்பேர் ;
மூரியே றெருமை யாற்றல் ; மூரிவேழூம் பெருமை சோம்பாம் ;
சாரியே கவற்றின் சாரி சடுதியி னோடல் சாற்றும் ;
மாரிநோய் [6]வடுகி கள்ளே மங்குல்சீ மூதம் நீராம். (௩௬)

417 ஆரை[7]புற் பாய்ம திற்பேர் ; அருந்தலே யருமை துய்த்தல் ;
தாரைகண் [8]ணுடுநே ரோட்டந் தரைகூர்மை மழைமார்க் கப்பேர்;
[9]தோரையே நெல்வி கற்பம் சுடர்த்நபொன் னூல்கை ரேகை ;
ஓரைபெண் குழுவி ராசி யவராடற் கலமோ தும்பேர். (௩௭)

(பி-ம்.) [1]திருத்தல். [2]திருவென்ப பாம்பொன் சீர்தோள் செல்வமே தெய்வ வுத்தி. [3]கருப்புவே ழம்பல். [4]முரித்தல்மின் னகையொ ரித்தல். [5]யெழுதல் சிந்தல் தடவலூர் தீதுண் டற்பேர். [6]விளிவே மேகம் வடுகிகள் ளேதெண் ணீராம். [7]திண் மதில்புற் பாயே யாமொரு பூடுஞ் சொல்லும். [8]மணிநே ரோட்டந் தரைகூர்மை யுடுமா கங்கார். [9]தோரைநெல் விகற்ப மூங்கி லரிசிபொற் றூய்நூ லிரேகை.

418 குருதியே சிவப்புச் செவ்வாய் சோணித மூப்பேர் கூறும் ;
பருதியே யூர்கோள் வட்டம் பகலவன் [1]திகிரி நாற்பேர் ;
சுருதியே யொலிவே தப்பேர் சொற்றன செவியுங் கூறும் ;
திருதியே திரும்பல் மூன்றும் ; செருந்தியோர் மரம்வாட் கோரை.

419 உருக்கமே குழைவே யூந ; ஓர்வுன்னல் குறிக்கோ ளற்பேர் ;
திருக்குக முற்றந் தூசு திருட்டியிம் மூப்பேர் செப்பும் ;
சுருக்கென்ப நெப்த்து டுப்புச் சுரித்திட லிரண்டுஞ் சொல்லும் ;
பெருக்கமே செல்வ மாற்றுப் பெருக்கொடு பெருமை யாமே. (௫௬)

420 எருவையே கழுகு கோரை யிரத்தம் நற் கொறுக்கை [2]செம்பாம் ;
புருவை[3]யெவ் வனமே மேடம் ; புரத்தலே காத்தலீகை ;
கருவைகோத் திரத்தின் வைக்கோல் கருப்பமுட் கருத்தே மூப்பேர்
தெரிவையோர் பருவம் பெண்பேர் ; திரைதிரை தாங்கம் பூமி. ()

421 மருதமோர் மரம்வ யற்பேர் மருதநன் னிலப்பாட் டேயாம் ;
பொருதலே நிகர்ப்புப் பூசல் ; பூரிப்பே மிகல்க ளிப்பாம் ;
இருதுவே பருவ மாத ரிருதுகா ராதிக் காலம் ;
மிருதுவே மென்மை சாவாம் ; விரையேசாந் தங்க மழ்த்தல். ()

422 வேரலே வேர்த்தல் மூங்கில் ; விரோதமல் வேறு பாடாம் ;
கூரலே மாத ரோதி குருகின்வன் சிறகி ரண்டாம் ;
தோரலே யணங்கு [4]தோர்வை ; சூரியென்ப நரிசு ரிப்பேர் ;
[5]நேர்தலே யெதிர்த லீகை நேருதல் வேண்ட லும்பேர். (சஉ)

423 போரே நென் முதலாஞ் சும்மை சதையநாட் பொருதல் மூப்பேர் ;
ஏரே சொன் மாலை செவ்வி யுழுபெற்ற மிவைசெப் பும்பேர் ;
தூரே தூர்த் தல்வே ரின்பேர் ; சுரித்தல்சேர்ச் சுழியே தாங்கல் ;
[6]கூரேகூர் மைப்பே ரோடே மிகுதியுங் கூற லாமே. (சரு)

424 சூரனே [7]யிரவி தீயே சொற்றநாய் மீளி நாற்பேர் ;
சாரணர் சித்தர் தூதர் ; சரித்திர மொழுக்கங் காதை ;

(பி-ம்.) [1]ஒளிபொன் ஞெழி. [2]செம்பாம். [3]டவ் வனமே. [4]தோரை. [5]நேரலே யுடன்ப டுத்த லணுகுத லென்று மாமே. [6]கூரென்ப மிகுதி கூர்த்தல் கூர்மைக்குங் குமிக்கற் பாலாம். [7]யசுரன் வெந்தீ சுடர்க்கதிர் சுணங்கன் மீளி.

[1]ஞேரொலி விரைவி ரண்டாம் ; நீர்வாரங் குளநெல் வெள்ளி ;
மார்கழி யோர்ம திப்பேர் மான்றலை நாட்கு மாமே. (சச)

425 பூருவங் கிழக்கே முன்பே போற்றுறு முதுமை முப்பேர் ;
பீருவே புருவ மச்சம் ; பிரமாண மளவே சூளாம் ;
காருகந் தானை நெய்தல் கருங்குரங் கிவைபி ரண்டாம் ;
[2]தூர்வக மறுகோ டேறும் ; சுரிகையே கவசம் [3]பத்திரம். (சரு)

426 இருளென்ப கருமை [4]யல்லோ டிசைக்குறு நாகே முப்பேர் ;
[5]அருளென்ப தகைவி னுமை மரும்பொரு டனக்குஞ் சொல்லும் ;
சுருளென்ப சொருகுங் கூந்தல் துவர்த்தல்பா கிலைச்சு ருட்பேர் ;
[6]முருடென்ப ஞெகிழி யோடு மூதிர்பெருங் குறடு மாமே. (சசு)

427 வருணநீர் குலமோர் திக்கே மறிதிரைக் கடலே நாற்பேர் ;
பொருநர்போர்த் தலைவர் கூத்தர் புரப்போர்கா னவரே வீரர் ;
இருபிறப் பெயிறே [7]பார்ப்போ டிருஞ்சிறைப் பறவை முப்பேர் ;
அருணநற் சிவப்பே நவ்வி யாடெனு மிச்சை நாற்பேர். (சஎ)

428 ஊர்திசெங் கதிர்வி மான முவாப்பரி சிவிகை பாண்டில் ;
பார்வைதீ வகம திப்பு [8]பார்த்திடும் விழியே முப்பேர் ;
போர்வைதோ லொடுமுட் டாக்குப் புகன்றமீக் கோளை னும்பேர் ;
ஆர்வம்வில் நரகங் காத லன்பெனு நாற்பே ராமே. (சஅ)

429 ஆரிடம் வதுவை முன்னூ லருந்தவர் பூசைக் கும்பேர் ;
[9]சார்பிட மொற்றுப் பற்றுந் தணப்பிலாப் புணர்ப்பே நாற்பேர் ;
பாரிடம் புடவி பூதம் ; பாரதி வாணி நாவரசு ;
நார்வட மன்பி னுமம் நவிற்றுநா யதற்கு மாமே. (சகூ)

430 [10]கரியென்ப திருந்தை சான்றே களிற்றொடா தவங்க ரித்தல் ;
பரிசமே கிடங்கு மேடை பகர்மதி [11]லாரணம் நாற்பேர் ;

(பா-ம்.) [1]ஞொலே விரைவொ லிப்பேர். [2]தூரங்க. [3]கைவேல். [4]மையல் யானையல் நாகே யைம்பேர். [5]அருளென்ப சிவசத் திப்பே ரனுக்கிர கப்பேர் வைக்கும். [6]முருடுவென் கட்டை யின்பேர் முரண். [7]பார்ப்பா ரிருஞ்சிறைப் பறவை பார்ப்பாம். [8]ப் பகர்விழியளவே பாரம். [9]சாரிட [10]கரிகளி றிருந்தை சாட்சி கதிரவன் கரித்தல் காளம். [11]லரண்க ணைப்பேர்.

உரிமைநற் குணமே யாட்சி யோதுறு மனைவி மூப்பேர்;
பரிபுர மெனும்பேர் பாத கிண்கிணி மணிப்பேர் பன்னும். (௫0)

431 அரசியல் வெற்றி தோற்றம் வரைவின்மா தர்க்கு மாகும்;
காடம்வா யசங்க ளிற்றின் மதம்பொழி கவுட்குங் கூறும்;
பிரமரி சுழல லோடே பேசுகூத் தொன்றெ னும்பேர்;
தாளநித் திலமு ருட்சி சஞ்சல மூப்பே ராமே. (௫க)

432 [1]மருவேயோ ரிடத்தூண் வாசம்; வருடமே சமைம மைப்பேர்;
தருமரா சன்[2]பேர் புத்தன் சினவரன் சமனே மூப்பேர்;
கருவுரை நடுமேட் டின்பேர் கருப்பொருள் கருப்பம் நாற்பேர்;
இருடியே மூனிவ னுந்தை; இரும்பேசெம் பொன்[3]க ரும்பொன்.

433 சரீரமே மிடாவ கத்தி களிற்றின்பல் லடியெ னும்பேர்;
மரீசியே புனுவ ரம்பின் வழிமிள கொருமு னிப்பேர்;
விராடமோர் தேயங் கூவும் வேசரி யதற்குஞ் செப்பும்;
கரோடியே பெருஞ்சூட் டுஞ்சொற் கவின்மூடி மாலைக் கும்பேர். ()

434 ஆரியம் விளையோர் பண்ட மறைந்திடுந் தேச மொன்றும்;
பூரியம் வேந்தர் வீதி போற்றுறு நகரி ரண்டாம்;
[4]தாரியே வழியு தாரி; தருப்பணம் பிண்ணாக் காடி;
வேரிகள் ளிருவே லிப்பேர்; விரியல்பாய் விரிவு மாமே. (௫௪)

435 சாதி [5]கவிஞர் சூதர்; தரித்தலே நடத்தல் வேய்தல்;
சோரனே கள்வ னுட்டின் சொற்பற மிரண்டுஞ் சொல்லும்;
காரகம் நரகோர் நூற்சொல்; கரேணுவே பிடிதந் திப்பேர்;
மாருதி யனுமன் வேழ மிடும்பிகேள் வன்பேர் வைக்கும். (௫௫)

436 அருணனே புந்தி வெய்யோ னவன்றேரூர் பாகற் கும்பேர்;
தருணியே யிளமை நாரி; சார்தல்பொய் பிறவி யொத்தல்;
கருணியே மூழையும் வெற்பும் களிற்றொடும் பிடியெ னும்பேர்;
விரணமே விழலே யாக்கை மேவுறு மிரண மூம்பேர். (௫௬)

(பி-ம்.) [1]மருவென்ப வோரி டத்தூண் மகிணர்தோண் மருவல் வாசம். [2]சினேந்திரன் சமன்புத்த னுதிட்டி ரன்பேர், [3]னுலோகம், [4]தாரிவண் கொடைவழிப்பேர், [5]கலைஞர்.

437 மாரமா மாசே யாச்சா வளர்நீப முப்பேர் செப்பும்;
குரால்கபி லைநி றப்பேர் கூறும்பாற் பசுவும் வைக்கும்;
தாரலயங் கபிலை மேரு; சருமமே தோல்க ளிப்பாம்;
[1]மராளமே யுரக மன்னம்; [2]மாரடமோர் தேசங் கூந்தல். (௫௭)

438 அரக்கென்ப சிவப்ப ரக்காம்; ஆர்வலர் கொழுந ரன்போர்;
நிரப்பைய மிடியே [3]தேய்தல் நிரம்பலென் றேதல் நாற்பேர்;
மரக்காலா யிலியஞ் சோதி வருதுர்க்கை யாடல் முப்பேர்;
பருப்புச்சூ பகமின் னற்பேர்; [4]பாரடியே யானை பன்றி. (௫௮)

439 சீர்மையே விழுமங் கண்ணே செறிவேதுன் பஞ்சி றப்பாம்;
நீர்மையே தெளிவு நேயம் நிகழ்குண மிவைமுப் பேரே;
ஆர்மையே மதில்கூர் மைப்பேர்; அரேணுகம் வாள்ம ருந்தாம்;
வார்மையே யொழுக்கம் நேர்மை; [5]வருடையே சிம்புட் குன்றும். ()

440 பேரேசொற் பெருமை நாம மபிதானப் பேரும் பேசும்;
[6]நீரேநற் குணம்பூ ராடம்; நிரியாணம் வீய்வா னைக்கண்;
பாராவா ரங்க டற்பேர் பகர்கடற் கரைக்கும் பண்ணும்;
ஆரோக ணந்தாழ் வார மகன்றகற் படையு மாமே. (௬௦)

441 அரங்கமாற் றிடைக்கு றைக்கூத் தாடிட மமர்க்க ளப்பேர்;
தரங்கநீர்த் திரைதி ரைப்பேர்; சராவமே யகல்ச லாகை;
துரங்கமே பரியே நாவாய் சொற்றவாய் தல்முப் பேரே;
குரங்குதல் குனித்த லாட லுறங்குதல் நடுக்கங் கூறும். (௬௧)

442 அரணிதீக் கடையு முங்கோ லணிமதிள் கவச முப்பேர்;
இரணியம் பொரல்மா ணிக்க மீர்ங்கட லரவே பொன்னும்;
கரணியே கணிக்கும் வல்லோன் காட்டுநாற் காணிக் கும்பேர்;
தரணியே யிரவி பூமி சயிலமென் றறைய லாமே. (௬௨)

443 இரிசியே வழக்கு நாவாய்; இரட்டிரட் டித்தல் சாதி;
சரிதையே பூசை பிச்சை சாற்றுறுங் காதை முப்பேர்;
திரிதலே யுலாவல் கேடாம்; சிருளீ யஞ்செம் பாகும்;
மருவித மேடே தாழை மடலான தெவைக்கு மாமே. (௬௩)

(பி-ம்.) [1]மராளமோ இமம்பாம் பின்பேர் மாதளை யதுவு மாமே. [2]மாரட்டமோர். [3]தேர்தல். [4]பராட்டியே. [5]வருடைசிம் புள்குன் றூடாம். [6]நீரேநீர்.

444 நுரைநவ நீதம் நீரி னுரை திரை யெனவும் பாற்றே;
கரைதுளக் கரைக ரைத்தல்; கரவீர மலரி தேசம்;
நிரைபொழுங் கசைச்சொ லானே நிரைக்கூட்ட மிவைநாற் பேரே;
குரைமிகு மொலியி னுமம் நிறைவென்றுங் கூற லாமே. (சுச)

445 வீரையே துயரம் வேலை விருக்கமொன் றின்பே ராகும்;
சீரையே சிறுக்கொ டிப்பேர் திகழ்ந்தநற் றுகிலுங் கூறும்;
கீரைபா சடகே வைக்குங் கிளத்துசா கினிக்கு மென்ப;
பாரதம் [1]பொ துவி னுமம் பரம்பா மதுவு மாமே. (சுரு)

446 அருவியே மலையின் சா ரலரிபுனங் கழிமு கப்பேர்;
[2]பரிகாரம் பலபண் டப்பேர் படர்மெலி வகற்றல் செப்பும்;
உரியேதோல் கணித்த தொன்று மூரித்தலும் விரித்த நாமம்;
அருவேறுண் பழம்பொ ருட்பே ரணுநுணுக் கறிவு மாமே. (சுசு)

447 காண்டகங் கமண்ட லப்பேர் கருநீர்க் காக்கைக் கும்பேர்;
தெருண்டலே யறிவு தேற்றம்; சீர்மானே நெடுமால் செய்யோள்;
பருந்துமா டப்பு றுப்பேர் பகர்சேன மிவையி ரண்டாம்;
காண்டையே முனிவர் வாசங் கற்பாழி யிரண்டு மாமே. (சுஎ)

448 இரதிபித் தளையே காந்தள் எழின்மாரன் றேவி யாசை
விரதநற் சிவன்வாழ் வெள்ளி வேதண்டம் பிடியா னைப்பேர்;
இரதனப் பேரே யோசை கிண்கிணி யரைஞா ணென்றும்;
சரசமொப் பில்வி னைதைஞ் சாற்றுங் கணையு மாமே. (சுஅ)

449 குரலென்ப மிடறெ ழுத்துக் கூந்தலோ டலகே தூவி
யுரவின்பண் ணரம்பே யேனல் மொழிந்தபா திரியே யெண்பேர்;
அரலைதிண் கடலே கன்னி யையெனு நோய்காழ் நாற்பேர்;
இரலைமான் [3]கலையூ துங்கொம் பிரண்டுடன் முதனு ளாமே. (சுகூ)

450 அரில் பகை பிணக்குக் குற்ற [4]மாசினி பாயல் சந்தி
புரிகுழல் சிறிய தூறு பொருந்திய குரலோன் பான்பேர்;
கரிஞுபர் குற்றங் காழ்த்தல்; கரைத்தலே விளித்த லோசை;
[5]பரிவுமெய் விரும்பல் வேறு படலுடன் செயலு மாமே. (எ0)

(பி-ம்.) [1]பொதுவே யோர்நூல். [2]பரிகார மேவல்செய்வோர் பல்பண்டம் பெண்ணின் கூந்தல்-ஒருவர்நோ யகற்றுஞ் செய்கை யபிதான மோர்நான் காமே. [3]றலையூ. [4]மாசினி. [5]பரிவுமெய் யாரா வன்பும் வினைமுகத் துன்பும் பன்னும்.

451 கோரமே வெருவல் வெப்பங் கொடுமைபூ முகையே வட்டில்
வீரமே வுவதின் வாசி விரைவினிற் குறிப்பே யேழ்பேர் ;
ஆரமே பதக்க மாலை யாத்திசந் தனமே முத்தம் ;
நாரமே தெண்ணீர் பாசி நாரத்தைப் பேரு மாமே. (௭௧)

452 பாரம்நீர்க் கரையே நாவாய் பல்லணம் பெருமை பூமி
யேர்பொறை கவச மாட லீராறெண் ணிறையோன் பான்பேர் ;
தாரம்வல் லிசைநா வெள்ளி தலைவியா ழிசைநற் பண்டம் ;
ஓரமே சகாய மோரம் ; உருசியே சுவையின் னற்பேர். (௭௨)

453 சாரல்தண் மருத யாழிற் றிறத்தோசை சயிலப் பக்கம்
வேரலார் சயிலங் கிட்டல் விளங்கு மிந் நாற்பேர் வைக்கும் ;
ஆரல்கார்த் திகைநாட் செவ்வா யாணமோ டொருமீ னூற்பேர் ;
மூரல்சொல் பல்லே சோறே முதிர்சிரிப் பெனும்பே ராமே. (௭௩)

454 வரிநிற மெழுத்துப் பாட்டு வடிவம்நெல் லிறைபி ராகம்
[1]சரியறி வொழுக்கம் நீளந் தழல்வேலை சுணங்கீ ரேழ்பேர் ;
புரியவி விரும்பல் சேறல் புரஞ்சங்கு கபிறே [2]கட்டாம் ;
துரியமோ ரவத்தை தேடல் சொற்பொதி பெருது மாமே. (௭௪)

455 [3]பொருளென்ப சொற்பொ ருட்பல் பண்டம்பொன் புதல்வ னீதி
யருள்பண்பே தலைமை யொண்மை யனமெனும் பேரீ ரைந்தாம் ;
குருளென்ப குட்டி யோதி ; கூர்ப்பிடங் கூர்மை கார்த்தல் ;
மருள்வெம்பேய் மயல்கு றிஞ்சி மருவும்யாழ்த் திறமி ருட்டாம். ()

456 குருவென்ப பெருமை பாரங் குரவன்மாத் திரையி ரண்டோ
டுருவநன் னிறம்வி யாழ மோது மா சனே யெண்பேர் ;
பருவென்ப வுருக்கு ருப்புப் பகருறும் பெருமை மூப்பேர் ;
[4]செருவென்ப வடிசி லேரி செங்களப் போரு மாமே. (௭௬)

457 தூரிய [5]முரச விட்டந் துகிலிகை யிடபம் வெற்றி
கூரிய படைக்க லங்கள் கோசிக மீய மேழ்பேர் ;

(பி-ம்.) [1]சரியற. [2]காட்டாம். [3]பொருளேசொற் பொருள்பல் பண்டம் பொன்பண்பே பிள்ளை வாய்மை—யருணீதி தலைமை யொண்மை யனமொன் றே டிரைந் தேபேர். [4]செருவேயூண் கழைபோ ரேரி. [5]முரசம் விட்டம்.

ஓரியாண் மயிரோசர் வள்ள லுபர்மூசு மூதூந ரிப்பேர்;
நாரியே பெண்பன் னாடை நறவுவின் னாணி நாற்பேர். (எஎ)

458 தருமமா நிலவ மூக்கந் தட்டம்நல் லறங்க ளீதல்
கருமமோ டியல்பே வீதி யருடவம் பேரொன் பானும்;
பருமமே கலையு யர்ச்சி கவசந்தூ சிளமை பண்ணும்;
துருமமே மான டுக்கம்; சுருங்கலே தூக்கந் தேய்தல். (எஅ)

459 ஆத்தமே யிரத்தஞ் செம்பொன் னரக்கொடுற் பலங்க டம்போ;
டுரத்தசெம் பாத்தஞ் செம்மை யொளிருஞ் செந் துகிரெண் பேரே;
இரத்தமே பவளம் நெய்த்தோ ரிலங்குறுஞ் சிவப்பே மூப்பேர்;
காத்தலே மறைவு [1]கள்ளம்; கருணைகூ ரணமன் பாமே. (எகூ)

460 பாரியேசர் வள்ளல் கட்டில் பாரகங் கள்ளே கூந்தல்
வாரியார் கடலே யில்லாள் வத்திரங் கனமெண் பேரே;
சூரி[2]சண் டிகைவிற் பன்னர் சுரிகையோர் பூச்சி வெய்யோன்;
ஆரிய னையன் மேலோன் ஆதித்தன் மூப்பே ராமே. (அ0)

461 ஆர்கூர்மை சோதி பாகோ டாத்தியே நிறைவே பூமி
தேர்சேரைந் துருவா ணிப்பேர் செப்பிய வேழு மாகும்;
பீர்சூர்வெம் முருகுண் மூ லைப்பால் பீர்க்கொடு பசலை நாற்பேர்;
கார்நீர்நெல் லாடு மேகங் கருங்கவி கறுப்போர் காலம். (அக)

462 சாரிகை சுங்கம் பூவை சார்சுழற் காற்ற சைச்சொல்
வரிசை கொட்புற் றோட லெழுத்தின்சா ரிகையா றேபேர்;
பூரிகை யூது காளம் உக்காரி பூர கப்பேர்;
காரிகை யோர்நூல் மாதர் கலித்துறை யழகே நாற்பேர். (அஉ)

463 [3]அருச்சுன மென்ப வெள்ளை யரிசியோ டறுகு கூட்டி
விரித்தணிந் திடுத லின்பேர் வெண்மையு [4]மருது மேற்கும்;
குரத்தியே நுளைச்சி யோடு தலைவிக்குங் கூறற் பாலாம்;
இரத்தியே யிறலி வள்ளி; இருத்தையே திதிகண் ணற்பேர். (அங)

464 பிரமமே துருத மாடு பிறழ்பொருள் நடுக்க லக்கம்
அரியயன் கிரது [5]வேதம் அறவர்மூச் சுடர்பன் மூப்பேர்;

(பி-ம்.) [1]கள்ளல். [2]மா லினியே சங்கர். [3]அரிச்சுன. [4]மருத்து. [5]பேதம்.

இரவியே மலையே வெய்யோன் ; இரங்கலே யழுங்க லார்வம் ;
பிரமசா ரியந்த வப்பேர் பெருமறை யவற்கு மாமே. (அ௪)

465 வாரணஞ் சங்கு கோழி மலிகடற் றடைமா வியானை
காரிணங் குறுவ ராகங் கவசமுன் மத்த மங்கி
பேரிணங் குறுநற் றுனம் [1]பிறழ்படை யீரைந் தேபேர் ;
சீரணங் குணமின் மைப்பேர் செம்புபித் தளையு மாமே. (அரு)

466 [2]வாரியே யானைக் கூடம் வாய்தல்சீர் மதினால் வட்டை
பாரிய மடைக பாடம் பரவைநற் றகைமை வெள்ளம்
ஏரியை வருவா யற்பேர் மிகுதி யொன் ருெழிபீ சேழ்பேர் ;
பூரியே பொன்வில் நாணி ; புராணமே தொன்மை முன்னூல். ()

467 குருகேகை வளைபுள் நாரை குக்குட மினைவெண் மைகொல்
லுருகுலை மூக்கே மூல நாளேமா தவியெொன் பான்பேர் ;
முருகேகள் ளிளமை நாற்ற முருகவேள் விழாவ ணப்புப்
பெருகதி [3]லெழுச்சி பீரம் பேசுமொன் பான்பே ராமே. (அஎ)

468 [4]சீர்துணி சதியி னைத்துச் சீர்த்திகாத் தண்டே செல்வ
மோர்பொறை யொல்கல் பாரம் யாப்புறுப் பீரைம் பேரே ;
தார்கொடிப் படைப்பூந் தாமஞ் சத்திரம் பரிமாக் கூட்ட
மோர்வில்லின் கிணியின் கோவை யொழுங்கெனு மிருமூன் றேபேர்.

469 காரியோர் வள்ளல் காக்கை கடுச்சனி வடுகன் சாத்தன்
றேரிலாக் கீழ்மை யோர்புள் முதுநிலங் கருமஞ் செய்தல்
நேரிலாக் களர்க ளுப்பு நிகழ்த்திய பேரீ ராறும் ;
சோரியே விடாம ழைப்பெ ரோணஞ்சோ ணிதமுப் பேரே. (அகூ)

470 நேரெனப சமமே யீதல் நெடிலுடம் பாடே பாதி
தேர்மஞ்ச நுட்பஞ் செப்புத் திகழ்தனிப் பாட்டி னோடே
ஓருஞ்செம் பத்தி யென்றே யொன்ருெழி யீரா றேபேர் ;
சாரங்கம் வில்மான் வண்டு சாதகப் புள்நாற் பேரே. (கூ0)

(பி-ம்.) [1]பிறழ்புடை. [2]வர்ரியே யானைக் கூட்ட மதிலிட மிகுதி வாய்தல் — தாரிசீர் மடைக பாடந் தண்கடல் தகைமை வெள்ளம் - வரியே வருவா யில்நூ லீரேழென் றிசைந்த நாமம். [3]லெழுச்சி யேசம் பிரமெனு மொன்பான் பேரே. [4]சீர்துளி.

471 [1]கருவியே தொடர்பே மேகங் கவசம்பல் லியம்போ ரீட்டம்
புரிதுணைக் கார ணங்கள் படைக்கலங் கலனை பூணோ
டருவினை பலவே [2]யாழென் றுகப்பே ரீரா றுதும் ;
குருவிபுள் மூல நாளாம் ; குருடனந் தகனே வெள்ளி. (கூக)

472 அரியேவின் மணிமூ ராசி யரிதல்பொன் காற்றுச் சீயம்
பரிதேரை கிள்ளை காந்தி பகைசெந்நெற் கதிர்கு ரங்கு
கிரிதேரை மைவ லாரி கிளர்நிறங் கூற்றுக் கண்ணார்
வரிசோலை பாயல் பன்றி மரீசிவேய் வண்டு சேகு. (கூஉ)

473 விறல் கூர்மை திகிரி யீர்வாள் விசிதகர் புகரே பெற்றும்
பறைபோகி சிலம்பிற் பெய்த பால்கடல் புரையே பச்சை
பொறிவார்தீ படைக்க லங்கள் பொறியிலொன் றரிசி தூமம்
அறைவார்கள் ளுடனிந் நாம மையொன்ப தொன்று மாமே. (கூ௩)

474 தெருண்டுளோ ருரை கார வெதுகையிற் சிறந்த செய்யு
[3]ளிரண்டோடொன் பதுபத் தென்ன விருநிலம் புகழச் செய்தான்
காண்டைவா ளிலங்கை வாட்டுங் கருமுகில் மருகற் போற்று
மாண்டிரு விளங்குஞ் செந்தி லருமருந் தைபன் றுனே. (கூச)

[மிகை.] 1. அரங்கிடம் வட்டா டில்லம். 2. உருத்திரியோ கம்வ ளர்ச்சி யுரியநற் பொருண்மு யற்சி. 3. தெருளென்ப வுணர்ச்சி தேர்தல் ; செருக்குளக் களிப்பே கன்னல். 4 பாணியோர் நாள்செப் பின்பேர் ; பாராட்ட லுலாவல் மெச்சல். 5. கிரணமா தவன்க திர்ப்பேர் கிளர்சோதி யுடனோர் காலம். 6. சாரென்ப நிடத்தி னுமஞ் சார்தலு மெயிறு மாமே. 7. வாராகங் கடலே பன்றி. 8. ஆருப மமையா மைப்பேர் நீங்காமை யதுவு மாமே. 9. பரியந்தண் டுலம்பெண் பாற்சொல். 10. சாடமே வயிரோந் திப்பேர் ; சரித்தலே நடைசரிக்கை. 11. பிரிவுசீர்த் திவலை நாமம் வெருகுடன் பிரிவும் வைக்கும். 12. புரிவுசெய் திடல்வி ரும்பல் வேறுபட் டிடலன் பும்பேர். 13. அரணமே மதில்கான் மஞ்ச மடிக்கழல் கவசம் வேலி. 14. திரணமா பதியே வாழை திண்பனை யதுவுஞ் செப்பும். 15. வீரிய மதநீர் வீரம். 16. நரலெனு நாமஞ் செற்றை நளிர்திரைக் கடலு மாமே. 17. அரிணமான் சிவப்பே வெள்ளை யாடக மாலியா னைப்பேர்.

ரகரவேதுகை முற்றும்

(பி-ம்.) [1]கருவியாழ்த். [2]யாழே யான்றிடுங் கசைபன் முப்பேர். [3]ளிரண்டு நான் கொடுதொன் னூறென் றிருநிலம் புகழச் செய்தான். [இதற்கேற்பச் செய்யுட்டொகையுங் காணப்படுகின்றது].

லகரவெதுகை.

475 அளந்திட வரிய வேத புராணவா கமங்க ளாலும்
உளந்தெற விசைத்துப் போற்று மொருவனாய் நின்ற சோதி
வளங்கிளர் வடிவேற் றாங்கும் வள்ளல்சீர் பாதம் போற்றிக்
களங்கற வரும்ல கார வெதுகையின் கவிதை சொல்வாம். (க)

476 ஆலமே வடவி ருக்க மப்புக்கூ டலர்நீர் நஞ்சம் ;
[1]மூலமே யேது வேர்நோய் முதல்கிழங் கொருநாள் தாரு ;
சீலமே குணந்தண் டித்தல் திகழ்சரித் திரமு ணர்ச்சி ;
தூலமே [2]பருமை பஞ்சாம் ; துல்லியந் துலாவொப் பாமே (உ)

477 அலவன்ஞெண் டொடுபூ ணைப்பே ரலர்மதி தனக்கும் வைக்கும் ;
வலவனே வெற்றி யாளன் மருவுந்தேர்ப் பாக னும்பேர் ;
இலவமோர் தருவே பூசை ; இலக்கக லெழுத்துக் கேண்மை ;
நிலவொளி மதிநி லைப்பேர் ; நிலைபேறே மான முத்தி. (ங)

478 புலவர்பா டுநர்கண் ணாளர் புத னும்பர் கவிவேள் கூத்தர் ;
கலவலே துழாவ லின்பேர் கலத்தலென் றறைதற் பாலாம் ;
புலவுசெம் புலால்மு டைப்பேர் ; புலிசாந்தம் வயமாச் சீயம் ;
மலைவுபோர் புரித லொப்பாம் ; வல்லரி தளிர்பூங் கொத்தாம். (ச)

479 அலங்கலே தளிர்பூ மாலை யசைவுட [3]னகவி ரங்கல் ;
பலங்கனி பயன்காய் பள்ளம் ; [4]பல்லவர் விடர்கீழ் மக்கள் ;
கலங்கலன் அலம்யாழ் தட்டங் கச்சமொன் றம்பி பாண்டம் ;
இலங்கையாற் றிடைக்கு றைப்பே ரீரைந்து களன்வைப் பும்பேர்.

480 வலம்புரி நந்தியா வர்த்தம் வால்வளை வலஞ்[5]சு ழிப்பேர் ;
புலம்பல்துன் பொலித்தண் டாமை புயற்றுளி தனிமை யச்சம் ;
சிலம்புவே தண்ட மோசை செப்பிய பரிபு ரப்பேர் ;
இலம்பக மத்தி யாயம் நுதற்சூட் டென் றிருபே ராமே. (சு)

(பி-ம்.) [1]மூலமோர் நாள்வே ரேது முதல்கிழங் கரிநோய் தாரு. [2]பெருமை பஞ்சி துலாமெனு முப்பேர் செப்பும். [3]ன் கலுழ்வி ரங்கல். [4]நிறையொன்றே பலமு மாமே. [5]சு ழற்பேர்.

481 கலிங்கமே வானம் பாடிப் புட்டுசோர் தேயங் காட்டும் ;
குலிங்கமே யூர்சி வப்புக் குலிகமூர்க் குருவி வாசி ;
[1]புலிங்கமோ ரெழுத்த முற்சேர் பொறியேயூர்க் குருவி முப்பெர் ;
விலங்குகாண் மிருகங் காலின் வீழ்தலை [2]குன்று மாமே. (எ)

482 அலியென்ப நமனே பேடி யடிசில்தீ நறுவி லிப்பேர் ;
[3]பலியென்ப பூசை பிச்சை பகர்பேடி வெண்ணீற் றின்பேர் ;
ஒலியென்ப திடியே காற்றே யோசையென் றுாதல் முப்பேர் ;
கிலியென்ப வெருவல் பேடி ; கீல்சந்தே பிசினு ணிப்பேர். (அ)

483 ஒலியல்வெங் தோல்நோ யாறே யுடையேபூத் தொடையே யைம்பேர் ;
பொலிவென்ப பொற்பெ ழுச்சி யகலஞ்செம் பொன்னே நாற்பேர் ;
வலியென்ப கந்து பாயல் மதுகையும் வலித்த லும்பேர் ;
கலியென்ப வலியே யோசை கடையுகம் [4]வஞ்ச னைப்பேர். (கூ)

484 தலையாதி யிடமே சென்னி ; சால்புமாட் சிமைசான் றுண்மை ;
சிலையேவில் கல்லே மூல நாள்மரந் திண்ம லைப்பேர் ;
அலைவேதான் மிகுதி யச்சம் ; ஆலாலம் விடமே வவ்வால் ;
உலைவேயி றுடன்றீ ரற்பேர் ; உலூகமே யுரல்கோட் டான்பேர். ()

485 வலையமே வாவி யோர்பூண் வட்டம்வா யினிலொன் றேயாம் ;
இலையமே கூத்துக் கூத்தின் விகற்பமு மிசைக்கு நாமம் ;
மலையனே யுதவும் வள்ளல் வானேகா னகநா டன்பேர் ;
தலைவனே கொழுநன் னீசன் றராபதி முருக வேளாம். (கக)

486 வாலிவா சவன்சேய் தூறல் மதிதெரி கலையி ராவரம் ;
காலியான் கூட்டங் காற்று ; கலாமென்ப கொடுமை கோபம் ;
பாலியே வடவி ருக்கம் பசுவளித் தலங்கள் நாற்பேர் ;
நீலியே கருமை துர்க்கை நிகழ்த்துமோர் பூடு மாமே. (கஉ)

487 ஆலியே யாலாங் கட்டித் துளிகாற்றோ டமுத நீராம் ;
பாலிகை யுதடே வட்டம் பட்டவாள் மூட்டி யும்பேர் ;
சாலியே வடமீன் கள்ளுச் சாற்றருங் கவசம் நெற்பேர் ;
மோலியே சடைகோ டீர மணிமுடி முருகார் மாலை. (கங)

(பி-ம்.) [1]புலிங்கமே யெழுத்த முற். [2]குறுக்கங் குன்றும். [3]பலிவிழா வையம் பூசை பாத்துநீ றலியோர் தாரு. [4]கடல்வஞ் சப்பேர்.

488 மாலையே குணமொ ழுங்கே மாலிகை யிரவந் திப்பேர்;
சாலையே புரவிப் பந்தி யறப்புறந் [1]தருவின் சோலை;
வேலையே தொழில ளக்கர் வேலையின் கரையோர் காலம்;
சேலையே யசோகு தூசாம்; சில்லிகை யாடை சிள்ளான். (கச)

489 [2]செல்லிடி சிதலை யேவல் செழுமுகில் ககன மைம்பேர்;
[3]அல்லிரா விருளே யென்ப; அலர்மலர் புனல்ப ழிச்சொல்;
பல்லியம் புரவிப் பந்தி பாணிவாச் சியமே தொங்கல்;
வல்லியங் கொடிபு லிப்பேர்; மலைப்பேயா கவமோர் கூத்தாம். (கரு)

490 எல்லையே யிரவி யீறே டிடம்பகல் குரோச நீளம்;
ஒல்லைமாத் திரையே தொல்லை [4]கடுப்புட னிறுதி யோதும்;
சில்லையே பிரண்டை [5]யென்ப சிள்வீடு தூர்த்தை மூப்பேர்;
[6]வல்லைகான் விரைவே யோர்நாள் நோய்கால வரவும் பற்பேர். (கசா)

491 முல்லையோர் நிலமே கற்பே முதிர்வென்றி யிசையே மவ்வல்;
குல்லையே துளவங் கஞ்சாக் கோந்தடர் சிந்து வும்பேர்;
தொல்லையே துன்ப முந்தை; [7]சொலோம்பியே வுலோபங் கள்ளாம்;
கொல்லையே புனப்பூந் தோட்டம்; கோலங்கோற் பழமெ ழிற்பேர். ()

492 [8]வல்வலி விரைவே சூதாம்; மலர்தலே யெதிர்தல் தோன்றல்;
[9]கல்லொலி யருவி வெற்பாம்; கலகமே கலக்க மோசை;
[10]எல்லொளி பகலி கழ்ச்சி யிரவியா தெனல்கங் குற்பேர்;
நெல்லுயர் வாகை சாலி; நீலகாற் றோர்சி றப்பேர். (கஅ)

493 வில்லென்ப மூல நாளே வெஞ்சிலை யொளியே [11]மூப்பேர்;
சொல்லென்ப புகழ்நெல் கள்ளே சொல்லுட னெழுச்சி மல்கல்;
ஒல்லென்ப விரைவொ லிப்பேர்; ஒலித்தல்சீட் டித்த லோசை;
கொல்லென்ப தசைச்சொல் லையக் கொலையேவல் வருத்த மைம்பேர்.

(பி-ம்.) [1]தளிர்க்குஞ். [2]செல்லுரு மேறே யேவல் சிதலைகார் ககனஞ் செவ்வேல். [3]அல்லிரு ளிரவி கங்கு லாணமென் றேதற் கும்பேர். [4]கடுப்பீறே வரவே யோதும். [5]தேற்றா சின்வீடு. [6]வல்லையே விரைவு நோய்கான் வலிகால வரைவும் பற்பேர். [7]சொலோபியே. [8]வல்லென்ப விரைவே சூதே வலிமுலைக் கச்சே நாற்பேர். [9]கல்லென்ப வொலிகல் வெற்பே கதித்தெழு மருவிக் கும்பேர். [10]எல்லரி யிரவிகண்டை. [11]யூழி.

494 அல்லிநா தாம்பல் காயா வகவித மூலியே யைம்பேர் ;
சில்லியே வட்டங் கீரை தேருருள் சிள்வீ டேபேர் ;
கொல்லியோர் நோயே வெற்பே குலவுமோ ரிசையே மூப்பேர் ;
வல்லிநீக் கம்பெண் பாடி [1]கொடிபுணை வரைவு வள்ளி. (௨0)

495 மல்லென்ப வலியே கூத்தின் வகுத்ததொன் [2]றேவ ளப்பேர் ;
பல்சந்தி வேய்க ரும்பே பதிபதி வாழ்த ரைப்பேர் ;
இல்லென்ப தில்லை யேவீ டிராசிசா விடனில் லாள்பேர் ;
புல்சங்கம் புலிசொம் போர்புள் [3]புதல்பனை யனுடம் புன்மை. (௨௧)

496 அலமேசஞ் சலங்க லப்பை [4]யமைவெனு மூப்பேர் செப்பும் ;
சலமேநீர் வயிரம் பொய்ம்மை [5]சாற்றுமூட் பன்றி மூப்பேர் ;
திலமேயெண் [6]ணுடனற் பப்பேர் திகழுமஞ் சாடி மூப்பேர் ;
பிலமேபா தலம்வ விப்பேர் [7] பீலிக மதுவு மாமே. (௨௨)

497 வலமேயூற் றம்மி டம்பார் வலம்வாகை திரண்ட [8]கற்பே ;
குலமேயில் சாதி கூட்டம் குடிமைரே வதிநா ளாம்பேர் ;
நிலமேபொன் [9]னிலைமை பூமி ; [10]நிலைகுணம் பொழுது நேயம் ;
தலமேபா சடைநி லப்பேர் ; [11]சலதாம் புயல்வா விப்பேர். (௨௩)

498 [12]கலாவமே மஞ்ஞைப் பீலி கவிகைமே கலையே மூப்பேர் ;
உலாவென்ப பவனி போத லுரைக்குமோர் பனுவற் கும்பேர் ;
[13]பலாசமோர் மரம்பை வண்ணம் பாசடை யெனவும் போற்றும் ;
விலாசமே நீபம் வாழை ; [14]வேலன்சேய் வெறியாட் டாளன். (௨௪)

499 சலாகைகன் மணிநா ராசம் சவளமிம் மூப்பேர் காட்டும் ;
இலாடமோர் தேயம் நெற்றி ; எலியாகு பூரா நாளாம் ;
கலாவல்சே ருதல ளாவல் ; கலங்கலே யிரங்கல் சோம்பாம் ;
சிலீமுக மூலைக்கண் [15]ணின்பேர் சிறையுளர் சுரும்பு மாமே. (௨௫)

(பி-ம்.) [1]கொடிதளை. [2]றெழில்வ ளப்பேர். [3]புதன். [4]யமைவுட லலம்வ ரற்பேர். [5]மூட்பன்றி நகைக்கஞ் சாற்றும் [6]யெண் ணுடன்ற வப்பேர். [7]பிபீலிக. [8]கற்பேர். [9]னில நமம் பூமி. [10]நிலையதொன் முறையே போழ்து நேயநற் குணமு மாமே. [11]சற்குருத் தலமும் போற்றும். [12]கலாவமே கலையே பீலி கவிகையே யரைப்பட் டிப்பேர். [13]பலாசமே திறம்பை. [14]விளக்கிட மதுவு மாமே. [15]ணம்பே.

500 மாலதி சாதி முல்லை மல்லிகை சொல்லு முப்பேர் ;
[1]சோலய ரென்னு நாமம் சோனகர் பூரி யர்க்காம் ;
மாலரே புலையர் வேடர் வழுத்துறு கவச முப்பேர் ;
காலச மால வட்டங் காற்றுடன் வட்ட முப்பேர். (௨௬)

501 அல்சல்நாள் சுருங்கல் தங்கல் அல்மதி ளாவி யைம்பேர் ;
மல்கலே நெருங்கல் பொற்பே சொரிதலே மிகுதி வைக்கும் ;
கல்வியே கலைப யிற்சி கருதுறு மறிவே முப்பேர் ;
செல்வமே சுவர்க்கங் கல்வி சீரெனும் பேரு மாமே. (௨௭)

502 மல்லலே பொலிவு வட்டம் வளம்வலி பெருமை யைம்பேர் ;
பல்லமே காடி யோரெண் பகழிமாக் கலனை நாற்பேர் ;
புல்லமே கண்ணோய் சேவாம் ; பொலஞ்செம்பொன் னழகு மாகும் ;
சல்லமே பன்றி முள்ளுஞ் சாற்றுசீ தளமு மாமே. (௨௮)

503 ஆலோலம் புள்ளோச் சற்பே ராற்றுநீ ரோசைக் கும்பேர் ;
சேலேகஞ் சந்த னஞ்செஞ் சிந்துர மிரண்டுஞ் செப்பும் ;
கீலால முதிரங் காடி கிளத்திய நீரே முப்பேர் ;
காலேயங் களபத் தோடே கறக்குமான குழவுக் கும்பேர். (௨௯)

504 கலித்தலே பொலிவெ ழுச்சி தழைக்குதல் [2]முப்பேர் காட்டும் ;
வலித்தலே கட்டல் கோணல் மலர்ச்சியோ டென்ப டற்பேர் ;
இலிர்த்தலே சிலிர்த்த லொன்றல் ; எல்லையே போழ்தே பொய்கை ;
மலர்ச்சியே யிறுமாப் பின்பேர் மலர்வுடன் பொலிவு மாமே. (௩௦)

505 [3]சல்லாப முட்பு றம்பொத் துளபொரு டலைமைக் கும்பேர் ;
உல்லாச மத்த வாள முள்ளத்தின் களிப்பி ரண்டாம் ;
கல்லாரம் [4]குளிரி மஞ்சள் கடிகமழ் கழுநீர் முப்பேர் ;
நல்லார்மெய்த் தவர்கற் றோராம் நவ்விவாள் விழியார்க் கும்பேர். ()

506 உலகென்ப வளவே பூமி ; ஒல்கலே [5]குழைவு தேய்தல் ;
பலவென்ப [6]மிகுதி பாகல் ; பலகார மிலக டம்முன் ;
பிலவங்கங் குரங்கே தேரை பேகமாண் டொன்றே முப்பேர் ;
செலவென்ப வழியி னுமங் கழிதற்குஞ் செப்ப லாமே. (௩௨)

(பி-ம்.) [1]தோலய. [2]ஒலியுவ. [3]சல்லாபம் பொருணமை தொன்மை, [4]குளிரு. [5]குறைவு. [6]பலாமி குத்தல்.

507 [1]இலஞ்சியே மகிழ்ம ரப்பேர் ஏரிகொப் பூழு மாகும்;
கலம்பகர் துழாவ லின்பே ரொருபனு வற்குங் காட்டும்;
துலங்கலே விளங்கல் தூய்மை; [2]சூலியே சிவன்கா ளிப்பேர்;
இலம்பாடே வறுமை துக்கம்; இல்லமே வீடு தேற்று. (ருரு)

508 ஓலமே கடல்பாம் போசை; உலமர [3]லஞக்கல் துக்கம்;
[4]இயாலமே யாச்சாத் தாரோ டிருங்கரு நிசியி ரண்டாம்;
ஏலமே மயிர்ச்சாந் தேலம்; இலிங்கமாண் குறிகு லிங்கம்;
[5]சூலெனும் பேர்பிள் சூலே; [6]தோலிதூ சழிவி லாமை. (ருச)

509 உலைதலே யுருங்க ளும மழிதற்கு முரைக்கற் பாற்றே;
புலைபர்பூ ரியரே மற்றச் சண்டாளர் தமக்கும் போற்றும்;
[7]தொலைதாக் கோலே பெற்றந் தோற்றமுந் துலையு மேற்கும்;
கலுழியே கான்யாற் றின்பேர் கலங்கிய நீரு மாமே. (ருடு)

510 மல்லிகை விளக்குத் தண்டே மாலதி யிரண்டே யாகும்;
கல்லோல நீர்த்த ரங்கம் கடுகிய வொலியுங் காட்டும்;
சொல்லேரி னுழவர் தானே துலங்குமந் திரிகற் றோர்கள்;
வில்லேரி னுழவர் பேரே வீரர்க்கும் வேந்தர்க் கும்பேர். (ருசு)

511 மலைத்தலே பொருதல் சூடல் மறுத்திட லொலித்த னற்பேர்;
உலக்கையே [8]யோண முரோங்கல் ஊடறீ ருதலே நிந்தை;
கலக்கமே கதனத் தோடே புரோதனங் கழறற் பாற்றே;
இலக்கமோ ரெண்கு றிப்பேர்; இலாஞ்சனம் பேரே புள்ளி. (ருஎ)

512 தாலமே கூந்தற் பூகந் தாரதலம் பனையே நாவே
சீலமார் பண்பே நாப்ப ணுண்கலஞ் செப்பு மேழ்பேர்;
பாலமே நெற்றி பூமி மழுப்படை நடக்கும் பாலம்;
நீலமே பனைகால் நெய்தல் நிறத்திலொன் றிருண்ம ணிப்பேர். ()

(பி-ம்.) [1]இலஞ்சிபுன் கேரி கொப்பூ ழெயில் குணம் வகுள மாவாம். [2]சூலியே சிவன்கா ளிப்பேர் சொற்கருப் பிணியேயென்ப [3]லமுக்கல். [4]இலாலமே. [5]சூலெனு நாமஞ் சூழ்தல் சூலநோய் பீளு மாமே. [6]தோலியே யழிவு தூசு. [7]துலையேகோ லேற்றந் தூாந் தோற்றமே துலாரா சிப்பேர். [8]வுரோண மோங்க லொருகரு விக்கும் பேரே.

513 சாலமாக் குழுவ ரக்கா மாமாம் வலைசா லேக
மேலெயில் கூட்டந் தாரு விச்சைபூ மூகைபத் தேபேர் ;
[1]கோலநீ ரோட்டம் பாகொப் பனைபன்றி குழவு பீர்க்காம் ;
காலமூக் காலம் வைகல் கடிமதி டனக்கு மாமே. (௩௯)

514 கூலநீர்க் கரைவா லான்மாக் குழூப்பாகல் முசுப்பல் பண்டம்
யேனுமா வணம்வ ரம்பே முதுரையென் றீரைந் தேபேர் ;
சாலகங் கால தர்ப்பேர் சாற்றுபூ மூகைவ லைப்பேர் ;
ஆலலே யொலியா டற்பேர் ; அலந்தைநீர் நிலையே துன்பம். (௪௦)

515 [2]உலவையே யொட்டை கொம்போ ரேர்குடி குலமே காற்றே
நிலவுபா சடையே வள்ளி நிகழ்நாம மிருநான் காகும் ;
வலவைவஞ் சப்பெண் வல்லோன் ; மலமேழும் மலமா சின்பேர் ;
கலவைசே றுதல்சாந் தின்பேர் காலாழ்சே றதுவு மாமே. (௪௧)

516 அலகுநெற் கதிரே யாதி யாரஞ்சோ திணிபுண் மூக்குப்
பலகறை யெண்ணு ளம்பு மகிழின்பா லெண்பேர் பண்ணும் ;
திலகமஞ் சாடி சுட்டி சிறுநுதற் குறியே மூப்பேர் ;
உலகமே திசைவிண் பூமி யுயர்குணஞ் சனமு யர்ந்தோர். (௪௨)

517 கலையேமீ னிரலை காஞ்சி கல்விகால் கால நுட்பம்
நிலையார்காழ் முசுநூல் தூசு நிலாவகிர் பன்னொன் றேபேர் ;
குலையேவிற் குதைந டுக்கங் குலைதல்நீர்க் கரைதா றேபேர் ;
மலையேமால் வரைமீன் யானை வம்புய ரிருவாட் சிப்பேர். (௪௩)

518 பீலிவெண் கவிகை சின்னம் பெருவரை கலாபி தோகை
காலியங் கால வட்டங் கனகம்வாச் சியமெண் பேரே ;
தோல்விப மழகே தோல்வி துருத்திதோல் பலகை யாரும் ;
[3]மாலிவெண் கள்ளே வெய்யோன் வழுத்துமோர் நிருத னும்பேர்.

519 காலிடங் தறிம ரக்கால் காற்றுத்தே ருருடாள் மூங்கிற்
பாலனங் குரங்கூற் [4]றூற்றம் பகர்வாய்க்கா லீரா றேபேர் ;

(பி-ம்.) [1]கோலநீர்க் கொழுந்தே பாகே குழவுபீர்க் கழகே பன்றி-யேனு மொப்பனைபல் கோலமிலந்தையின கனியீ ரைம்பேர். [2]உலவையே யிலைகாற் றொட்டை யூர்குடி குலமே வள்ளி-இலகுவா விலங்கின் கொம்பே வியன்மாக் கொம்பீ ரைம்பேர். [3]மாலிவெய். [4]றூற்றம் பழுவம்வாய்க் கால்பன் மூப்பேர்.

[1]வேலியூர் நிலங்காற் றேதை ; விலோதமே பதாகை கூந்தல் ;
காலிலி பகலோன் றேரூ ரருணன்காற் றுப்பாந் தட்பேர். (சரு)

520 பால்வெண்மை திசைவ குத்தல் பயங்குணம் பக்க மாட்சி
சால்வெண்பால் விதையி டப்பேர் சாற்றுமீ ரைந்தென் றேயாம் ;
[2]ஆல்தெண்ணீ ரசைச்சொல் நாம மாமல வெனவே நாற்பேர் ;
வால்வெண்மை மிகுதி போட்ட மழவுதூய் மைவா லிப்பேர். (சசு)

521 கோல்துலாங் கணைசம் மட்டி [3]துகிலிகை குறியாழ்த் தந்தி
யெலிலந் தைகமை தீட்டு மெழிற்கோல்வேந் தன்கோ லெண்பேர் ;
நூல்கொடி யெல்லை வள்ளி நுணங்குசாத் திரந்தந் தெண்ணம் ;
வேல்கையா யுதப்பொ துப்பேர் [4]வேறலும் பகையு மாமே. (சஎ)

522 அலரிகண் வரியே நீவி யருக்கனீ ராவி பூவோ
டிலகெழின் மாமே தேனீ யியம்புறு நாம மெட்டாம் ;
கலனையே கலப்பை வாசிக் கலனையென் றிருபேர் காட்டும் ;
மலர் [5]தேனீர் பூவ சைச்சொல் ; [6]வல்லிகை குழைவீ ணைப்பேர். ()

523 பாலையோர் மரம்பா டற்றீஞ் சுவைநில மந்நி லத்தின்
மாலையார் பாடல் பொன்மேற் பிரிதல்வாய்ந் துடனே போதல்
வேலையாற் பிரிவு ரைத்தல் [7]வெம்மையென் றெண்பேர் வைக்கும் ;
காலையே கால நாளாம் ; கல்வியா ணூஞ் சுபஞ்செம் பொன்பேர். (சகூ)

524 மால்வலி பொலிவே சோழன் மறத்தலே பெருமை மேகங்
கால்நெடி யோன்ம யக்கங் கருமைகண் ணேணி தொன்மை
யேல்புதன் வேட்கை யேயென் றியம்புநா மம்மீ ரேழாம் ;
போல் [8]விறல் கேரே யேதி பொய்யுடன் பலைய சைப்பேர். (ருo)

525 உலமேசீர் காற்றுத் துன்ப முயிர்நீப்போ டிரச லூற்றம்
பிலமார்வால் திரண்ட கற்பேர் பட்டடைப் பேரோன் பாலும் ;

(பி-ம்.) [1]வேலியே மதில்காற் றின்பேர் விளங்குமூர் நிலமே யென்ப. [2]ஆல்தெண்ணீர் வடம சைச்சொ லாமல வெனவே யைம்பேர். [3]வதரிதூ ரிகைக்கோற் றந்திரி—யேலுமஞ் சனக்கோல் செங்கோ லளவுகோ லேர்க் கோல் பத்தாம். [4]வேரலும். [5]தெணீர். [6]வல்லிகை காத ணிப்பேர் மாசுணம் யாழே யாகும். [7]வெண்மை. [8]விரல்.

¹புலமேசெம் பொன்ன டுக்கம் புந்தியைம் புலம் விளைந்த
நிலமேதிக் குடனி டப்பேர் நிகழ்த்திய தனிமை யெண்பேர். (௫௧)

526 பண்டை²யோ ரிசைல கார வெதுகையிற் பகருஞ் செய்யுள்
³மண்டல மதனி லைம்பா னென்னவே வகுத்தல் செய்தான்
திண்டிறற் கொடிசெஞ் சேவற் றிகழ்ந்தசெவ் வேளைப் போற்று
மண்டர்கள் ⁴விளங்குஞ் செந்தி லருமருந் தையன் றானே. (௫௨)

[மீகை.] 1. நிலமக னரசன் செவ்வாய். 2. உல்லியே மதில்வெண் பூடாம்; உலோகமே யுலகி ரும்பாம். 3. தில்லமே காடோர் தாரு. 4. இலை யேபா சடையு லோபம்; இல்லமே வீடு தெற்கு. 5. சொலவென்ப நெல்கள் வார்த்தை சொற்புக ழதுவு மாமே. 6. பல்லென்ப பலவே தந்தம். 7. உல கர்பாண் டியரு லோகர். 8. பில்கலே துளித்தல் சோர்தல்; பீலித்தண் டெஃகம் வாலம். 9. பல்லவந் தளிரே தேசம். 10. மிலைச்சல்சூ டுதல்மி குத்தல்; வேலாவ லயங்கூ வேலை. 11. புலர்த்தலே யுலர்த்தல் பூசல். 12. தலைப்பெயல் மழைவி டுத்தல் புதுப்புனல் வரத்துஞ் சாற்றும். 13. நால் வாயன் சுஞுசி யானோன். 14. துலக்கமே விளக்கந் தூய்மை சொற்புக ழதுவுஞ் சொல்லும். 15. சிலதா ரியரே நண்பர். 16. விலங்குத லெதிர்த் தல் சேறல் விரிதலே விலங்கு தற்பேர். 17. நிலயமே நடம்ந டத்தின் விகற்பமு நிற்றற் கும்பேர். 18. *வாலமே படைகொக் கின்பேர்; வாலுவர் சிறுவர் மூடர். 19. வாலுகம் வெண்ம ணற்பேர் வழுத்தறு மிளமைக் கும்பேர். 20. வாலிதே வலிவெண் மைப்பேர். 21. சாலினி தேவ ராட்டி சாற்றுங்கள் வாணிச் சிப்பேர். 22. பலவமே பழங்காய் பள்ளம்; பல்லிகோ கிலமோர் பூடாம்.

லகரவெதுகை முற்றும்.

(பி-ம்.) ¹பொலமே ²நூற் றிகழ்ல. ³எண்டிசை தனிலைம் பானு மிரு மூன்று மென்னச் செய்தான் - திண்டிறல் மயிலூர் செவ்வேற் சேவகன் றாளைப் போற்றும்,—[இதற்கேற்பச் செய்யுட்டொகை காணப்படுகின்றது] ⁴புகழுஞ்,

வகரவெதுகை.

527 நாட்டுமென் பதைகட் கெல்லா நாதனாய் நலிவி லானாய்க்
கோட்டமில் குணத்து ஞானக் கொழுஞ்சுட ராங் குகேசன்
பாட்டளி துதையுஞ் செங்கேழ்ப் பங்கயப் பாதம் போற்றி
[1]யீட்டமார் நலவ கார வெதுகையின் றொடையி சைப்பாம். (௧)

528 அவனிபா ரகரே வேந்தர் அம்புவி மூப்பேர் போற்றும்;
புவனீர் புவிபி ரண்டாம்; பூவம்ப [2]னடல்வேள் வீரன்;
[3]பவனமே நாக லோகம் படிகாற்றே மனையி ராசி;
நவனை நூல் பிண்டி நுட்பம்; நூவோரக் கரமெள் ளியானை. (௨)

529 உவணமே வயின தேய னுயர்ச்சிவெங் கழுகே மூப்பேர்;
சிவணலே யெழுச்சி கூடல்; செவ்வீரம் பாசி தேயம்;
சுவணமே பொன்னெ ழிற்பேர்; சுவர்க்கம்விண் ணுலகங் கொங்கை;
யவனர்தோற் கருவி யாளர் தபதிசோ னகரென் றாமே. (௩)

530 திவவென்ப திழிவே யாழின் வலிக்கட்டி னரம்பே செப்பும்;
குவவென்ப திரட்சி மேடு [4]குவிதல்சொற் பெருமை கூட்டம்;
தவவென்ப மிகுதி குன்றற் றயவுடன் றவமே நாற்பேர்;
சுவவென்ப சுவர்க்கஞ் சுண்டன் றொகுத்தபுண் மூக்கு மாமே. (௪)

531 அவிநபம் பனுவல் நாட காங்கமென் றிருபே ராகும்;
சவிமணிக் கோவை யந்தஞ் சாருவே யிரதங் காந்தி;
[5]கவிதொடை வெள்ளி யேர்க் காக்கைவாக் குள்ளோன் மந்தி;
நவிலல்சொல் லுதலே பண்ணல்; நவிரேயாண் மயிர்பண் வாளாம்.

532 இவமோகன் மைபஞ் சாக்கிலி திகழ்மூத்தி குறுணி நாற்பேர்;
பவமேயுற் பவம்பா வப்பேர்; பாவனா சனப்[6]பாம் போர்நீர்;
நவமேகார் காலங் கேண்மை புதுமையொன் பான்பேர் நாட்டும்;
[7]கவனங்கான் கலக்கம் வாசிக் கதியெனா மூப்பே ராமே. (௬)

(பி-ம்.) [1]யீட்டமாய் வரும்வ. [2]ன் மதவேள். [3]பவனநா ணாக லோகம் படிகால்போழ் திராசி யில்லம். [4]குவித்தல். [5]கவிதொடர். [6]தூஉப் பாம்புரம். [7]கவனமே கலக்கம் வாசிக் கதியேகான் வெம்மை நாற்பேர்.

533 நவிரமே் குடுமி புன்மை [1]நற்பசுந் தோகை வெற்பாம் ;
அவிரதம் நோற்கி லாமை யனவா தமுமே யென்றும் ;
கவிகையே குடைகொ டைப்பேர் ; கவந்தந்தெண் ணீர்மட் டைப்பேர் ;
தவிசணை தடுக்கே மெத்தை யிலகட நாற்பேர் சாற்றும். (எ)

534 அவையென்ப சவையே கற்றோர் ; [2]அவிர்தலே யொளிமீ றற்பேர் ;
சிவையென்ப துமையே கொல்ல னுதலை [3]மாவேர் செப்பும் ;
கவையென்ப காடா யில்லியங் கவர்வழி யெள்ளி ளங்காய் ;
நவையென் றிகழ்ச்சி குற்றம் ; நவியமே மழுக்கோ டாலி. (அ)

535 கவுரவ மிளமை வெள்ளை ; கவிப்பமு டுதல்கு டைப்பேர் ;
சவுரியே திருமால் கள்ளன் சனியமன் கலுழ னம்பேர் ;
கெவுரியே யுமைகா ளிப்பேர் ; கேவலந் தனிமை முத்தி ;
மவுலிதார் முடிகோ டீரம் ; மவ்வல்மல் லிகைமுல் லைப்பேர். (கூ)

536 கவுசியே குழைவு துன்பம் ; [4]கவுத்துவமோர் மணியத் தப்பேர் ;
சவுரியங் களவே மேதி சாற்றிடு மாற்றல் மூப்பேர் ;
கவுசிகன் விசுவா மித்திர [5]னூற்றுப்பத் துக்க ணன்பேர் ;
[6]கவுசிகம் விளக்குத் தண்டே யோர்பண்கோட் டானோர் பாட்டாம்.

537 அவலமே நீர் நிலைவ யற்பேர் ; ஆவம்வின் னாணி தூணி ;
குவலயம் நெய்தல் பூமி குளிர்கருங் குவளைக் கும்பேர் ;
கவலைசெந் தினையோர் வல்லி கவர்வழி வெருவல் துன்பம் ;
சுவல்பிடர் புயமேல் மேடே சொற்கொல்லை யைம்பே ராமே. (கக)

538 நாவகம் நடுவே நாவாம் ; நவ்வோரக் காகா வாயாம் ;
சாவக ரொருதே யத்தோர் சமணரி விருத்தி பெற்றோர் ;
சேவகம் வீரம் யானை துயிலிட [7]மிருபேர் செப்பும் ;
தீவகம் [8]நெறியே பார்வை செழுஞ்சுடர் விளக்கெ னும்பேர். (கஉ)

539 ஆவலர் கொண்கர் நாம மாற்றுகா தலர்க்கு மேற்கும் ;
சிவணி யோர்ம ருந்தே செவ்வழித் திறத்தோ ரோசை ;

(பி-ம்.) [1]நகமஞ்ஞைு மருத யாழாம். [2]அதுவெனு மொழியு மாகும். [3]மாவே ரோரி. [4]கருதுமோர் பாட்டென் றேயாம். [5]ன் கண்ணனிந் திரனே யென்ப. [6]கவுசிக மிசைபட் டாடை கடுங்கோட்டான் விளக்கின் றண்டாம். [7]ஞ் சேவித் தற்பேர். [8]வழியே.

கோவனே வசிட்ட னீசன் குயவனென் றிம்முப் பேரே ;
மேவலே சேறல் வேட்கை ; வேவமே தனிமை துன்பம். (௧௩)

540 ஆவலே வளையா சைப்பேர் ; அவதிமட் டிடாமை காலம் ;
தூவலே திவலை யார்ப்பாம் ; தூவக்கேதோல் பிணக் கிரண்டாம் ;
காவலே சிறைநீர் தாருக் [1]கதைத்ததம் பட்ட நாற்பேர் ;
வாவலே தாவல் கூத்து வபாவுடன் வவ்வாற் கும்பேர். (௧௪)

541 கவடென்ப தியானை கட்டுங் கயிறுகப் புடன்[2]ப ணைப்பேர் ;
குவடென்ப மலையி னுச்சி கொழுங்குவ டெனவுங் கூறும் ;
சுவடென்ப கணிதத் தோன்றும் ஒழுங்கற்குஞ் சொல்லற் பாற்றே ;
[3]கெவுடஞ்சொற் பேரே கோடி கேடிலோர் தேய மும்பேர். (௧௫)

542 உவாவென்ப திளையோன் பவ்வ மும்பல்தெண் கடலே நாற்பேர் ;
திவாகர னனந்தன் வெய்யோன் ; செவியென்ப காதே கேள்வி ;
சவாதுபூ சும்பூச் சின்பேர் தக்கவோ ரிடத்தோ லைப்பேர் ;
சுவாகாமந் திரமே யங்கித் துணைவியென் றிருபே ராமே. (௧௬)

543 அவாவென்ப தாசை சோம்பாம் ; அவதார மிறங்கல் தோற்றம் ;
சுவேதமே வேர்வு வெண்மை சொன்மாலை முப்பேர் செப்பும் ;
விவாவென்ப பெருமை யின்பேர் [4]விளங்குறு மிரவும் போற்றும் ;
சுவாமிசெவ் வேள்வி யாழ முனைவு ந மரன்பேர் சொல்லும். (௧௭)

544 ஆவியே நாற்ற மூச்சோ டாருயிர் வாவி தூமம் ;
கூவிரந் தேரே தேரின் [5]கொடிஞ்சியென் றிருபேர் கூறும் ;
நாவிதன் பூர நாளே ஞதியோ டெரிநாள் முப்பேர் ;
[6]காவியென் பதுகள் ளின்பேர் கருங்குவ ளைக்கு மாமே. (௧௮)

545 சிவப்பென்ப சினக்கு றிப்பேர் செம்மைபாங் கறுப்பு மற்றே ;
உவப்பென்ப பொலிவி னும மோகையென் றிருபேர் கூறும் ;
நிவப்புயர் வுடன்ப ரத்தல் ; நிவறலே துளக்க மொய்த்தல் ;
தெவிட்டல்கான் றல்லொலி வித்தல் நிறைத்தல்[7]சொம் படைத்தி டற்பேர். ()

(பி-ம்.) [1]சுறங்கிய துடிப றைப்பேர். [2]ப ணைப்பேர். [3]கெவுடென்ப கொடியின் பேரும். [4]விரைவுறு மிரவு மாமே. [5]கொடிஞ்சியுங் குவளைக் கும்பேர். [6]சாவியே யோர்சி றங்கள். [7]செம் படைத்தி.

546 பாவென்ப பாப்புப் பாவல் பனுவனூல் பாத்தேர்த் தட்டாம்;
தாவென்ப பகைவ ருத்தம் தாண்டுதல் வலியே கேடாம்;
தூவென்ப பகைவால் தூய்மை தூவியூன் பற்றுக் கோடாம்;
ஓவென்ப பிறங்க லோடே கொடுமையோங் கார மாமே. (௨0)

547 கவ்வையெள் ளிளங்காய் துன்பம் கடரிடம் பழிச்சொல் கள்ளாம்;
துவ்வையே பருக னுமம் சொற்றபின் னுக்கி றைச்சி;
தவ்வைமூத் தாளே யீன்றாள் சாற்றுமூ தேவி முப்பேர்;
செவ்வுதண் பழனஞ் செவ்வை; [1]தெவ்வுகொள் சமர்ப கைப்பேர்.

548 அவ்விய மழுக்காற் றின்பேர் ஆன்றபொய் யுடனி ரண்டாம்;
துவ்வுத லுண்ட லோடே ஆற்பத மிரண்டுஞ் சொல்லும்;
பவ்வமே கடலு வாப்புற் புதமாக் கணுவு ருப்பேர்;
எவ்வமே தனிமை துன்பம்; ஏவலே யானை யேவல். (௨௨)

549 ஆவிய ரிப்பர் வேடர்; ஐவராங் [2]களர்வி யாழும்;
தீவியே புலிவி ளக்கம்; தீவிரங் கிரணம் வல்லே;
தூவிபுள் ளிறகே தூயல்; துவ்வனு பவமே சுத்தம்;
நீவியே துடைத்த லாடை நெருங்குகொய் சகம ளித்தல். (௨௩)

550 கூவலே கிணறே யோசை; [3]கோவைதாழ் வடநூல் விம்பம்;
நாவலர் கவிஞர் கூத்தர்; நாவாய்ரே வதியம் பிப்பேர்;
சேவல்புள் ளாணே காவல்; சீவனே யுயிர்வி யாழம்;
ஓவர்வந் தித்து நிற்போர் தபதிய ரிவையோ தும்பேர். (௨௪)

551 [4]பாவை.பெண் பாவை யாகும்; பாவமே மறங்க ளிப்பாம்;
ஆவர ணம்ம றைப்போ டார்த்திடுந் தூசி ரண்டாம்;
பூவைநா கணவாய் காயா பொற்புகோ கிலங்கிள் ளைப்பேர்;
[5]நாவிபோர் பூடே நாவி; நவமணிப் பேர்பொன் காசாம். (௨௫)

552 கவரிசா மரைதேர் மேதி கத்தூரி மிருக நாற்பேர்;
தவறலே விடுதல் குற்றஞ் சாற்றிடுஞ் சோம்பே மூப்பேர்;

(பி-ம்.) [1]தெவ்வேகொள் பகைவ லிப்பேர். [2]களவி யாழம். [3]கோவை தாழ் வடம்நூல் விம்பங் கோத்திட லதுவு மாமே. [4]பாவைபெண் பாவ மாகும். [5]நாவியே கொப்பூழ் பூடே.

துவரேசெம் பவளங் காட்டந் துவர்சிவப் பிகலே யாக்கம் ;
கவர்தலே பெட்பி னுமங் கரந்துகோ டற்கு மாமே. (உசு)

553 சவலையோ டீனவெண் பாட்டே [1]சாற்றுமின் னற்கும் பேரே ;
திவசமே நடுப்ப கற்பேர் செப்புமோர் நாளுஞ் சொல்லும் ;
உவமைநே ரலங்கா ரப்பேர் ; உவர்ப்பிகழ்ச் சிவேண் டாமை ;
[2]துவர்தலே வகிர்த லோடு சொற்றவோர் சுவையு மாமே (உஎ)

554 ஐவன மலைநெல் லின்பே ரான்றவோர் தாரும் வைக்கும் ;
செவ்வியே யழகு காலம் ; தீவினை வேள்வி பாவம் ;
நவ்விமா னழகே யத்த நாளுட னிளமை நாற்பேர் ;
வெவ்வினை முயலுத் தியோகம் விளங்கிரு வினைக்கும் பேரே. (உஅ)

555 ஆவணம் புணர்தம் வீதி யங்காடி யுரிமை நீளுங்
கூவிரஞ் செறியும் பீடம் சாதனங் கூறு றேபேர் ;
கோவணங் கல்ல மூத்துங் குழிவட்டங் கௌபீ னப்பேர் ;
[3]பூவணி சதுக்கந் தொங்கல் ; [4]பூவலே சிவப்புப் பூத்தல். (உகூ)

556 உவளக மதிலோர் பக்க மோதந்தப் புரமே வாவி
சவருமுப் பளமே பள்ளஞ் சாற்றுமு விருபேர் வைக்கும் ;
குவளைகண் காவி யின்பேர் ; குவாலெண்ப மேடே கூட்டம் ;
இவறலே மறவி யாசை யென்பபே ரிசைக்கு மப்பேர். (௩0)

557 இவர்தலே யெழுச்சி யாசை யேறுதல் சேறல் மேவல்
தவறிலா நடத்த லோடே பாத்தலுஞ் சாற்று மேழ்பேர் ;
துவைபுளிங் கறிது வைத்தல் ; துவன்றலே நெருங்க லோசை ;
தவரெனுங் கிளவி யோகர் தனுவெனு மிருபே ராமே (௩க)

558 ஆவென்ப தாச்சாத் தாரோ ரக்காம் பசுவி ரக்கம்
மேவுஞ்சொல் லிசையே யிச்சை வியப்புட னேழ்பேர் கூறும் ;
கோவென்ப குலிச மான்பார் குருசில்கண் கிரணந் திக்கே
யேவல்விண் சுவர்க்கம் பாண மியம்பல்நீர் பன்மூன் றேபேர். (௩உ)

(பி-ம்.) [1]தரிகருப் பம்மின் னற்பேர். [2]துவர்தலே வகிர்த லுண்டல் துன்றலாற் பதந்து வர்த்தல். [3]பூவணி சதுக்க நாமம் புதுமலர்ப் பூந்தொங் கற்பேர். [4]பூவலே தீண்டாப் பூப்பும் புரத்தலுஞ் சிவப்பு மாமே.

559 தேவென்ப தேனே நாற்றந் தித்திப்பே தெய்வத் [1]தாரே
தாவுமெண் டிசையே செவ்வை தாரதல மிடமெண் பேரே;
காவென்ப துலைதண் சோலை கலைமின்றோட் சுமைப சுப்பேர்
மேவுங்கற் பகம்வ ருத்த மிடல்வட [2]மொன்பான் பேரே. (சுசு)

560 மாவென்ப பெருமை வண்டு வாசிநென் மாவ சைச்சொல்
[3]மேவொரு கணிதஞ் செல்வம் விலங்கொரு தருவெ றுப்புப்
[4]பூவுயர் திருவ ழைத்தல் பொறைபொ றுத் திடுதல் [5]கான
ரூவொளிர் கருமை சாயல் சாற்றுமீ ரெண்பே ராமே. (சுச)

561 [6]மாவுய ரியவ கார வெது கையின் வழுத்துஞ் செய்யுட்
டாவுயர் மூன்றி னோடெண் ணூன்கெனச் சாற்றல் செய்தான்
பாவுய ரெழில்கூர் செவ்வேள் பங்கயப் பாதம் போற்றும்
ஆவுயர் செந்தின் மேவு மருமருந் தையன் றானே. (சுரு)

[மிகை.] 1. குவையென்ப திரட்சி மேடே குவிதலே பெருமை கூட்டம். 2. தவமேயைந் தவித்தல் குன்றல் மிகுதியுஞ் சாற்றற் பாலாம். 3. சுவாவென்ப சுவைத்தல் நாயாம்; துவரித ழதரம் யானை. 4. அவ்வையே தனைப்ப யந்தா ளருந்தமி ழொரும டந்தை. 5. பாவியே பசரி நாமம் பாவித்தல் பாவிக் கும்பேர். 6. தேவையோ ரிடச்சொ லிந்த்ரன்; சிவிகை சூட் டேர்தி யாமே. 7. பூவலர் வனப்பே கூர்மை பொலிவிண்டை பிறப்புப் பூமி. 8. சைவமே யிளமை யின்பேர் சமயமா கமமு மாகும்—கைவலம் பனித்தல் மூத்தி கன்றிலாக் கறவைக் கும்பேர்—நைவா மென்ப தானே நடம்வீ ரிருபே ராமே. 9. தவாவினை மலையே யுச்சி. 10. காவதங் காக்கை காதம். 11. துவ்வ லாற் பதமே யுண்டல்; சுவையினி மைசு வைத்தல். 12. நோவலே யப்பத் தின்பேர் நுவலரு நோயு மாமே. 13. மாவெலி யவுணன் யாளி.

வகரவெதுகை முற்றும்.

(பி-ம்.) [1]தாரு. [2]மேழ்பே ராமே. [3]மே வும் பொ ற். [4]பூவின்பங். [5]காலன். [6]மதுகையார் கேள்வி மிக்கோர் வழுத்துமெல் லினவ கார-எதுகையில் வழுத்துஞ் செய்யு ளேழுமுப் பானுஞ் செய்தான்-செதுகையார் மஞ்ஞை யூர்தி செய்யபொற் பாதம் போற்றும்-அதிகமார் வளமைச் செந்தி லருமருந் தையன் றானே.

ழகர வெதுகை.

562 [1]தடையில மும்மு தற்குந் தனிமுத லாகி யென்று
முடையயில் புவன மேத்து மொண்பொரு ளானேன் செங்கை
யடையுறு மயில்வேற் றங்கு மண்ணல்பொற் றளைப் போற்றி
இடையின மெனும்ழ கார வெதுகையின் றொடையி சைப்பாம் (க)

563 நிழலரு ளொழுக்கஞ் செல்வம் நீழல்நோய் குளிர்ச்சி [2]யைம்பேர் ;
கழல்கழங் கொடுசெ ருப்புக் காலுட னறைக ழற்பேர் ;
குழல்விலோ தந்து ளைப்பேர் ; கொழுமையே வளன் கொழுப்பாம் ;
சுழல்கறங் கேகாற் றடி ; துழாய்துன்பந் [3]துளவென் றமே. (உ)

564 விழைவென்ப புணர்ச்சி காதல் ; மேழமே கவச மாடாம் ;
கழையென்ப புணர்த மூங்கில் கரும்பென விரும்பு மூப்பேர் ;
குழையென்ப தளிரே சேறே கொழும்பொனின் றோடுங் கூறும் ;
உழையென்ப தியாழோ ரோசை யுழையலோ டிடமா னும்பேர். (ங)

565 விழவவா மிதுன ராசி விளம்பிலுற் சவமு மாகும் ;
மழவெழி லிளமை குட்டி ; வழக்கர்நீள் வழிவ ழக்கம் ;
குழவெழில் மழவு [4]குட்டி ; கோழ்கொழுத் தல்கொ ழுப்பே ;
[5]இழவெனும் பேரி ழத்த லெழுந்திட் லிரண்டு மாமே. (ச)

566 அழுவல்கற் குணம்வி சாலம் ; அழுங்கல்கே டிரங்க லோசை ;
கழுமல்பற் றொடும யக்கங் கடுந்துயர் மிகுதி மல்கல் ;
செழுமைபொற் பின்பே ரேமாட் சிமைகொழு மைவ ளப்பேர் ;
கெழுமல்கற் கல்பொ ருந்தல் ; கிழிநிதிப் பொதிப டங்கிள். (ரு)

567 வழுவென்ப [6]குற்றங் கேடு வந்துறுஞ் சோர்வே முப்பேர் ;
கழுமுள்மா தளையே சூலங் கழுக்கடை வேற்பொ துப்பேர் ;

(பி-ம்.) [1]விண்மய நுதற்சி றந்த மிளிர்கனி யமுத மூண்ட-பொன்மயச் செங்கேழ் வேணிப் புங்கவ னிதயம் பூத்த-சின்மயச் சோதி யான செந்தில்வேலோனைப் போற்றித்-தொன்மையோர் சொலும்ழ கார வெதுகையின் றொடையைச் சொல்வாம். [2]கோடு. [3]துளவே புல்லாம். [4]வண்ணங் குருளையென்றோதற் பாலாம். [5]இழவென்ப திழவி ழத்தல். [6]சோர்வு கேடு வருகுற்றம் வழுவே நாற்பேர்.

எழுவென்ப பரிகத் தம்பம் ; எழுச்சியேர் நோயு யர்த்தல் ;
ஒழுகலென் பதுவே நீள மொழுக்கமென் றிரண்டு மாமே. (௬)

568 பொழிதலே சொரிந்த னீட்டல் ; பூழியன் வழுதி சேரன் ;
வழுதியே வங்க மாறன் ; வழுத்தல்தோத் திரமே மெச்சல் ;
தொழுதியே நெருக்கங் கூட்டம் ; தொழும்பரே யடிமை மள்ளர் ;
கொழுதியே பொலிவு நாமங் கொழுத்தற்கும் வழுத்தற் பாற்றே. ()

569 அழுவமே [1]பரப்பு நாடே யறைபறை நடுக்கந் துக்கம் ;
செழுவுரை தகைமை யாட்சி ; கேழ்கிற மொளியொப் பாகும் ;
இழுமென வினிமை யோசை ; எழானரம் பிசையோர் புள்ளாம் ;
விழுமமே சிறப்புச் சீர்மை விடாத்துய ரதுவு மாமே. (௮)

570 யாழ்முத ஞளே யாக்கை யறைவீணை மிதுனம் நாற்பேர் ;
தாழ்தலே வணங்க லாசை குறைதல்தங் கற்பேர் நான்காம் ;
கூழ்பயி ருணவே பைம்பொன் ; குழாயேயுட் டுளைதண் டாகும் ;
ஊழ்முறை வெயில்ப கைப்பே ருறுதெய்வம் நற்கு ணப்பேர். (௯)

571 அழனமே பிணஞ்செந் தீயாம் ; அழகே[2]சற் குணமே ழிற்பேர் ;
கிழமையே யுரிமை பண்பாம் ; கேழலே யானை பன்றி ;
பழமையே வேண்டற் பாடுந் தொன்மையும் [3]பாணுஞ் செப்பும் ;
தழவுதான் விரைவு தற்பேர் [4]செறுத்தல்மன் னுதலுஞ் சாற்றும்.

572 இழுதுநெய் யிழுக்க லின்பேர் ; இழுக்கென்ப மறத்தல் கீழ்மை
கழுதுபேய் பரண்வண் டின்பேர் ; கழுந்திரித் திலங்க ளைப்பே
பழுதென்ப மறைவு குற்றம் பகருறு மிடமே முப்பேர் ;
வழுதலை புனத்தி டும்பொய்க் கழுவழு தலைப்பேர் வைக்கும். (௧௧)

573 உழிஞையே சிறுபூ ளைப்பே ரோதெயில் வளைத்தற் கும்பேர் ;
[5]கழிவென்ப மிகுதி சாதல் கடந்திடல் வரைத்தல் போக்காம் ;
குழியமே மருந்திற் கெல்லாம் பொதுபாறு வளையங் கோலம் ;
[6]தொழிலியற் றிடுமு ஞற்றுந் தொல்லையே பெருமை சோரம். ()

(பி-ம்.) [1]பாப்பூர். [2]சர்க் கரையெ ழிற்பேர். [3]பாணுஞ். [4]செறுதல், [5]கழிதலே. [6]தொழில்கள வாரா பாரக் தொல்லையே பெருமை யூக்கம்.

574 வழியென்ப திடமே மார்க்கம் வருமக வுடன்பின் னும்பேர் ;
குழியென்ப தகழ்தல் குக்கி ; குழிசியே மிடாப்பா னைப்பேர் ;
பழியென்ப பழித்தல் குற்றம் ; பழிச்சல்நீச் சொல்வ ழுத்தல் ;
[1]எழிலென்ப தழகே வள்ளி ; எழிலியே வள்ளல் மேகம். (௧௩)

575 உழுவையே புலிமே திப்பேர் ; உழுதலே [2]யுழுத றெய்யல் ;
தொழுவென்ப தொழுவே தானே சேவதி நாளுஞ் சொல்லும் ;
முழுமக னறிஞன் மூடன் ; [3]மோழையே காடி கஞ்சி ;
உழுவலே [4]யாரா வன்போ டோங்கெழில் புணர்ச்சி [5]நாற்பேர். (௧௪)

576 ஊழியே யுகாந்தம் பூமி ; [6]உழப்பென்ப வலியுச் சாகம் ;
தோழியே யரக்குப் பாங்கி ; சூழேகோப் [7]சூழ்த லாகும் ;
பூழியே புழுதி சேறும் ; பூழிலே யகில்பூ மிப்பேர் ;
காழிய [8]ரப்ப வாணி கர்க்கும்வண் ணார்க்கும் பேரே. (௧௫)

577 வழுக்கென்ப மறத்த லின்பேர் வழும்பெனும் பெரு மாக்கும் ;
நிழற்றலே நுணுக்கம் நீழல் நிழல்செய லெனவே முப்பேர் ;
கிழத்தியே மனைவி முல்லை மருதப்பெண் ணெனக்கி ளத்தும் ;
பழுப்பளி தாரத் தின்பேர் முதிரிலைப் பருவ மாமே. (௧௬)

578 தாழையே தெங்கு கைதை ; தழல்கிளி கடிகோல் செந்தீ ;
ஏழைபெண் மிடியன் பேதை ; இழையேபூ ணிழைத்த னூற்பேர் ;
நூழையே வருவாய் நுட்பஞ் சாளர நுவலற் பாற்றே ;
மாழ்கலே யிரங்கல் மோகம் வழுத்துரோ தனமு மாமே. (௧௭)

579 ஈழமே சிங்க ளம்பொன் னிழுக்குறுங் கள்ளே முப்பேர் ;
வேழமே கொறுக்கை மூங்கில் வெற்றிமால் யானை கன்னல் ;
காழகங் கருமை யாக்கை கழுதைது சுடங்க டாரம் ;
கீழிடங் கயமை பள்ளங் கிழக்குட னுற்பே ராமே (௧௮)

580 சீழலே யொழுக்கம் வெள்ளி நிலவேயாற் பதமே நாற்பேர் ;
சூழலே யிடம்வி சாரஞ் சொற்கூழைப் படையே முப்பேர் ;

(பி-ம்.) [1]எழில்மணி யினமை நாம மியன்றநல் வள்ளிக் கும்பேர். [2]கழுத. [3]மோழையே காடி கஞ்சி மொன்னுநீர் மோழைக் கும்பேர். [4]யெழுமை பெற்றி, [5]யன்பாம். [6]யூகமென் றறைதன் முப்பேர், [7]கலக்கஞ் சூழ்தல். [8]ருப்பு.

ஞாழலே [1]பலினி கோங்கு நாறுங்கத் தூசிக் கும்பேர் ;
சாழலே விளையாட் டோடே சாற்றுங்கா டிக்கும் பேரே. (கக)

581 உழுந்துசொற் படிறி னும மோது று மாடத் தின்பேர் ;
கொழுங்கிரி வரையே மவ்வல் ; கோழியே யுறையூ ரோர்புள் ;
கழங்குசே யாட லிந்தி யங்கொடிக் கழலோ ராடல் ;
வழங்கலே நடத்தல் நீட்டல் வருமுறை யுலாவ லாமே. (உ0)

582 உழைக்குத [2]லழுங்கல் வீழ்ந்தே யுழக்குற லுஞற்றே மூப்பேர் ;
சுழற்சியே கறங்க லாழித் தொல்படை யோர்காற் றும்பேர் ;
தெழித்தல்வா யால தட்டல் செப்புறு மோசைக் கும்பேர் ;
[3]ஒழுக்காறென் பதுவ ழிப்பே ரொன்றடைக் கலமு மாமே. (உக)

583 கழுறுவீ றென்னு நாமங் குழவியுந் தூம்புங் காட்டும் ;
கிழவனே யறிஞன் மூத்தோன் மருதத்தோன் றற்கி ளத்தும் ;
தழைதழைக் குறலே பீலிக் குடையெனச் சாற்றற் பாலாம் ;
நுழையெனு நாம நுண்மை நுழைவாயி றனக்கு மாமே. (உஉ)

584 காழென்ப மணியின் கோவை கற்பால் வித்துச் செகு
நீள்கத வின்றாழ் காந்தி நிறத்தமா லை[4]கோ லெண்பேர் ;
கேழ்வியாழ் செவியே கல்வி ; கெழுவென்ப நிறங்கெ ழுஉப்பேர் ;
வேழ்வியே மகநாள் பூசை வேள்விக்குண் டங்கொ டைப்பேர். (உ௩)

585 [5]பாழியே வழிவி லங்கின் படுக்கையூர் பெருமை பாயல்
வாழிய தவத்தோர் வாசம் மலைமுழை யகல மெண்பேர் ;
சூழியே சுனையே வேலை தும்பியின் முகப டாப்பேர் ;
[6]நாழிநா ழிகைய ளக்கும் நாழிவேய் பூரட் டாதி. (உச)

586 ஆழியே கரைகள் வட்டம் ஆர்கலி நேமி வீசும்
பாழிசேர் கரித்து திக்கைந் நுனியெனப் பகாற் பாற்றே ;
தாழியே பாணி காட்பேர் சாகாங் குடங்கர் மூப்பேர் ;
[7]தூழிலே கொலைதோல் செக்கு நுவறிரை கொடிக்கொற் றூன்பேர்.

(பி-ம்.) [1]புலினி. [2]லமுங்கல். [3]ஒழுக்காறே வலிபி னும்ம். [4]தோ லெண்பேர். [5]பாழியே வலிவி லங்கின் படுக்கையே பெருமை பாயல்-வாழிய தவத்தோர் வாசம் மலைமுழை யகல மேயூர்-தாழியாழ் கடலே யாழே சாற்றிடும் பாணி லாரூர்-வீழிலான் மாவின் பாடே விண்ணெனும் பன்மூப் பேரே. [6]பாழிநீர் நிலையி னோடு பட்டமென் றைம்பே ராமே. [7]தூழில்தோல் வணிகன் கோற னுவல்கொற் றூன் றிரைசெக் கியானை.

587 ஊழ்த்தலே நசையி னாமம் உறுபத னழிவே தீர்த்தல்
தாழ்ப்பிலா நினைத்தல் செவ்வி சாற்றிடும் பேரோ ரைந்தாம் ;
வாழ்த்தலே வழுத்த லாசி ; மாழ்குமான் றலைநாள் மாழ்த்தல் ;
ஆழ்த்தலே மடிமை [1]செற்பேர்; அழுக்காறே பொறுமை பொய்யாம்.

588 மாழையே புளிமா வோலை மடமைபொன் னுலோகக் கட்டி
சூழெழில் மடவா ராயம் சொற்றன திரட்சி யெண்பேர் ;
கூழைபொன் னுரகஞ் சேறு கூந்தல்வெம் படையு றுப்பே
தாழுறுஞ் சிறகே பீலி நடுவெனச் சாற்றெண் பேரே. (உஎ)

589 அழுக்கெனு நாம மாமை மலினமு மறையற் பாற்றே ;
மிழற்றலே நிரம்பா மென்சொல் மேவுறு மொழிக்கும் பேசும் ;
இழைத்தலே கூற்ற மாற்ற லியம்புத னினைத்த னாற்பேர் ;
விழுப்புயர் சிறப்புச் சீர்மை விளம்புறு மிடும்பை யாமே. (உஅ)

590 [2]இன்புயர்ந் திடுழ கார வெதுகையிற் சிறந்த செய்யுள்
முன்பெற வொன்றொ ழிந்த மூவொன்ப தாகச் செய்தான்
பன்கிளர் விசிதோட் சூர்மாப் பகவயிற் றாந்தோன் பாதம்
அன்புற வணக்குஞ் செந்தில் அருமருந் தையன் றானே. (உகூ)

[மிகை.] 1. கொழுவென்ப கொழுகொ ழுத்தல் கோழுழுங் கொழுக்கொழுப்பாம்–மழுவென்ப தறிக்குந் தண்ணம் வயங்கெரி யிரும்பு மாமே. 2. விழுவென்ப துப்பால் வீழ்தாம். 3. மழையென்ப குளிர்ச்சி மேகம்; வழக்கர்நீள் வழிவழக்கம். 4. விழுக்கேநீர்க் கூவல் கிழ்மை. 5. பொழில்புவி பெருமை சோலை போற்றுறு மத்த நாட்பேர். 6. நுழிலொரு வல்லி யின்பேர் நவலருங் கொடிக்கொற்றானும். 7. வாழியே வாழ்த்தி சைச்சொல் ; வழித்தோன்றல் சிறுவி மைந்தன். 8. பிழியெனு நாமந் தானே பிழிதலுங் கள்ளு மாமே.

ழகரவேதுகை முற்றும்.

(பி-ம்.) [1]சொற்பேர். [2]இன்புறு நூலோர் சொற்ற வெழுநிகழ் ழகாரத் தற்ற–வன்குய வெதுகைச் செய்யு ளவிற்றமொன் றொழியெண் ணான்காய்த்–தென்புறு கவியிற் சொற்றான் செய்யவேற் குமரன் பொற்றாள்–அன்புற வணங்குஞ் செந்தி லருமருந் தையன் றானே.

ளகரவெதுகை.

591 [1]மாங்குயிற் கிளவித் தீஞ்சொற் பிறைநுதற் கருங்கண் வம்பார்
கோங்கிள முலைப்பொன் தெய்வ குஞ்சரி வள்ளி கொண்கன்
காங்கயன் அன்பர்க் காத்த கடவுள்பொற் பாதம் போற்றி
ஓங்கியற் பெறுள கார வெதுகையின் றொடையோ துற்றும். (க)

592 அளையேவெண் டயிர்வன் மீக மகன்மலை முழைவ ளைப்பேர்;
தளையயாண் மயிர்வி லங்கு [2]தண்பணை சிலம்பே நாற்பேர்;
[3]கிளையேயோர் பண்மூங் கிற்பேர் கேளொடு கிளைத்தற் கும்பேர்;
[4]வளையேகை வளைசங் காழி; வள்ளமோ ரளவை வட்டில். (உ)

593 விளைநரம் புடனுண் டாதல்; விளையுளே கழனி [5]யுள்ளம்;
[6]உளைபுர வியின்மேற் கட்டு மயிர்பிற மயிரு மோதும்;
களைகளை களைத லின்பேர்; களேபர முடல்பி ணப்பேர்;
[7]துளைதுளல் துளைத லின்பேர்; துளங்கல்கம் பித்தல் மின்னல்.()

594 அளமேயொண் செறிவே கூர்மை யகட்டுப்பு [8]விளைநி லப்பேர்;
வளமேபல் பண்டஞ் செவ்வி வளப்பாடே புதுமை தட்டி;
விளமேயோரசைச்சொல்வெள்ளில்; வேளாண்மைமெய்ம்மையீகை;
நளமேதா னுகல்ம டங்கல்; ஞாளிதேன் சுணங்க னும்பேர். (ச)

595 அளவென்ப தினமே யெல்லை; யாளியே பூட்கை சிங்கம்;
களவென்ப களாவி னுமங் கருதுபட் டிமைபி ரண்டாம்;
விளவென்ப வகிலி னோடே விளாவுதல் [9]விளவே மூப்பேர்;
உளவென்ப தியாழின் றண்ட முளுவுகோ லுளவு மாமே. (ரு)

(பி-ம்.) [1]மாங்குயிற் கிளவித் தீஞ்சொல் வல்லிதண் மருங்குற் செவ்வாய்ப்—பூங்கொடி யுமைப யந்த புங்கவ னன்பர்க் காத்த—காங்கயன் விரைசெய் செம்பொற் கமலமென் பாதம் போற்றி—யோங்கெழிற் றிகழ்ள கார வெதுகையின் றொடையோ துற்றும். [2]தடிசிலம்பு யாப்பு முப்பாம். [3]கிளையேமெல் லிசைகிளைத்தல் கேளொடு கிளத்தல் வேயாம். [4]வளையசஞ் சங்கே புற்றும். [5]புள்ளம். [6]உளையென்ப நயவுளைத்தல் ஒண்பரி மயிர்மற் றும்பேர். [7]துளையென்ப துளைதல் தாம்பே சொற்றவேய் துளையே நாற்பேர் [8]விளைவே மூப்பேர். [9]வெள்ளில்.

596 விளரென்ப [1]இளமை வெள்ளில் வெஞ்சினங் கொழுப்பே வெண்மை;
உளர்தலே சிதற லாகும் தடவலு முரைக்கற் பாற்றே;
களர்களர் நிலங்க மூத்துக் கருமையே கொடியே நாற்பேர்;
அளர்நா கஞ்சேற் றின்பேர்; அளாவலே துழாவ லோங்கல். (௬)

597 அளகமே பன்றி முள்ளோ டலர்மழை மடவா ரோதி;
குளகமோர் செய்யு ளின்பேர் மாக்காலென் றிசைவுங் கூறும்;
புளகமே புளகித் திட்டல் புற்புதந் திகழ்கண் ணாடி;
களபமே யானைக் கன்று கமழ்சாந்துங் கலவைக் கும்பேர். (எ)

598 முளரிதீ விறகு நட்ப முண்மாங் கமலங் காடாம்;
விளரியே யிளமை வேட்கை யிருதியாழ் நரம்போ ரோசை;
களரியே [2]மிடறு கோட்டி களர்நிலங் கருமை நாற்பேர்;
வளரியல் பண்பெ ழிற்பேர்; வளைந்தென்ப வளைத்தல் பேசல். ()

599 புளிஞரே கொலைஞர் வேடர்; புள்ளியே கெவுளி ஞண்டாம்;
வெளிலணில் [3]வேழத் தம்பம் வெண்டயிர் கடைத றிப்பேர்;
பளிதமென் பதுகற் பூரம் பல்லமெண் கணக்கும் பன்னும்;
ஒளியிரு சுடரே தீயே யொளிப்பி டம் புகழே நாற்பேர். (௯)

600 அளியேதே னளித்தல்வண்டே யன்புடன் வீர மைம்பேர்;
[4]வெளியேயா காயத் தின்பேர் மிளிர்மயிர்ச் சடையும் பேசும்;
[5]களியேகள் ளுடன்ம யக்கங் களிப்புட னிளமை நாற்பேர்;
நளியேசி தம்நெ ருங்கல் நவிற்றிடும் பெருமை மூப்பேர். (௧0)

601 [6]துளியெனும் பேரே பெண்ணு மைமழைத் துளிய டைத்தல்;
[7]உளியிடங் கணிச்சி யின்பேர்; உள்ளமே முயற்சி நெஞ்சாம்;
இளியிசை யிசித்த லொன்றை யிணுங்குதல் சிரித்தற் கும்பேர்;
நளினியே வாவி யம்பே ருகத்தணங் கயனே நாட்டும். (௧௧)

602 அள்ளலே நிரயஞ் சேறு டள்ளுத லென்வே மூப்பேர்;
விள்ளலே விருபம் விள்ளல்; வெள்ளில்சா ணேவி ளாப்பேர்;
துள்ளலே மசக மாடு சொற்கூத்தோர் செய்யு ளோசை;
பொள்ளென லொலியி னும்ம் விரைவினிற் குறிப்பும் போற்றும். ()

(பி-ம்) [1]இன்மை. [2]மிடரி. [3]வேள்வித் தம்பம். [4]வெளியென்ப விண்வெளிப்பேர். [5]களியென்ப வடிவங் கன்மால் களிப்பிள மைகு ழும்பாம். [6]துளியே பெண் ணுமை மாரித் துளியுடன் படைத்த லும்பேர். [7]உளியேயூ விடங்க ணிச்சி.

603 வாளியா சுகஞ்சுற் றேட்டம் [1]வடிக்கணை சோனை நேமி ;
கோளிபூ வாது காய்க்கு மரங்கொள்வோன் [2]கொழுஞ்சி யென்றும் ;
பாளித மன்னங் கண்ட சருக்கரை குழம்பே பட்டாம் ;
ஓளியா னைக்கூ டப்பே ரொர்ழுங்கென் றும் வழங்க லாமே. (௧௩)

604 வாளமே வட்ட மீர்வாள் மருந்திலோன் றெனவே முப்பேர் ;
கோளகை வட்ட நாமங் கிம்புரிப் பூணுங் கூறும் ;
சூளிகை மணிமா டம்யா னைச்செவி யடியுஞ் சொல்லும் ;
தாளியே யனுட நாளோர் வல்லிதிண் பனையுஞ் சாற்றும். (௧௪)

605 தளிமமே யழகு மெத்தை ; [3]தளிர்த்தலே துளித்த லொன்றல் ;
வளமைமாட் சிமைகொ ழுப்பே வழங்கிய கொடையே முப்பேர் ;
இளமைமா மூத்தல் தன்மை மழவென வியம்ப லாகும் ;
குளவிவேட் டுவன்பச் சைப்பேர் ; கொள்ளலே நினைதல் கோடல்.

606 அள்ளேகூர் வலிபெ றப்பற் றிரும்புடன் செறிவே காதாம் ;
வள்ளேவார் காது கூர்மை வலிவளஞ் செறிவே வாட்பேர் ;
[4]கள்ளேபொய் சோரங் கேண்மை கள்வானோர் மருத வேலி ;
பள்ளேயோர் பாட்டுச் சாதி ; பள்ளமே ஞெள்ளல் சோரம். (௧௬)

607 திளைத்தலே நிறைதல் கூடு மனுபவந் துளைத்தல் [5]செற்றும் ;
இளைத்தலே யிளைப்பி னும மிரங்கலென் றோதற் பாற்றும் ;
கிளைத்தலே [6]நிறைதல் மல்கல் ; கிள்ளையே கிளிவா சிப்பேர் ;
வளைத்தலே கொளல்வ ளாகம்; வளாகங்கோ ணிடந்தொ டற்பேர்.()

608 தொள்ளையே யொளிர்ம ழைக்கோள் துவன்றநா கரவண் டின்பேர் ;
வெள்ளையே வெண்சங் கிராமன் விளர்மேடம் வெண்பா வெள்ளி ;
பிள்ளையே காரிப் புள்ளே வயிரவன் பெறுஞ்சேய் முப்பேர் ;
வள்ளையோர் பாட்டே வள்ளை ; [7]வள்ளியம் வயிர்ம ரீசி. (௧௮)

609 கள்வனே முசுநண் டியானை கருநிறத் தவனே சோரன் ;
ஞொள்கல்சோம் பிளைத்த லச்சங் [8]குறிப்பில யல்து வற்பேர் ;
கொள்கையேயறிவே பண்பாம்; கொளுத்தேமூட் டொடுபு ணர்த்தல்;
தெள்ளுதல் கொழித்த லோர்தல் ; தெள னு டக்தெ றுக்கால். (௧௯)

(பி-ம்.) [1]வளிசோனை மாரி நேமி. [2]கொழுஞ்சி யாலாம். [3]தடுக்குமென் றறையற் பாலாம். [4]கள்ளென்ப பொய்சோ ரங்கள் களவானோர் மருத வேலி. [5]சோறும். [6]மிகுதி. [7]வள்ளிய மினகே யூது குழல்மரக் கலமும் வைக்கும். [8]குறிப்பென றவலற் பாலாம்.

610 வள்ளியே புனையி ழைப்பேர் வல்லிகை [1]வளைவோர் கூத்தாம் ;
பள்ளியே சிற்றூர் கோட்டம் பாயல்கண் படைநீத் தோரூர் ;
நள்ளியோர் வள்ளல் சுற்றம் ஞண்டொரு கொடியே நாற்பேர் ;
ஒள்ளியே செம்பொன் சுக்ர னொள்ளிதென் றோதற் கும்பேர். (௨௦)

611 [2]புள்ளுவம் கனியே வஞ்சம் ; புள்ளவிட் டம்புள் வண்டாம் ;
வெள்ளமே யுவரி யோரெண் மிகுதியென் றோதன் மூப்பேர் ;
நள்ளெனல் நடுவே நட்பாம் ; [3]நாளிகஞ் சரோரம் வள்ளை ;
மள்ளரே குறவர் வீரர் மறுவிலா வுழவர்க் கும்பேர். (௨௧)

612 வாளொளி கயிறு கச்சு வயங்கிய படைநீர் கூர்மை ;
கேள்கிளை கிளத்த லொன்றைக் கேட்டுறல் கல்வி [4]நாற்பேர் ;
நாள்மல ருடுவே காலை நவிற்றொரு நாள்செவ் விப்பேர் ;
நீள்நெடுந் தூரத் தின்பேர் நென்னலு மென்ன லாமே. (௨௨)

613 அளக்கர்கார்த் திகைநாள் சேறு டளங்கடல் புடவி பைம்பேர் ;
விளக்கமே வெள்ளை தீபம் ; விளிவுவெஞ் சினமே சாவாம் ;
துளக்கமே பயம் நடுக்கம் ; சுள்ளியே யனிச்ச மாச்சா ;
இளக்கமே [5]யிளக லின்பே ரீரமு மியம்ப லாமே. (௨௩)

614 அளித்தலே செறித்த லீகை ; ஆளாள்த லாட வற்காம் ;
களித்தலே மந்த மைத்தல் ; [6]களகரே புலையர் வேடர் ;
[7]தளிர்த்தலே துளிர்த்த லொன்றல்; தாளாண்மை [8]நடத்த லூக்கம்;
சுளித்தலே [9]யோசித்த லின்பேர் சொற்றவெஞ் சினமு மாமே. ()

615 வெளிறலே யறிவி லாமை விளர்த்தலும் விளம்பற் பாலாம் ;
[10]ஒளிறலே நிலவல் சீர்த்தி ; ஒளிவட்டக் திகிரி யாடி ;
பிளிறலே [11]களிற்றி னோசை கிண்டலென் றோதல் பேசும் ;
குளிறல்பே ரொலிபெ ழுத்தி னொலியெனக் கூறற் பேரே. (௨௫)

616 வேளையோர் புதர்முக் காலம் ; வெள்ளியே வெண்மை தாரம் ;
[12]பூளையே யிலவின் பஞ்சும் புகலுமோர் பூடும் போற்றும் ;

(பி-ம்.) [1]வளையோர். [2]புள்ளுவ னளியே வேடன் பொருந்தவஞ் சனையே யென்ப. [3]நாளகஞ் சகோரம். [4]கேண்மை. [5]பிரங்க லீரம். [6]களக்கரே. [7]தளிர்த் தலே. [8]பூக்கஞ் சேறல். [9]யொசித்தல் சிதம். [10]ஒளிர்தலே. [11]யெழுத்தி னோசை. [12]பூளையே யிலவோர் பூடு.

சூளையே கணிகை சூளை ; சுளகேமுற் றில்வி சாகம் ;
நாளமுட் டுளையி னுமங் கமல[1]நா ளத்தும் நாட்டும். (உ௬)

617 தெள்ளலே பள்ள மென்மை நீள்வீதி மிகுதி பூசல்
ஒள்ளிய சோர்வி னோடே யுடன்பட லொலியே யெண்பேர் ;
எள்ளலே யிகழ்ச்சி யெண்ண லிலங்கிய நகையே மூப்பேர் ;
உள்ளலே நினைவே யுள்ளான் ; உளைவுளைத் தல்வி ரக்கம். (உஎ)

618 குளிர்பணி மழுவே நண்டே குடமுழாக் கவண்கு ளிர்ச்சி
யொளிரிலை மூக்கிர் வாள்மீ னொழுங்குட னிருத்த லெண்பேர் ;
நளிர்குளிர் வெறுப்பே மல்கல் நண்டுடன் பெருமை யைம்பேர் ;
களிறுநீள் சுறவு பன்றி கறையடி யத்த நாட்பேர். (உஅ)

619 மீளியே யிளமை வீரன் மேன்மகன் பெருமை பாலை
யாளிறை யிரங்கல் கூற்றோ டாற்றலென் றிசைத்த லேழ்பேர் ;
கூளியே யிளமை மண்ணை குறளையே றிபமே சுற்றம்
நீளிய தொகுதி குற்றம் நிகழ்த்துபே ரிருநான் காமே. (உ௯)

620 களமேபோர்க் களங் கழுத்து களாவிடங் கறுப்பில் லாள்நெல்
லளவில விடம்ப ரப்பென் றறையும்பே ரிருநான் கேயாம் ;
குளமேயூ ராட்ம் வெல்லங் குட்டமுத் திராடம் நெற்றி ;
தளமேயூ விதழே தாழி [2]சாந்து டன் பொருப டைப்பேர். (௩0)

621 இளையேமைப் புயல்திண் பூமி யிளமையங் காடி வேலி
களையெயில் பசுக்கி டங்கு காவற்கா டோரெண் பேராம் ;
கொளையேபாட் டோரி சைப்பேர் ; கொள்ளமாற் றுடன்சே ரூகும்;
[3]முளைவேயங் குரமே பிள்ளை ; [4]முள்ளேநுட் பம்வார் சூலம். (௩க)

622 காள்மே யூதுங் கொம்பு கருமைமூ விலைவேல் நஞ்சங்
[5]கோளில்பூ வுடனே யெட்டி மரமெனக் கூறு றேபேர் ;
தாளரி குறுந்தாள் பாதஞ் சாற்றுமுத் தியோக முப்பேர் ;
பீளிளங் கதிர்க ருப்பம் பேசுறு மிளமை யாமே. (௩உ)

(பி-ம்.) [1]வல் லிக்கு. [2]சாந்துமுப் பரிசை தானை. [3]முளையேசே யங்கு ரப்பேர் மூன்றிலுந் தறியு மாமே. [4]முள்ளென்ப நுட்பஞ் சூல மூண்டக மெனவும் பாற்றே. [5]கேளமே நிகழ்பூ வெட்டி மரக்கமு நிகழ்த்தே ழேபேர்.

623 கோள்[1]குலை யிடையூ றென்பான் கோள்வலி குணம்பொய் தீங்கே
நாளொடு கோடல் கொட்டாட் டெனநவில் நாமம் பத்தாம்;
தோள்புயஞ் செங்கை நாமம்; துளும்பலே திமிறல் துள்ளல்;
வேள்மத வேள்கு லாலன் வெறியாட்டாளன்செவ் வேளாம். (௬௩)

624 விறலுயர்ந் திடும்ள கார வெதுகையின் விரிக்குஞ் செய்யுட்
குறைவிலெண் ணுன்க தென்ன வுலகினிற் கூறச் செய்தான்
மறைகணுன் கேத்துஞ் செவ்வேள் மலரடி சென்னி சூட்டும்
அறவர்வாழ் செந்தின் மேவு மருமருந் தையன் றானே. (௬௪)

[மிகை.] 1. உளதென்ப துடைத்தே கேண்மை; உள்ளானோர் விலானோர் வீயாம். 2. குளியமே புலியுண் டைப்பேர். 3. ஈளையே யிசையோர் நோயாம். 4. இளம்பிடி வடவை பெண்ணும். 5. புளித்தலே சுவைசெ றித்தல். 6. காளையே றிளைபா லைக்கோன்; காளிந்த மரவ மேலம். 7. கேளிதெங் கரிவை யாடல்; கேளனே கிளையோன் சேரன். 8. துளவுதண் டுழாய்வ ருத்தம்; துழாய்பூதி தோம ரப்பேர். 9. வள்ளுவே புலாலி ஞமம் வாளுறை யெனவும் பேசும். 10. அளவரே யுப்ப ளத்தோ ரளப்பவ ரெனவும் பாற்றே. 11. வாளா கேளாப் பேச்சின்மை. 12. பிளவையே நோய்பி ளப்பு.

ளகரவெதுகை முற்றும்.

றகரவெதுகை.

625 [2]குரங்கிமென் குழவி பூத்த கொழுஞ்சடை வள்ள றந்த
பரம்பரன் றிணிதோட் கந்தன் பனிமலர்க் கடவு ளுன்கு
சிரந்துளங் கிடப்பு டைத்த சேவகன் றாளைப் போற்றி
யுரங்கிளர்ந் திடும்ற கார வெதுகையாப் பினையு ரைப்பாம். (௧)

626 நறவமே யனிச்சந் தேறல் ஞாழல்குங் குமந்த ளிர்ப்பேர்;
புறவமோ ரூர்புட் காடே முல்லையி னிலனும் போற்றும்;
துறவுயோ கங்கூட் டப்பேர்; துற்கையே பூரஞ் சூலி;
பிறவெனு நசமங் [3]கட்டும் பெட்டியும் வசிபு மாமே. (௨)

(பி-ம்.) [1]கொலை. [2]கிலங்கிளர் வலிசி றந்த நீனிறச் சூரன் றிண்டோட்—குலங்கிளர் வரையை வாட்டுங் கொழுஞ்சுடர்க் கதிர்வேற் கந்தன்—நலங்கிளர் கமலப் பாத நாவினு னவிற்றி யேத்தித்—துலங்கிய றகாரத் துற்ற வெதுகையின் றொடையைச் சொல்வாம். [3]. காட்டும்.

627 அறவரே யுரியோர் யோகர் ; ஆற்பத நீழல் தேனீ ;
குறவரே வேடர் குன்றோர் ; குறிகோசங் குறிப்பி லக்காம் ;
மறவரே வயவர் வீரர் குறவர்க்கும் வழுத்தற் பாற்றே ;
பறவைபோழ் திறகே பக்கி ; பாறலே றுடனே யோட்டம். (ங)

628 உறவியே யூற்றெ றும்போ டுயிருலைக் களங்கி ளைப்பேர் ;
பிறவினை யதுவே காமம் பாவமும் பேசற் பாற்றே ;
உறழ்விடை யீடே காலம் உவமானம் பகைபு ணர்ப்பாம் ;
இறவைபுட் டிற்பே ரேணி ; எறிதலே செகுத்தல் வீசல். (ச)

629 குறளிபே யெட்டாண் டிற்பெண் குறள்பூதம் வாம னப்பேர் ;
பிறழ்வவிர் தற்பே ரோடே பெயர்தலென் றிருபேர் பேசும் ;
குறடுதிண் பலகை திண்ணை கொல்பற் றுங் கருவி யொன்றும் ;
கறடுசெம் பொன்பேர் தாளிற் காட்டுறு பாடு மாமே. (ரு)

630 விறல்வலி பெருமை கொற்றம் ; வெறுப்புவேண் டாமை கோபம் ;
[1]அறலரி மணல்வி ழாவே யான்றநீர்த் திரையே நீராம் ;
இறலொரு மீனிற் றற்பேர் ; [2]இறுலாற் றேன்கூ டென்ப ;
மறல்பகை சமர்பி ணக்கு ; மறவிசா தல்தூற் றப்பேர். (சு)

631 இறும்பூதே யதிச யந்தூ றெழின்மலை தகைமை காடாம் ;
[3]மறங்கொலை தோலா வீரம் வன்பிணக் கொடுசி னப்பேர் ;
அறந்துற வறமே யில்லா றமேகை யறமே முப்பேர் ;
முறம்புகல் விசாக முற்றில் ; முறுவலே சிரித்தல் பல்லாம். (எ)

632 [4]ஆறேசெல் மார்க்கம் ஓண மறைந்திடு நதியே முப்பேர் ;
சாறேகள் ளொடும ரத்தின் றூழ்குலை விழவுஞ் செப்பும் ;
சேறேதித் திப்புக் கும்பி [5]திகழ்சாரங் கள்ளே நாற்பேர் ;
ஏறேசெல் வம்மாற் சாலம் [6]எருதுடன் முதனு ளாமே. (அ)

633 ஊறேதீ மைப்பேர் தீண்ட லூறுகொலை யிடையூ றென்ப ;
பாறேநா வாய்நி மித்தம் பருந்துநற் றிலதங் காற்றும் ;

(பி-ம்.) [1]அறலேநீர் நீர்த்தி ரைப்பே ரரிமணல் பரிவு மாகும். [2]ஈரலு மாகு மென்ப. [3]மறஞ்சினம் பிணக்குக் கூற்று வன்கொலை கொலாமை வீரம். [4]ஆறென்ப செல்வ மோண மதர்நதி யறையோ டெண்ணும். [5]திருவிழாக் கள்ளே சாரம். [6]எருதிடி முதனு ளாம்பேர்.

நாறேநெல் நாற்றே நாறல்; [1]நாற்றமே நாறல் தோன்றல்;
தாறேவிற் குதையே மட்டே தாழ்மரக் குலைமுட் கோற்பேர். (௯)

634 குறைநவை நிரப்புக் கொள்ளை குடியிறை குறைத லைம்பேர்;
பொறைமலை துறுகற் பூமி பொறைபாரஞ் சுமைக ருப்பம்;
கறையுர லிறையி றுத்தல் கறுப்புட னிரத்தங் குற்றம்;
மறைமறை கேட கப்பேர் வழங்கிர சியமு மாமே. (௧௦)

635 அறைதிரை முழைஞ்சே யோத லடித்தல்சிற் றில்ப றைப்பேர்;
நிறைதுலாம் நீர்ச்சால் பாசி நிலைமையே யறிவே யைம்பேர்;
சிறையரண் பக்கம் புள்ளின் சிறகுவே றிடமே நாற்பேர்;
முறைகுணங் கோச மேயூழ் முறைமையென் றோதற் பேரே. (௧௧)

636 எற்றலே குத்தல் வெட்ட லெய்துயிர்க் கொலைசெய் தற்பேர்;
குற்றலே குறல்ப றித்தல் நெரித்தலுங் கூறற் பேரே;
ஒற்றலே யுடுத்தல் மொத்தல் குறிக்கொள லுணர்தல் நீங்கல்;
[2]முற்றலே வளைதல் நாம மூப்புக்காழ்க் கோட லும்பேர். (௧௨)

637 ஒற்றேமெய் யெழுத்தொற் றின்பேர்; [3]ஒற்றுத லறித லொற்றல்;
பற்றேயன் பொடுபற் றற்பேர்; பற்றுளே தொழில்வி னைப்பேர்;
செற்றேபொன் னலர்வெற் றிப்பேர் [4]செறிவெனு மூப்பேர் செப்பும்;
விற்றேவிற் பத்தி விள்ளல்; [5]வெறுப்பென்ப நெருங்கல் சோம்பாம்.

638 நெற்றியே படைவ குப்பும் நிகழ்நுதற் பேரும் வைக்கும்;
கொற்றியே துர்க்கை வேந்தன் கோவிளங் கன்றுங் கூறும்;
பெற்றியே யடுக்கு தற்பேர் பிறழ்நற் குணமி ரண்டாம்;
முற்றிலே விசாக நாட்பேர் முறமெனுங் கருவியாமே. (௧௪)

639 அற்றென்ப பிறித சைச்சொ லருவினை யாற்றன் முப்பேர்;
புற்றென்ப தெழுத்துச் சென்னி வன்மீகப் பேரும் போற்றும்;
எற்றென்ப திரக்க [6]மொத்த லெறிதலெத் தன்மைத் தென்றல்;
மற்றென்ப வினைமாற் றோடே யசைநிலைப் பேரும் வைக்கும். (௧௫)

(பி-ம்.) [1]நாறல்தோன் றுதலே நாற்றம். [2]முற்றல்காழ்க் கோடல் மூப்பு முடிவுஞ்ழ் போதல் கோபம். [3]ஒத்தத. [4]செறிவுடன் கெடுத லூற்பேர். [5]வெறுப் பேவேண் டாமை கோபம். [6]மொற்ற,

640 உறையுளூர்ப் பொதுவே நாடே யுயர்மனை சயனம் நாற்பேர்;
நறையெனு நாமந் தேறல் நறுநாற்ற [1]மூண்கள் ளேயாம்;
[2]பறைமுழைஞ் சுடனே மேளம் பகர்தல்புட் சிறகே [3]நாற்பேர்;
நிறைதலே கமமுண் ணற்பேர்; நிறமென்ப மருமங் காந்தி. (கரு)

641 உறுகணோய் பயத்தி னும மிடிதுன்ப மோது நாற்பேர்;
குறுகலே யுறல்பற் றிட்டல்; கூறலே விற்றல் பேசல்;
துறுகலே கருப்பம் பாரஞ் சுருமைகற் பாறை நாற்பேர்;
[4]மறுகுரை மறுகே வீதி; மறலியே மயக்கங் கூற்றும். (கஎ)

642 வறுமையே மிடிமை துக்கம் வழூத்துறும் நுண்மை முப்பேர்;
குறுமையே யற்பம் பாவங் [5]குறுகலென் றேதற் கும்பேர்;
சிறுமையே மிடிநோய் நுட்பம்; தேற்றமுட் [6]குறிப்பே ஞானம்;
உறுவனே முனிசி னன்பேர்; ஒற்கலே [7]யின்மை தேய்தல். (கஅ)

643 அறுவாய்கார்த் திகை[8]நா டிங்கள்; [9]அறுகேபுல் யாளி சிங்கம்;
இறவேதா னிறவி றக்கம்; ஏற்றமே மிகுதி வெற்றி;
தொறுவேயான் குழவி நாமம் சொல் [10]விட்டி லடிமை முப்பேர்;
செறுவேகோ பம்வ யற்பேர்; சிறுவரை யிலேசம் பொற்றை. (கசு)

644 ஈறேயுப் பளங்க டைப்பேர்; இறுதிபெய் கடையு யர்ச்சி;
நூறேயெண் ணொலிபொ டித்தல்; நொறில்வினு [11]னுடக்க மும்பேர்;
சோறேவெண் மூரல் நாமம் பரணிநா ளினிமை சொல்லும்;
கூறேபங் கிடுதல் மாற்றம்; கொறியேமே டங்கொ றித்தல். (உ0)

645 அற்பமே சிறுமை நாயாம்; ஆற்றூற்றல் தலைக்க டைப்பேர்;
கற்பமே சுவர்க்கம் வெய்ய கமலனு ளதுவும் வைகுதும்;
சற்பமே விரைவு பாம்பு வரையாடு தானே முப்பேர்;
பொற்பெனும் பேர்வ னப்புப் பொலிவோடொப் பனையென் றுமே. ()

646 அற்புத மிரக்கச் சொல்லு மதிசயந் தானே செப்பும்;
விற்புவெற் றிப்பேர் வெம்போர் [12]வெருவல்செற் றுடன்பெ ருக்கம்;

(பி-ம்) [1]மூண்கள். [2]பறைதிரை முழைஞ்சே பெற்றும் பறையோதல் புள்ளின் றூவி. [3]நாட்பேர். [4]மறுகுநீள் தெரும றுக்கம். [5]குறுகலு மழகு மாகும். [6]குறிப்பேர். [7]யிளமை. [8]நா மங்கள். [9]அறுகுபுல் யாளி சிங்கம் ஆனையே புலியெ னும்பேர். [10]வீட்டி னடிமை. [11]நடக்க மும்பேர். [12]வெருவலே பெருக்க மல்கல்.

கற்பருள் ளுயர்த்த மேடை கடிமதி ளுடன்கற் பாகும்;
அற்பசி முதனு டிங்கள்; ஆற்பெபே ரொலிசி ரித்தல். (உஉ)

647 உற்கையின் வீழுங் கொள்ளி யுடுவெனு மிரண்டே நாமம்;
சற்கரை கரும்பின் கட்டி சாற்றிடு நெருக்க மும்பேர்;
பொற்கணி யியக்கர் கோமான் பூடொன்றே டாங்கைக் கும்பேர்;
பிற்கெனு நாமந் தானே மழையுடன் பின்னு மாமே. (உங)

648 [1]ஆற்பர வந்து ளிப்பேர் ஆகவந் தூளிக் கும்பேர்;
மாற்கமே சமையம் வீதி மறுதலை [2]வழிச மூலம்;
வேற்கான் வெறியாட் டாளன் மிளிரிலை வேற்பி ரானும்;
காற்பாச மிழைப ருத்தி; கறிமிள குடன்க டித்தல். (உச)

649 [3]வறுகலங் கானல் யாழாம்; மறுமறுந் தல்குற் றப்பேர்;
அறுபத மூலும் வண்டோ டறைகையாந் தகரைக் கும்பேர்;
தறுகணுள் ளடங்கி லாமை மறஞ்செயிர்த் தற்பேர் சாற்றும்;
சிறுமூலம் பூண்டு காமன் றிப்பிலி மூப்பே ராமே. (உரு)

650 உறுப்பெபா லைத்தி றப்பண் ணுடனங்க மிருதி வையம்;
இறப்பெசா மிகுதி போக்காம்; [4]எறும்வலி யுடன்றண் டப்பேர்;
பிறப்பேபேர் தல்வெற் றிப்பேர் பிறந்திடல் செறிவே நாற்பேர்;
இறுத்தல்பேச் சொடித்தல் சோம்போ டிறைபிறுத் திடலே தங்கல்.

651 அற்கமே நீர்க்காக் கைப்பே ரலர்பொது ளெருக்கும் பேசும்;
வற்கமே குதிரை வாயின் வடமூக்கில் வழுவில் கூட்டம்;
சிற்பியே யுவச்சர் ஓவர்; [5]திறன்றிறங் கார ணப்பேர்;
துற்றலே நெருங்கல் துய்த்தல்; துறையே நுதல்சு முற்கால். (உஎ)

652 பறழ்தவழ் சாதி கன்று; பற்றான் புடையோர் தெவ்வர்;
புறமிட முதுகு வீரம்; பொற்றைகான் சிறுகுன் றேயாம்;
பிறழ்தலே நடுக்கம் வேறு பெயர்தலோ டொளிவி டற்பேர்;
புறணியே குறிஞ்சி முல்லை நிலனொடு புறப்பே தோலாம். (உஅ)

653 வெறுக்கைபொன் [6]கனவேசெல்வம்; மேற்கோளேசனிபன்பூட்கை;
